B.COM
Year – II
Semester – III
Paper - I

# Tamil - III

**Course Coordinator**
**Dr. K. Kavitha**
**Assistant Professor**


## Centre for Distance and Online Education

श्रीचन्द्रशेखरेन्द्रसरस्वतीविश्वमहाविद्यालयः

**Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya**

Deemed to be University u/s 3 of UGC Act 1956 - Accredited with 'A' grade by NAAC

**Enathur, Kanchipuram 631561.**

Sponsored and run by Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust

மூன்றாம் - பருவம் தமிழ்த்தாள் - III பாடத்திட்டம்

I Unit-1 1:திருக்குறள் - ஐந்து அதிகாரங்கள்

1. அன்புடைமை
2. கல்வி
3. கல்லாமை
4. கேள்வி
5. அறிவுடைமை

சம்பந்தர் தேவாரப் பதிகம் ஒன்று மட்டும்.

1. மண்ணில் நல்ல வண்ணம்... குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழி பாசுரப்பகுதி.

2. திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்தலும் போதுமானது எனல் - ஊன் ஏறு செல்வத்து... முதல் மன்னிய தன் சாரல் பக்தர்களே வரை

II Unit. மொழித்திறன்

1. நேர்க்காணல் - நூல் மொழித்திறன் பூவண்ணன்
2. கலைச்சொல்

III unit -இலக்கிய வரலாறு

-பல்லவர் கால இலக்கியங்களின் வரலாறு

IV Unit தமிழ் இலக்கிய வரலாறு ஸ்ரீ சந்திரன் பக்: 102 முதல் 131 வரை (சைவஇ வைணவ பக்தி இலக்கியம்)

V-Unit- உரைநடை

1..மு.வ.வின் நல்வாழ்வு நூலில் 6 முதல் 10 தலைப்பு வரை உள்ள ஐந்து மட்டும் நூல் பக்கம் 54 முதல் 96 வரை

5: தமிழ்ப்பண்பாடு

தமிழ்ப்பண்பாடு அறிமுகம் என்ற அளவில் சுமார் 45 பக்கம் அளவுள்ள செய்திகள் - மு. பொன்னுசாமி ரூ த. கனகராசு ஆசிரியர்களின் தொகுப்புஇ (பக்க எண்.103 முதல் 149 வரை)

1. தமிழ் இலக்கிய வரலாறு - ஜெயம்இ ஜனதா பதிப்பகம்.

2. மொழித்திறன் - முனைவர் மு.வ. பாரிநிலையம்.

நல்வாழ்வு - முனைவர் மு.வ. முல்லை நிலையம

அலகு1

1. **திருக்குறள் - ஒரு அறிமுகம்**

ஒரு வாழ்வியல் நூல். மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம் பொருள் இன்பம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் நூல்.

இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் வள்ளுவ மரபைச்சேர்ந்தவர் என்றும் மயிலாப்பூரில் வசித்தவர் என்றும் தெரிகிறது இவருடைய மனைவியார் வாசுகி அம்மையார். கற்பியலுக்கு மிகச்சிறந்த இலக்கணமாக விளங்கியவர். திருவள்ளுவரை நாயனார், தேவர், தெய்வப்புலவர், பெருநாவலர், பொய்யில் புலவர் என்றும் சில சிறப்புப்பெயர்களால் அழைப்பர். திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி வாயுறை வாழ்த்து, தமிழ் மறை திருவள்ளுவம் என்ற வேறுபெயர்கள் அதற்குரியவை. பதினென்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் "முப்பால்" என்னும் பெயரோடு இந்நூல் விளங்குகின்றது.

"அறம், பொருள், இன்பம்" ஆகிய மூன்று பால்களும் கொண்டமையால் "முப்பால்" எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய ஆகிய இவை ஒவ்வொன்றும் "இயல்" என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துபாடல்களைத் தன்னுள் அடக்கியது.

இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. இவ்வகை வெண்பாக்களால் ஆகிய அக்காலத்திய முதல் நூலும் ஒரே நூலும் இதுதான்.

குறள் வெண்பாக்களால் ஆனமையால் "குறள்" என்றும் "திருக்குறள்" என்றும் இது பெயர் பெற்றது.

திருக்குறளில் 133 அதிகாரமும் அதிகாரத்துக்கு 10 குறளும் மொத்தம் 1330 குறளும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு குறளும் இரண்டு அடிகளையும் ஏழு சீரும் கொண்ட வெண்பாவாகும்.

இந்நூலில் பெரும் பிரிவு பால் எனவும் சிறு பிரிவு இயல் எனவும் அதனினும் சிறியது அதிகாரம் என்று வகுக்க பெற்றுள்ளது.

அறத்துப்பால்-38அதிகாரங்கள்

பொருட்பால்-70அதிகாரங்கள்

காமத்துப்பால்-25 அதிகாரங்கள்

திருக்குறளுக்கு பலர் உரை எழுதியுள்ளதால்இ காலத்துக்கும் ஆசிரியரின் அறிவுக்கும் தகுந்தார் போல் இயலை மாற்றி அமைத்துள்ளனர்.

- **அறத்துப்பால்**

  பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
- **பொருட்பால்**

  அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல் படையில், நட்பியல், குடியியல்
- **காமத்துப்பால்**

  களவியல், கற்பியல்

திருக்குறளை மொத்தம் 12000 சொற்களில் வள்ளுவர் பாடியுள்ளார். ஆனால் இவற்றில் ஐம்பதுக்கும் குறைவான வடசொற்களே உள்ளன.

"அகரம்முதலவெழுத்தெல்லாம்ஆதி
பகவன்முதற்றேயுலகு...."

என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய "அ" வில் ஆரம்பித்து 1330 ஆம் குறளாகிய

"ஊடுதல்காமத்திற்கின்பம்அதற்கின்பம்இ
கூடிமுயங்கப்பெறின்"

என்று தமிழ் மொழியின் கடைசி எழுத்தாகிய "ன்" னுடன் முடித்திருக்கிறார்.

பழங்காலத்தில் இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர். பொருளியல் வாழ்வு அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்கலன் மனத்துக்கண் மாசிலன் ஆதலே அனைத்து அறம் அறத்தால் வருவதே இன்பம். அறவழியில் நின்று பொருள் ஈட்டிஇ அதனைக்கொண்டு இன்பவாழ்வு வாழ வேண்டும். அவ்வாறு உலகமாந்தரும் இன்பமுறச் செய்யவேண்டும். பொருளியலாகிய பொதுவாழ்வுக்கும் இன்ப இயலாகிய தனிவாழ்வுக்கும் அடிப்படை அறம்தான் என்பது திருக்குறளின் மொத்தமானநோக்கு.

திருக்குறள் வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் உணர்த்தும் அறநூல். பழமைக்கு பழமையும் இன்று புதுமைக்குப் புதுமையாகவும் திகழ்கிறது. அதனால் இது காலத்தை வென்ற நூல் . இந்நூலை சான்றோர்கள் பலரும் போற்றியுள்ளனர்.

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

- இடைக்காடர்

அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

- அவ்வையார்

"இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்
மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்"

### 1.1.1 திருக்குறளின் சிறப்புகள் -

- திருக்குறளில் மொத்தம் உள்ள சொற்கள்-14இ000.
- தமிழில் மொத்தமுள்ள 247 எழுத்துக்களில் 37 எழுத்துக்கள் திருக்குறளில் பயன்படுத்தப்படவில்லை .
- திருக்குறள் நூலில் இரண்டு வகை மரங்கள் மட்டுமே உண்மையாக காட்டப்பட்டுள்ளது. அவை பனை மரம் மற்றும் மூங்கில் மரம்.

- திருக்குறளில் எண் 9 மட்டும் எங்கும் பயன்படுத்தவில்லை. அதே சமயம் எண் 7 எட்டு குரல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ் மொழியின் உயிர் எழுத்துக்களில் 'ஔ' என்கிற எழுத்து மட்டும் திருக்குறளில் இடம்பெறவில்லை.
- பழ வகைகளில் நெருஞ்சிப்பழம் மட்டுமே திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலர் வகைகளில் அனிச்சம்இ குவளை ஆகிய இரு மலர்கள் குறித்து மட்டுமே திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை 42இ194 ஆகும்.
- உலகின் 80 மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்திய பழங்குடிகளில் நரிக்குறவர்களின் மொழியான வக்போலி மொழியிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- திருக்குறள் முதன்முதலாக 1812 ஆம் ஆண்டு புத்தகமாக அச்சிடப்பட்டது. 1840 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் திருக்குறள் முதன்முதலாக அச்சிடப்பட்டது.
- தமிழ் மொழியின் தலை சிறந்த நூலான திருக்குறளில் தமிழ் என்கிற சொல் எங்கேயும் பயன்படுத்தப்படவில்லை என்பது அதிசயமாகும்.
- திருக்குறள் "அ"கரத்தில் தொடங்கி "ன"கரத்தில் முடிகிறது. திருக்குறளில் பற்று என்கிற சொல் ஒரே குரலில் ஆறு முறை வருகிறது.
- திருக்குறளின் மூல நூலை முதன் முதலில் தஞ்சை ஞானப்பிரகாசர் என்பவர் அச்சிட்டார்.
- திருக்குறள் நூலில் எழுபது கோடி என்ற சொல் ஓர் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கோடி என்கிற சொல் 7 இடங்களில் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது.
- திருக்குறளில் இருமுறை வருகின்ற ஒரு அதிகாரம் குறிப்பு அறிதல் எனும் அதிகாரமாகும்.
- "ளீ" மற்றும் "ங" என்ற எழுத்துக்கள் திருக்குறளில் ஓர் இடத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.
- "குன்றிமணி" என்கிற விதை மட்டும் தான் திருக்குறளில் இடம் பெற்ற ஒரே விதை
- மணக்குடவர் என்பவர் தான் முதன் முதலில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்
- திருக்குறளில் "னி" என்கிற எழுத்து மொத்தம் 1705 முறை பயன்படுத்தப்பட்டுள்ளன.
- திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி. யு. போப். திருக்குறள் நூலை இதுவரை மொத்தம் 40 நபர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர்.
- திருக்குறளில் உள்ள எல்லா குரல்களும் இரண்டு அடிகள் மட்டுமே கொண்டவை.
- அதே போல எல்லா குரல்களும் முதல் அடி 4 சீர்களும் இரண்டாம் அடி 3 சீர்களும் கொண்டவையாக உள்ளது.
- திருக்குறளில் உள்ள மொத்த குறள்களின் எண்ணிக்கை 1330

### 1.1.3 அன்புடைமை

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.** - **குறள் .1**

**அன்பிலார்எல்லாம்தமக்குரியர்அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு. குறள்.2**

**அன்போடுஇயைந்தவழக்கென்பஆருயிர்க்கு**
**என்போடுஇயைந்ததொடர்பு. குறள்.3**

.

**அன்புஈனும்ஆர்வம்உடைமைஅதுஈனும்**
**நண்பு என்னும் நாடாச் சிறப்பு. குறள்.4**
**அன்புற்றுஅமர்ந்தவழக்கென்பவையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு. குறள்.5**

**அறத்திற்கேஅன்புசார்பென்பஅறியார்**
**மறத்திற்கும் அ:.தே துணை. குறள்.6**

**என்பிலதனைவெயில்போலக்காயுமே**
**அன்பிலதனைஅறம். குறள்.7**

**அன்பகத்தில்லாஉயிர்வாழ்க்கைவன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று. குறள்.8**

**புறத்துறுப்பெல்லாம்எவன்செய்யும்யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. குறள்.9**

**அன்பின்வழியதுஉயிர்நிலைஅ:.திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு. குறள்.10**

குறள் விளக்கம்:

1. அன்பிற்கும் கூடப் பிறர் அறியாமல் தன்னை மூடி வைக்கும் கதவு உண்டோ? இல்லை. தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் துன்பத்தைக் காணும்போது வடியும் கண்ணீரே அன்பு உள்ளத்தைக் காட்டி விடும்.
2. அன்பு இல்லாதவர் எல்லாவற்றாலும் தமக்கே உரிமை உடையவராய் இருப்பர். அன்புள்ளவரோ பொருளால் மட்டும் அன்று; உடம்பாலும் பிறர்க்கு உரியவராய் இருப்பர்.

3. உயிரும் உடலும்போல் அன்பும் செயலும் இணைந்திருப்பதே உயர்ந்த பொருத்தமாகும்.
4 குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு, உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பை உண்டாக்கும். அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும்.

5.இவ்வுலகில் வாழ்ந்து இன்பம் அடைந்தவர் பெறும் சிறப்பே அன்பு கொண்டு இல்வாழ்க்கை நடத்தியதன் பயன்தான் என்று அறிந்தோர் கூறுவர்.

6. அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவோர் அறியாதவரே; மறத்திற்கும் கூட அதுவே காரணம் ஆகும்

7. எலும்பு இல்லாத புழுவை வெயில் காய்ந்து கொள்வது போல அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காய்ந்து கொல்லும்.

8.மனத்தில் அன்பு இல்லாமல் குடும்பத்தோடு வாழும் வாழ்க்கை, வறண்ட பாலை நிலத்தில் காய்ந்து சுக்காகிப் போன மரம் மீண்டும் இலை விடுவது போலாம்.

9.குடும்பத்திற்கு அக உறுப்பாகிய அன்பு இல்லாவதர்களுக்கு வெளி உறுப்பாக விளங்கும் இடம், பொருள், ஏவல் என்பன என்ன பயனைத் தரும்?

10.அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.

## 1.1.4 கல்வி

கல்வியானது அறிவு மற்றும் திறமை ஆகியவற்றை அளித்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவதோடு மட்டுமல்லாது, பண்பாடு, நற்பண்புகள்போன்றவற்றை அளித்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்கிறது. இது சமுதாய நுட்பத் தகைமை ஏற்படுத்துகிறது. **கல்வி** என்பது கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** - **குறள்:1**
**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு..** - **குறள்:2**
**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்.** - **குறள்:.3**
**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.** - **குறள்:.4**
**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்`**
**கடையரே கல்லா தவர்.** - **குறள்.5**
**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.** - **குறள்.6**
**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.** - **குறள்.7**
**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.** - **குறள்.8**
**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.** - **குறள்.9**
**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** - **குறள்.10**

குறள் விளக்கம்:-

1. பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும் கற்ற பிறகு அதன்படி நடக்கவேண்டும்.
2. எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.
3. கண்ணில்லாவிடினும் அவர் கற்றவராக இருப்பின் கண்ணுடையவராகவே கருதப்படுவார் கல்லாதவருக்குக் கண் இருப்பினும் அது புண் என்றே கருதப்படும்.
4. மகிழ்ச்சி பொங்கிடச் சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும் போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும்.
5. அறிவுடையார் முன் அறிவில்லாதவர் போல் தாழ்ந்து நின்று, மேலும் கற்றுக்கொள்பவர்களின் ஆர்வத்தைக் கற்றுக் கொள்ளாதவர்கள் கடைநிலை மாந்தராக கருதப்படுவார்கள்
6. தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்
7. கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ?.
8. ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்
9. தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.
10. ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

## கல்லாமை

**அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல். - குறள்.1**
**கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று. - குறள்.2**
**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின். - குறள்.3**
**கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார். - குறள்.4**
**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும். - குறள்.5**
**உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர். - குறள்.6**
**.நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று. - குறள்.7**
**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு. - குறள்.8**

**மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு. - குறள்.9**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர். - குறள்.10**

குறள் விளக்கம்:-

1. அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கல்லாமல், ஒருவன் அவையின் கண் ஒரு பொருளைப் பற்றிக் கூறுதல் என்பது சூதாடும் களத்தை வகுத்துக் கொள்ளாமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது
2. கல்வி அறிவில்லாதவன் கற்றோர் அவையில் பேச விரும்புதல், இரண்டு தனங்களும் இல்லாத பெண், பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.
3. கற்றவர் உள்ள சபையில் யாதொன்றையும் பேசாதிருப்பின், கல்லாதவரும் மிக நல்லவராகக் கொள்ளப் படுவார்.
4. நூல்களைக் கல்லாதவனது அறிவு மிக நன்றாகவிருப்பினும், அவனைக் கல்வியில் சிறந்தோன் என்று அறிவுடையோர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.
5. கல்லாத ஒருவன் தன்னைத்தான் மதித்துக் கொள்ளும் மதிப்பு கற்றவன் அவனைக் கண்டு உரையாட, அப்பேச்சினால் கெடும்
6. கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.
7. நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டு ஆராயும் அறிவில்லாதவனது அழகின் சிறப்பு, மண்ணால் மாண்புறச் செய்யப்பட்ட பாவையின் அழகு போன்றதாகும்.
8. கற்றவரிடத்தில் உண்டான வறுமையைவிடக் கல்லாதவனிடத்தில் உண்டான செல்வம் மிக்க துன்பத்தைக் கொடுக்கும்
9. கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்விக் கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.
10. விலங்கோடு நோக்க மக்கள் எவ்வளவு மேன்மையுடையவரோ, அவ்வளவு தாழ்ந்தவர் நூலைக் கற்றவரோடு நோக்கக் கல்லாதவர்

## 1.1.5 <u>கேள்வி</u>

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்து ளெல்லாந் தலை. - குறள்.1**

**செவுக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும். - குறள்.2**

**செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**
**ஆன்றாரோ டொப்பர் நிலத்து. - குறள்.3**

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை. - குறள்.4**

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்க முடையார்வாய்ச் சொல். - குறள்.5**

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும். - குறள்:6**

**பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்**
**தீண்டிய கேள்வி யவர். - குறள்:7**

**கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி. - குறள்:8**
**நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது. - குறள்:9**

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என். - குறள்:10**

**குறள் விளக்கம்:-**

1. ஒருவனுக்குச் சிறப்புடைய செல்வமானது கேள்வியால் எல்லாப் பொருளையும் கேட்டறியும் செல்வமே. அச்செல்வமே பிற செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலைமையானது
2. காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது(அதற்க்கு துணையாக உடலை ஒப்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.
3. செவி உணவாகிய கேள்வியைப் பெற்றிருப்பவர் இப்பூமியில் வாழ்பவரே என்றாலும், வேள்வித் தீயில் கொடுக்கப்படும் நெய் முதலிய உணவைப் பெறும் விண்ணுலகத் தேவர்க்குச் சமமாவர்.
4. நூல்களைக் கற்காவிட்டாலும், கற்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால், அது நடை தளர்ந்தவனுக்கு உதவிடும் ஊன்றுகோலைப் போலத் துணையாக அமையும்.
5. ஒழுக்கமுடையவரின் வாய்ச்சொல், வழுக்கும் தன்மையுடைய நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் போலத் துணை செய்யும்.
6. எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும், கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.
7. நுண்ணிதாக ஆராய்ந்து அறிந்து, கேள்வி ஞானத்தால் நிறைந்தவர், பிழைபட உணர்ந்தபோதும், அறிவற்ற சொற்களைச் சொல்லமாட்டார்.
8. நல்லோர் அறிவுரைகளைக் கேட்டலாகிய கேள்வியால் துளைக்கப்படாத காதுகள், கேட்குந் தன்மையுடையனவாய் இருப்பினும் செவிட்டுத் தன்மையினவாகும்.

9. நுட்பமான பொருள்களைக் கேட்டறிந்தவர் அல்லாத மற்றவர், வணக்கமானச் சொற்களைப் பேசும் வாயினை உடையவராக முடியாது.
10. செவியால் நுகரப்படும் சுவையுணர்வை அறியாது, வாயினால் உண்ணப்படும் உணவின் சுவையை மட்டும் அறியும் மக்கள் இறந்தாலும், உயிர் வாழ்ந்தாலும் என்ன பயன்?

## 1.1.6 அறிவுடைமை

**அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண். - குறள்:1**

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு. - குறள்:2**

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு. - குறள்:3**

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு. - குறள்:4**

**உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்ல தறிவு. - குறள்:5**

**எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துறைவது தறிவு. - குறள்:6**

**அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர். - குறள்:7**

**அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில். - குறள்:8**

**எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய். - குறள்:9**

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர். - குறள்:10**

குறள் விளக்கம்:

1. ஒருவனுக்கு அழிவு வராமல் காத்துகொள்ளும் கருவி அறிவாகும். அது மட்டுமின்றிப் பகைவர் உள்புகுந்து அழிக்க முடியாத கோட்டையுமாகும்.
2. மனத்தை சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.
3. எப்பொருளை எத்தகையோர் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மை பொருளைக் காண்பதுதான் அறிவாகும்.

4. தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமானப் பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.
5. உலகை நட்பாக்கிக் கொள்வது அறிவு; நட்பின் ஆரம்பத்தில் பெரிதாக மகிழ்வதும், நாளடைவில் வாடுவதும் இல்லாது. எப்போதும் ஒரே சீராக இருப்பது அறிவு
6. உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.
7. அறிவுடையோர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார், அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.
8. அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும், அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையோர் செயலாகும்
9. பின் வரக்கூடியதை முன்னதாக அறிந்து, காக்க வல்ல அறிவுடையோர்க்கு, அவர் நடுங்கும்படி வருவதாகிய துன்பம் எதுவும் இல்லை.
10. அறிவுடையவர் (வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர், அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

ll

## 1.2 திருக்கழுமலம்

### 1.2.1 திருஞானசம்பந்தர்

**பிறப்பு:**

சோழ நாட்டில் பிரமபுரம், வேணுபுரம், காழி என்ற பன்னிரண்டு பெயர்களை உடைய சீர்காழியில் சிவபாத இருதயாருக்கும், பகவதியம்மாளுக்கும் மகனாக கி.பி. 637 ஆம் ஆண்டு சம்பந்தர் பிறந்தார்.

**ஞானப்பால் உண்டல்:**

ஞானசம்பந்தர் மூன்று வயது குழந்தையாக இருக்கும் போது அவரது தந்தையார் சம்பந்தரைத் தோணியப்பர் ஆலயக்குளக்கரையில் அமரவைத்து விட்டுக் குளிக்கச் சென்றார். நீருக்குள் மூழ்கி தந்தை மந்திர உரு செய்தார். நெடுநேரமாகியும் தந்தை வராதலால் சம்பந்தர் அழுதார். அப்பொழுது திருத்தோணி நாதர் உமாதேவியுடன் காளை வாகனத்தில் எழுந்தருளினார். உமாதேவியார் தன் கையில் வைத்திருந்த அமுதப்பாலை ஞானசம்பந்தருக்குக் கொடுத்தார். குளித்துவிட்டு வந்த சிவபாதர் தன் குழந்தையின் வாயில் பால் ஒழுகுவதைப் பார்த்த போது, யார் கொடுத்தது என்று வினவினார். ஞானசம்பந்தர் தோணியப்பரைக் காட்டினார். அப்பொழுது ஞானசம்பந்தர் “தோடுடைய செவியென்” என்ற நட்டபாடை பண்ணில் அமைந்த முதற் பதிகத்தைப் பாடியருளினார்.

**பொற்றாளம் பெறுதல்:**

உமையம்மை அளித்த ஞானப்பாலை உண்ட பிறகு சம்பந்தர் இறைவன் மீது தலந்தோறும் சென்று பதிகங்களைப் பாடிட புறப்பட்டார். திருக்கோலக்காதலம் வந்தார். கையால் தாளமிட்டுக் கொண்டு பாடினார். கைநோக தாளமிடுவதைக் கண்ட திருக்கோலக்கா இறைவன் சம்பந்தருக்குப் பொற்றாளம் கொடுத்தார். அந்த தாளத்திற்கு உமையம்மை ஓசைக் கொடுத்தார். இதனால் திருக்கோலக்கா இறைவன் திருத்தாளமுடையார் என்றும், அம்மை ஓசைக்கொடுத்த நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் நட்பையும் பெற்றார். இவரோடு தலங்கள் பலவற்றிற்குச் சென்று அவ்வவ் தல இறைவனைப் பாடிப் புகழ்ந்தார். திருநெல்வாயில் என்ற தலத்திற்குச் சென்ற பொழுது இறைவன் அங்குள்ள அந்தணர்கள் கனவில் தோன்றி, ஞானசம்பந்தன் இங்கு வந்து கொண்டிருக்கின்றார். அவருக்கு முத்துச்சிவிகை, குடைச்சின்னம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு அவரை அழைத்து வருமாறு பணித்தார். அவர்களும் இவற்றைச் சம்பந்தருக்கு வழங்கினர்.

**உபநயனச்சடங்கு:**

திருஞானசம்பந்தருக்கு ஏழாவது வயது தொடங்கிற்று. இவரது தந்தை சம்பந்தருக்கு உபநயனச் சடங்கு செய்ய ஏற்பாடு செய்தார். உபநயனநாளில் மறையோர்கள் பல வேதங்களை ஓதி, முப்புரி நூலை அணிவித்தனர். அப்பொழுது மறையோர்கள் தமக்கு ஏற்பட்ட சந்தேகத்தைச் சம்பந்தரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர். மந்திரம் தோன்றுவதற்குரிய மூலமந்திரம் எது என்று மறையோர்கள் வினவிய பொழுது "மந்திர நான் மறையாகி வானவர்" என்ற திருப்பாட்டின் மூலம் திருவைந்தெழுத்தே மூலமந்திரம் எனச் சிறப்பாக எடுத்துரைத்தார். முயலகன் நோய் தீர்த்தல்: ஞானசம்பந்தர் நாவுக்கரசருடன் பல தலங்களுக்கும் சென்று இறைவனைப் பாடிப் போற்றினார். மழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள திருப்பாச்சிலாச்சிராமத்தை அடைந்த போது அங்குள்ள கொல்லி மழவனின் புதல்வி முயலகன் என்னும் கொடிய நோயால் வருந்தி, கோவில் சந்நிதியிலே உணர்வின்றிக் கிடந்தாள். இதனை அரிந்த சம்பந்தர், "துணிவளர் திங்கள் துளங்கி விளங்க" என்று தொடங்கும் பதிகத்தைப்பாடி அப்பெண்ணின் நோயை அகற்றினார்.

**யாழ்மூரி பாடியமை:**

ஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் பல தலங்களுக்கும் சென்று இறைவனைப் பாடினார். சம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாயார் பிறந்த தலமான தருமபுரத்தையடைந்தார். அப்பொழுது திருநீலகண்டரின் உறவினர்கள் தங்கள் யாழ் வாசிப்பினால் தான் ஞானசம்பந்தரின் பாடல்கள் சிறக்கின்றன என்று கூறினர். இதைக் கேட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தரை வணங்கி, தாங்கள் யாழில் வாசிக்க இயலாத ஒரு பதிகத்தைப் பாடி அருள வேண்டும் என்று கூறினார் சம்பந்தர். சம்பந்தர் "மாதர்மடப்பிடியும் மட அன்னமு மன்னதோர்" என்று தொடங்கும் பதிகம் பாடினார். அப்பாடலை யாழில் வாசிக்க இயலாமல் போகவே யாழை முறிக்க முற்பட்ட போது, சம்பந்தர் அதனைத்தடுத்து இது இறைவனின் செயல் என்று கூறினார்.

**வாசித்தீரக் காசு பெறுதல்:**

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலைச் சென்ற போது, அங்கு கடும் பஞ்சம் நிலவியது. அப்பொழுது திருநாவுக்கரசருக்கு உடனுக்குடன் இறைவன்

பொற்காசுகளை வழங்கி வந்தார். ஆனால் சம்பந்தருக்குப்படிக்காசு வழங்குவதில் காலம் தாழ்த்தி வந்தார். அதனை நினைத்து சம்பந்தர் குறிஞ்சிப்பண்ணில் அமைந்த "வாசி தீரவே காசு நல்குவீர்" என்ற திருப்பதிகம் பாடி நற்காசு பெற்று அடியவர்களுக்கு அமுதளித்தார். மேலும், சம்பந்தருக்கு இறைவன் திருவீழிமிழலைக் கோயில் விமானத்திலே திருத்தோணிப் புரத்தைக் காட்டியருளினார். இன்றும் இவ்விமானத்தில் இக்காட்சி காணப்படுகின்றது.

**அற்புத நிகழ்வுகள்:**

ஞானசம்பந்தர் பாம்பு தீண்டப்பெற்று இறந்த வணிகனை "சடையா யெனுமால் சரண் நீ யெனுமால்" என்னும் பதிகம் பாடி எழுப்பிவித்தார். திருமறைக்காட்டில் மறைகளால் மூடப்பட்டிருந்த மறைக்கதவத்தைத் திருநாவுக்கரசர் திறக்கவும், சம்பந்தர் மூடவும் பாடினர். இத்தலத்தில் பியந்தைக்காந்தாரப் பண்ணில் அமைந்த கோளறு பதிகம் பாடினார். மங்கையற்கரசியாரின் அழைப்பின் பேரில் மதுரைக்குச் சென்றார். ஆலவாய் இறைவனைப் பணிந்தார். வாதுக்கு வந்த சமணர்களோடு அனல்வாதம் புனல்வாதம் செய்து வெற்றி பெற்றார். கூன்பாண்டியனின் வெப்பு நோயை நீக்கினார். மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு என்று தொடங்கும் காந்தாரப் பண்ணில் அமைந்த திருநீற்றுப்பதிகம் பாடினார். திருக்கொள்ளம்புதூரில் "கொட்டமே கமழும் கொள்ளம் புதூர் என்று தொடங்கும் காந்தாரப் பஞ்சமம் பண்ணமைந்த பதிகம் பாடி ஓடம் செலுத்தினார். திருப்பூந்துருத்தியில் தங்கியிருந்த திருநாவுக்கரசரைச் சந்தித்தார். பின்பு தொண்டை நாடு சென்றார். திருவோத்தூரை அடைந்தார். அங்கு ஒரு சிவனடியாரின் பனைமரங்கள் அனைத்தும் ஆண்பனையாக இருந்தன. இதனை, "பூந்தோர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி" எனத் தொடங்கும் பழந்தக்கராகம் பண்ணமைந்த பதிகம் பாடி பெண்பனையாக்கினார். மயிலாப்பூரில் இறந்து சாம்பலாக விளங்கிய பூம்பாவையை "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை" எனத் தொடங்கும் சீகாமரப் பண் பதிகம் பாடி பெண்ணாக எழுப்பிவித்தார். இறுதியில் திருப்பெருமணம் என்னும் கோயிலை அடைந்தார். இக்கோயில் ஆச்சாள்புரம் என்னும் தலத்தில் உள்ளது. இங்கு இவருக்கு வைகாசி மாதம் மூலநாளில் திருமணம் நடைபெற்றது.

"கல்லூர் பெருமணம் வேண்டா கழுமலம்" எனத் தொடங்கும் அந்தாளிக்குறிஞ்சிப்பண் படிகம் பாடி திருமணத்திற்கு வந்திருந்த அனைவருடன் சோதியில் கலந்தார். மூன்று வயதில் பாடத்தொடங்கி 16 வயது வரை தலங்கள் தோறும் சென்று திருநெறியத் தமிழ் பாடினார். தோடுடைய செவியன் எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணில் பாடத் தொடங்கி கல்லூர்ப் பெருமணம் எனத்தொடங்கும் அந்தாளிக்குறிஞ்சி பண் பதிகம் வரை பாடியுள்ளர். இவர் பாடியவற்றுள் இன்று வரை 386 பதிகங்கள் கிடைத்துள்ளன. இவை மூன்று திருமுறைகளாகப் பகுக்கப் பெற்றுள்ளன. இவை பண்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

### 1.2.1 திருக்கழுமலம்

கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர். இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

**சுவாமிபெயர் - பிரமபுரீசர்.**
**தேவியார் - திருநிலைநாயகி.**

**மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை**
**கண்ணினல் லஃதுறங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே** -1

உயிர்கள் இப்பூவுலகில் வளமோடு இன்பவாழ்வு வாழலாம். தினந்தோறும் இறைவனை நினைத்து வழிபட யாதொரு குறையுமிலாத முக்தியின்பமும் பெறலாம். இத்தகைய பேற்றினை அளிக்கும் பொருட்டே கண்ணுக்கினிய நல்ல வளத்தையுடைய கழுமலம் என்னும் ஊரில் பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்

**போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்**
**தாதையார் முனிவுறத் தான்எனை யாண்டவன்**
**காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்**
**பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே -2**

பொற்கிண்ணத்தில் ஞானம் பெருகும் அடிசிலை இறைவனின் ஆணைப்படி உமாதேவியார் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஊட்ட, பால் அறாவாயராக விளங்கிய அவரைப் பார்த்து "யார் தந்த அடிசிலை உண்டனை?" என்று தந்தையார் கோபித்து வினவ இறைவர் தம் திருக்காட்சியினை நல்கி என்னை ஆட்கொண்டார். அத்தகைய பெருமையுடைய சிவபெருமான் காதிற் குழையோடும் பேதையாகிய உமாதேவியோடும் கழுமலம் என்னும் வளநகரில் வீற்றிருந்தருளுகின்றார்.

**தொண்டனை செய்தொழில் துயரறுத் துய்யலாம்**
**வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்**
**கண்டுணை நெற்றியான் கழுமல வளநகர்ப்**
**பெண்டுணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே - 3**

தொன்றுதொட்டு உயிர்களைப் பற்றி வருகின்ற வினையால் உண்டாகும் துன்பத்தை நீக்கி உய்விக்கும் பொருட்டு, வண்டுகள் மொய்க்கின்ற தேனையுடைய கொன்றை மலர்களைச் சடைமுடியில் அணிந்தும், நெற்றியில் ஒரு கண் கொண்டும், கழுமலம் என்னும் வளநகரில் உமாதேவியை உடனாகக் கொண்டும் பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்

**அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே**
**நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடும்**
**கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்**
**பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே - 4**

நெஞ்சமே! வினையால் இத்துன்பம் வந்தது என்று எண்ணித் தளர்ச்சியுற்றுச்

சோம்பியிருத்தலை ஒழிப்பாயாக. (இறைவனை வழிபட்டு இத்துன்பத்திலிருந்து விடுபடவேண்டும் என்பது குறிப்பு). ஒளிமிக்க வளையல்கள் முன்கைகளில் விளங்க, சிறந்த ஆபரணங்களை அணிந்த உமாதேவியோடு,

**அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே**
**விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்**
**கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்**
**பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே - 5**

ஊழிக்காலத்தில் உயர்கின்ற கழுமல வளநகர் எனினும் ஆம்.

**மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல**
**கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்**
**சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்**
**பெற்றெனை யாளுடைப் பெருந்தகை யிருந்ததே - 6**

நெஞ்சமே! இறைவனைத் தவிர மற்றோர் பற்று எதுவுமில்லை. நான்கு வேதங்களையும் நன்கு கற்று, கற்றதன்படி ஒழுகுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற திருக்கழுமலம் என்னும் வளநகரில் சிற்றிடையும், பெரிய அல்குலும் உடைய, அழகிய ஆபரணங்கள் அணிந்த உமாதேவியோடு, என்னை ஆட்கொண்ட பெருந்தகையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

**குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே**
**நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடும்**
**கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்**
**பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை யிருந்ததே - 7**

நெஞ்சமே! மனக்குறை கொண்டு மொழியும் சொற்களை விடுவாயாக. நிறைந்த வளையல்களை முன்கையில் அணிந்து, சிறந்த ஆபரணங்களை அணிந்த உமாதேவியோடு, இருண்ட சோலைகளையுடைய அழகிய திருக்கழுமலம் என்னும் வளநகரில், பிறைச்சந்திரனைச் சடைமுடியில் சூடிப் பெருந்தகையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

**அரக்கனார் அருவரை யெடுத்தவன் அலறிட**
**நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே**
**கருக்குவா ளருள்செய்தான் கழுமல வளநகர்ப்**
**பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்ததே - 8**

பெருமையுடைய கயிலைமலையை எடுத்த அரக்கனான இராவணன் அலறும்படி தம் காற்பெருவிரலை ஊன்றி இறைவர் அம்மலையின்கீழ் அவனை நெருக்கினார். பின் அவன்தன் தவறுணர்ந்து நீண்ட யாழை எடுத்து இன்னிசையோடு பாட, கூர்மையான வாளை அருளினார். திருக்கழுமலம் என்னும் வள நகரில் உயிர்கட்கு மிக்க இன்னருள் செய்யும் உமாதேவியோடு பெருந்தகையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்

**நெடியவன் பிரமனும் நினைப்பரி தாய்அவர்**
**அடியொடு முடியறி யாஅழல் உருவினன்**
**கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்**
**பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே - 9**

நினைந்துருகும் தன்மையில்லாத திருமாலும், பிரமனும் அடிமுடி அறியாவண்ணம் சிவபெருமான் அழலுருவாய் ஓங்கி நின்றனன். நறுமணம் கமழும் சோலைகளை உடைய திருக்கழுமலம் என்னும் வளநகரில் பெண்யானையின் நடைபோன்று விளங்கும் நடையை உடைய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்

**தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்**
**ஆருறு சொற்களைந் தடியிணை அடைந்துய்ம்மின்**
**காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்**
**பேரறத் தாளொடும் பெருந்தகை யிருந்ததே - 10**

மாலை போன்று, பாயை விரும்பி ஆடையாக அணிந்துள்ள சமணர்களும், புத்தர்களும், இறையுண்மையை எடுத்துரைக்காது, தமக்குப் பொருந்தியவாறு கூறுதலால், அவற்றை விடுத்து, இறைவனின் திருவடிகளை வழிபட்டு உய்வீர்களாக. பசுமைவாய்ந்த அழகிய சோலைகள் வளர்ந்துள்ள திருக்கழுமலம் என்னும் வளநகரில் பேரறத்தாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

**கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்**
**பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை**
**அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்**
**விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே** - 11

மாலை போன்று, பாயை விரும்பி ஆடையாக அணிந்துள்ள சமணர்களும், புத்தர்களும், இறையுண்மையை எடுத்துரைக்காது, தமக்குப் பொருந்தியவாறு கூறுதலால், அவற்றை விடுத்து, இறைவனின் திருவடிகளை வழிபட்டு உய்வீர்களாக. பசுமைவாய்ந்த அழகிய சோலைகள் வளர்ந்துள்ள திருக்கழுமலம் என்னும் வளநகரில் பேரறத்தாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்

## 1.3 குலசேகர ஆழ்வார்

குலசேகர ஆழ்வார்

- இவர் சேரநாட்டுத்திருவஞ்சிக் களத்தில் தோன்றியவர்.
- இவர் எழுதிய பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும்.
- அவை மொத்தம் 105 பாடல்கள் ஆகும்.
- இவர் கௌத்துவமணியின்அம்சமாகப்பிறந்தவர்

- இவர் வடமொழியில் “முகுந்த மாலை” என்னும் நூலினைஎழுதியுள்ளார்
- இவர் இராமனுக்கு தாலாட்டு பாடியவர்
- ஒவ்வொரு வைணவத்திருக்கோயிலிலும் இறைவனின் கருவறைக்கு முன் உள்ள படி “குலசேகரன் படி” என்ற பெயரில் வழங்கப்படும்
- திருவரங்கத்தின் மூன்றாம் மதிலை இவர் கட்டினார்

**வேறு பெயர்கள்**:

- கொல்லிக் காவலன்
- கூடல் நாயகன்
- கோழிக்கோ

**படைப்பு**:

- பெருமாள் திருமொழி

**©\ ùTôÚ[ôL Uô± Y¯TÓRp:**

ÏXúNLW BrYôo RmùUnY¯ Y¯Tôh¥u êXm §ÚUôûX YQe¡ AÚsùT\ ØVt£ ùNnYúRôÓ ¨tLôUp. ùTÚUô°u A¥VôoLû[ YQe¡ Y¯TÓ¡\ôo, CqY¯Tôh¥p U]¨û\Ü AûPVôR ÏXúNLWo. Cû\Yu úLô«p ùLôiÓs[ §ÚúYeLPUûX«p HúRàm JÚ ùTôÚ[ôL ©\kÕ Cû\Yu AÚû[ ùT\ ØVt£ úUtùLôs¡\ôo, CRû]. PôdPo, Ñ, úYeLPWôUu

ùTÚUôàdÏ Sôm A¥ûUVôL ¨uß ØÝYÕUôLf NWi AûPkÕ. AYàdÏ AYu ØLUXof£dLôLd ûLeLoVm ùNnÕ YôZúYiÓm Gu¡u\]o, BrYôoLs G]d áß¡\ôo.

**“RÚÕVm RPôúVp Eu NWQpXôp NW¦pûX”**[78]

Gu¡\ôo,

CYtû\ CYoRm TôÑWeL°u Yô«XôL A±VXôm, Cq®V-p ÏXúNLWôrYôo YôZ ØtTÓYûR ©uYÚm Øû\L[ôL ©¬dLXôm,

1, ×RWôn ©\jRp

2, ùNiTLUWUôn ©\jRp

3, Á]ôL ©\jRp

4, ÏÚLôLl ©\jRp

5, Tôû\VôL ©\jRp

6, LôhPô\ôn ©\jRp

7, TôûRVôL ©\jRp

8, ReL Yh¥XôL ©\jRp

9, T¥L[ôLl ©\jRp

10, §ÚúYeLP UûX«p HúRàm JÚ ùTôÚ[ôL ©\jRp,

CqYôß ÏXúNLW BrYôo ©\ùTôÚ[ôL Uô± Y¯TP ØVt£ ùNnRûX TjÕ YûLL[ôLd áßYûR AYoRm TôÑWeL°u Yô«XôL ®¬YôL C² LôQXôm,

## 1.3.2திருமலையில் குலசேகர ஆழ்வார் வேண்டிய பிறவி

ஆழ்வார்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் குலசேகர ஆழ்வார். அரசாட்சியை துறந்து பெருமாணயே சரணாகதி என்று இருந்த அவர், ஒரு சமயம் திருமலை வந்து

திருவேங் கடனை தரிசித்து,. அவனது அழகில் மெய்மறந்து இனி இங்கேயே ஏதாவது பிறவி எடுத்து அவனை நித்தமும் தரிசிக்க வேண்டும் என்று பல் வேறு பிறவியினை வேண்டுகிறார். அதனை பார்ப்போம்.

***1. நாரையாக (கொக்கு)***

**ஊனேறு செல்வத்து உடற் பிறவி யான் வேண்டேன்**
**ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்**
**கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்து**
**கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே:**

உடம்பை வளர்க்கும் மனித உடம்பெடுத்து பிறத்தலை நான் விரும்பவில்லை.
திருவேங்கட மலையில் திருக்கோனேரி என்ற புஷ்கரணியில் குருகாய் (நாரயாய்)
பிறத்தல் வேண்டும்.

அது சரி ! கொக்காய் பிறந்தால் விரட்டப்படலாம், திருவேங்கடத்தை விட்டு
போக நேரிடும். உன்னை விட்டு வெகு தூரம் சென்றிடுவேனே..
எனவே அந்த பிறவி வேண்டாம். அடுத்து

***2. மீனாக பிறக்க :***

**ஆழியாத செல்வத்து அரம்பையர் சூழ்ந்திருக்கும் விண்ணும், மண் ஆளும் செல்வமும் விரும்பவில்லை. திருவேங்கடத்து சுனையில் மீனாகப் பிறக்கும் பேறு மட்டுமே விரும்புகிறேன் என்பர் குலசேகராழ்வார்**

**ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ**
**வான் ஆளும் செல்வமும் மண்அரசம் யான்வேண்டேன்**
**தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனையில்**
**மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே:**

தேவ லோகத்து இந்திரனாகவும் , பூ லோக அரசனாகவும் இருந்து அனுபவிக்கும் சுகத்தை விருப்பில்லை,
உன் மலையில் உள்ள நீர்சுனையில் ஒரு மீனாக பிறந்து உன்னை பிரியாமல் வாழ விரும்புகிறேன்.

அது சரி! மீனாக பிறந்தாலும் பெருமாளே ! உன் அருகில் வர இயலாது.
நீர்சுனை வற்றி போனால் மீனாய் எடுத்த பிறவி வீணாய் போகும், எனவே இந்த பிறவியும் வேண்டாம். அடுத்து ?

*2. தங்க வட்டில் :*

**பிரமனும் இந்திரனும் நெருங்க புகமுடியாத வைகுந்தமாகிய திருமலையின் திருவாசலில் மின் வளையம் போல சக்கரமுடைய திருமலையான் வாய்நீர் உமிழ்கின்ற தங்க வட்டிலைக் கையிலேந்துபவனாவேன் என்று குலசேகரர் விரும்புகிறார்.**

**பின்இட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்**
**துன்னிட்டுப் புகல்அரிய வைகுந்த நீள்வாசல்**
**மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்**
**பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறு வேனாவேனே:**

சிவன், பிரம்மா, தேவந்திரர் என உன்னை காண வந்து நிற்க நீருமிழ்கின்ற தங்க விட்டிலை ஏந்தி உள்ளே புகும் பாக்கியம் தரும் விட்டிலாக பிறக்க வேண்டும்.

பொன் வட்டிலை பிடித்தால் உன் முகத்தை தான் பார்க்க முடியும். திருவடிகள் அல்லவா அடியார்க்கு பேறு. திருவடிகளை பார்க்க முடியாது போகும். எனவே இப் பிறவியும் வேண்டாம். பின்பு எது வேண்டும்?

*3. செண்பகமாய்:*

**திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் பெருமாளே, உன் இரு திருவடிகளைக் கண்டு இன்புற, இன்னிசைப் பாடும் வண்டுகள் தங்கும் செண்பகப் பூவாய் இருக்கும் சிறப்பினை அடைவேன் என்று விரும்புகிறார்.**

**ஒண்பவள வேலை உலவு தன் பாற்கடலுள்**
**கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு**
**பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து**
**செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே:**

பாடல்கள் பாடி வண்டு கூட்டங்கள் திரியும் வேங்கட மலையில் செண்பக மரமாய் ஆவேனோ! தினமும் உன் திருவடிக்கு செண்பக மலர் கொடுத்து திருவடியில் நிலைப்பேனோ.

ஹே! மாதவா ! செண்பக மரமாய் நிற்கும் பேறு புண்ணியம்
செய்தவர்க்கே கிடைக்குமோ என்னவோ?
எனவே அதுவும் வேண்டாம் . அப்புறம் எப் பிறவி?

*5. புதராய் பிறக்க:*

மதங்கொண்ட யானையின்மீது அமர்ந்து அரசாளும் பதவியும் செல்வமும் எனக்கு வேண்டாம். பெருமாளின் திருமலையிலே கம்பமாய் நிற்கும்படியான பேறு ஒன்றே போதும் என்பர் குலசேகரர்

கம்ப மதயானைக் கழுத்தகத்தின்மேல் இருந்து

இன்பு அமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலை மேல்
தம்பமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே:

எல்லா உலகுக்கும் தலைவனான பெருமானுடைய அழகிய
இத் திருமலையில் தம்பமாக (புதராய்) நிற்கும்படியான
பாக்கியத்தை கொடுப்பாயாக!

முள் செடியாய் நின்றால் எனக்கு மட்டுமே பயன்.
பெருமானுக்கும் , அடியாருக்கோ எந்த பயனும்
இல்லை எனவே இதுவும் வேண்டாம். சரி பிறகு...

*4. சிகரமாக பிறத்தல்:*

மின்னல் போன்ற நுண் இடையுடைய ஊர்வசி, மேனகை ஆடல், பாடலை விரும்பவில்லை. தென்ன என பாடும் வண்டினங்கள் வாழும் திருப்பதியில் தவத்தையுடையவனாக இருக்கவே விரும்புகிறேன் என்பர் குலசேகராழ்வார்.

மின் அனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்
அன்னவர்தம் பாடலொடும் ஆடல்அவை ஆதரியேன்
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடா அருந்தவத் தன் ஆவேனே:

இங்கு இருக்கும் பல சிகரங்களுக்குள் ஒரு சிகரமாக நின்றால்
இறைவன் இருக்கும் இடம் இது என்று அடியவர்க்கு உணர்த்தும் பேறு கிடைக்கும்.

ஹே! நாராயணா !பொன்மயமான இம் மலையில் சிகரமாய்
நின்றாலும் யாருக்கும் பயனின்றி போகலாம்.
எனவே அதுவும் வேண்டாம். சரி அப்புறம்

*5. காட்டாற்றாய் பிறக்க:*

வானை ஆளும் நிலவுபோல வெண்கொற்ற குடையின்கீழ் ஆளும் மன்னனாகி பெறும் செல்வம் வேண்டா. வேங்கடமலைமேல் கானாறாய் பாயும் கருத்தை உடையவனாய் இருக்கவே விரும்புகிறேன் என்பர் குலசேகரர்

.

வானாறும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வ அறியேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்கட மலை மேல்
கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே:

திருமலையில் நான் காட்டாற்றாய் இருந்தால் உன் திருமுழுக்குக்கும்,
அடியாரின் தாகம் தீர்க்கவும் ஆவேன். எனவே இப்பிறவியை வேண்டுகிறேன்.

மாதவா! நான் கானாறாய் நின்றாலும் உன் கோவிலை சுற்றி அடர்ந்த காடுகள் இருப்பதால் உன் அடியார்கள் உன் கோவிலை அடைய முடியாமல் போகலாம். அதற்கு நான் தடையாய் ஆகி விடுவேன். அப்படியான இப் பிறவியும் வேண்டாம்.

*8. வழியாக கிடக்கின்ற நிலை:*

**சிவன், பிரமன், இந்திரன் முதலியோர் செய்யும் யாகங்களை ஏற்றுக் கொண்டவன் எம்பெருமான். அத்தகையவன் வீற்றிருக்கும் வேங்கடமலையில் வழியாய் இருக்க விரும்புவதாகக் குலசேகரர் கூறுவர்.**

**பிறைஏறு சடையானும் பிரமனும் இந்திரனும்**
**முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான் மறைஆனான்**
**வெறியார் தண்சோலைத் திருவேங்கட மலை மேல்**
**நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே**

உன் கோவிலை சுற்றி காடுகள் இருப்பதால், அடியாயர்கள் வர முடியாமல் போகலாம். அவர்களுக்கு பாதை வேண்டுமே? எனவே அவர்களுக்கு வழியாக ஆவேன்.

ஹே பரந்தாமா ! உன் கோவிலுக்கு வருவதற்கு பல வழி இருக்கலாம். நான் வழியாக கிடந்தாலும்,
அடியார்கள் அதை பயன் படுத்தாமல் போனால்..... அவர்கள் திருவடி என்
மேல் படாமல் போய்விடும். எனவே வழியாகவும் பிறக்க வேண்டாம்.

*9. படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேன்*

**தீவினைகளைச் செடிபோல அழித்து அடியார்களைக் காக்கும் பெருமாளே, உன் கோயிலின் வாயிலில் தொண்டர்கள் தேவர்கள், அணங்குகள் ஏறி, இறங்கும் படியாய் இருந்து உன் பவளத் திரு இதழ்களைக் காண்பேனே என்பர் குலசேகரர்.**

**செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே**
**நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்**
**படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே**

உன்னை காண வரும் அடியார்களின் திருவடிகள் என் மீது
பட வேண்டுமாயின் உன் திருக்கோவிலின் படியாக இருக்க வேண்டும்.

திருமலை ஆண்டவன் சன்னிதியில் ஆண்டவனின் பவளவாயை எக்காலும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும், அதற்காக தன்னை அவர் கோயில் வாசற்படியாகவே வைத்துக் கொள்ள வேண்டு மென்றும் குலசேகரர் மனமுருக வேண்டிக்கொண்டார்.

*10. எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேன்*

உம்பர் உலகு ஆண்டு ஒருகுடைக் கீழ் ஊர்வசி தன்
அம்பொற் கலை அயல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயான் திருவேங்கடம் என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே:

நான் ஏன் இப்படி இது ஆவேன்; அது ஆவேன் என்று உன்னை வேண்டிக் கொண்டிருக்கிறேன்.
அடியவனுக்கு அழகு தன் தலைவன் தன்னை எந்த நிலையில் வைத்தாலும் அதில் மகிழ்ந்திருந்து தலைவனுக்குத் தொண்டு செய்வதே. அதனால் நீ என்னை எந்த நிலையில் வைத்தாலும் அதற்கிணங்க ஏதேனும் ஒன்றாய் நாரையாய், மீனாய், பணியாளாய், செண்பகமாய், கம்பமாய், தவத்தோனாய், கானாறாய், வழியாய், படியாய் திருவேங்கட மலை மேல் நான் ஆவேன்.என இப்படியாக திருமாலின் மீது கொண்ட பக்தியால் இந்த பத்து பாசுரங்களைக் குலசேகர ஆழ்வார் மனமுருகி பாடியுள்ளார்.
இது தான் பக்தியின் வெளிப்பாடு.

## 2.0 -நேர்காணலின் அமைப்பு

நேர்காண்பவர் சிறப்புத் திறமைகள் பெற்றிருக்க வேண்டும். ‘ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்’ என்ற பழமொழிக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.

“நேர்காணலை வெற்றியுடன் நடத்தி முடிக்க, **திட்டமிடுதல், இணங்க வைத்தல், தெளிவாக அறிதல், தொடர் முயற்சி** ஆகிய நான்கும் தேவை” என்று ஜேம்ஸ் எம். நீல் **(James M.Neal)**, சூசான்னே எஸ். பிரவுன் **(Suzanne S. Brown)** என்பவர்கள் கருதுகின்றனர். நேர்காணல் நடத்தும் செய்தியாளர்கள் இந்த நான்கினைப் பற்றியும் தெரிந்திருப்பது நல்லது.

செய்தியாளர் நேர்காணும் பொழுது சிலவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றை, செய்யவேண்டியவை, செய்யக் கூடாதவை என்று பகுத்துக் கூறலாம்.

### 2.1.1 **செய்ய வேண்டியவை**

நேர்காண்பவர் முடிந்த வரை கீழ்க்காண்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- நேர்காண வேண்டியவரோடு முன்கூட்டியே தொடர்புகொண்டு ஒப்புதல் பெற்`று இடம், நேரம் ஆகியவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

1 நேர்காணலுக்கான திட்டம் தீட்டிக் கொள்ள வேண்டும். கேட்க வேண்டிய கேள்விகளை வரையறுத்துக் கொள்ளுதல் தேவை.

- நேர்காணப்படுபவரைப் பற்றியும், நேர்காணலுக்கான பொருள் பற்றியும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.
- ஆர்வமாக நேர்காணலை நடத்த வேண்டும். சொல்வதைப் பொறுமையாய், கவனமாய்க் கேட்க வேண்டும்.
- நன்கு உடை அணிந்து செல்ல வேண்டும்.
- நேரத்திற்குச் செல்ல வேண்டும்.
- நேர்காணலின் நோக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.
- மேலும் மேலும் கேள்விகள் கேட்க வேண்டும்.
- எல்லாவற்றையும் கூர்ந்து கவனிக்க வேண்டும்.
- சரியான முறையில் குறிப்பு எடுக்க வேண்டும்.
- எவற்றை வெளியிட வேண்டும்; எவற்றை வெளியிடக் கூடாது என்பதில் தெளிவு வேண்டும்.
- முடிந்தால், வெளியிடுவதற்கு முன்னால், எழுதிய குறிப்புகளைக் கொடுத்து, நேர்காணப்பட்டவரின் ஒப்புதலைப் பெறுதல் நல்லது.
- நேர்காணலின் பொழுது ஒலிச்சுருள் பதிவி **(Tape recorder),** ஒளிப்படம் **(Photo)** ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.
- நேர்காணலில் ஒத்துழைப்பு அளித்ததற்கு நன்றி கூறுவதோடு நேர்காணல் நன்கு நடைபெற்றதாகக் கூறி, சிறிது நேரம் பொதுவாகப் பேசிவிட்டு வரவேண்டும். அப்பொழுது சில பயனுள்ள விவரங்கள் பெற வாய்ப்பு ஏற்படும்.

### 2.1.2 செய்யக் கூடாதவை

நேர்காண்பவர் சிலவற்றைச் செய்யக் கூடாது. அவை :

- நேர்காணப்படுபவரை விடத் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கக் கூடாது.
- அடிமை போல் நடக்கவும் கூடாது; ஆட்டிப் படைக்க நினைக்கவும் கூடாது.
- இடை இடையே குறுக்கிடுவதோ, கூறும் கருத்துக்களை அலட்சியப் படுத்துவதோ கூடாது.
- கருத்து முரண்பாடுகளையோ, உணர்வுகளையோ வெளிப்படுத்தக் கூடாது.
- வெட்டிப்பேச்சில் நேரத்தை வீணடிக்கக் கூடாது.
- விவாதத்தைத் தவிர்க்க வேண்டும்.
- தாமாக நேர்காணலை முடிக்கக் கூடாது.
- நேர்காணல் முடிந்தவுடன் அவசரப்பட்டு வெளியே வரக்கூடாது.

எளிதாகத் தகவல் பெறும் தன்மையால் நேர்காணல் முறையை இதழியலாளர்கள் தற்காலத்தில் விரிவாகப் பயன்படுத்துகின்றனர். கருத்துகளை அறிந்து செய்திகளை உருவாக்க இது ஒரு சிறந்த முறையாகத் திகழ்கின்றது.

### நேர்காணலின் வகைகள்:-

நேர்காணல்கள் அவற்றை நடத்துகின்றவரின் திறமையையும் அணுகுமுறையையும் ஒட்டிப் பல வகைகளாக அமைகின்றன. பொதுவாக நேர்காணல்களைக் கீழே உள்ளவாறு பலவகைகளாக விளக்கலாம்:

- **தெருவில் காண்பவர் நேர்காணல்** (Man in the Street Interview)

தெருவில் காண்கின்ற ஒருவரை நிறுத்தி, எதனைப் பற்றியாவது அவரது கருத்துகளை அறிய நேர்காணலாம். உதாரணமாக, தேர்தல் காலங்களில் போட்டி இடுபவர்களின் வெற்றி வாய்ப்புகளை அறிய, வழியில் சந்திக்கும் வாக்காளர்களைக் கண்டு நேர்காணல் துணை செய்யும். இந்த வகையான நேர்காணல் மிகவும் எளிதானது. யாரோடும் முன்கூட்டியே நேர்காணலுக்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய தேவை இல்லை. எதிரில் வருகின்றவரை நிறுத்தி வைத்து நேர்காணலை நடத்தி முடிக்கலாம்.

- **தற்செயல் நேர்காணல்** (Casual Interview)

முன்கூட்டித் திட்டமிடாமல், எதிர்பாராமல் செய்தியாளர், சில குறிப்பிட்ட தலைவர்களைச் சந்திக்க நேரலாம். எங்காவது விருந்திலோ, சிற்றுண்டிச் சாலையிலோ, பொதுஇடங்களிலோ தற்செயலாகச் சந்தித்து, எந்தவித நோக்கமும் இன்றிப் பேசத் தொடங்கலாம். பேச்சின்போக்கில் ஏதாவது ஒரு செய்தியின் நுனி அகப்படும். அதனை மேலும் மேலும் தோண்டப் பெரிய செய்தி ஒன்று கிடைக்கலாம். இப்படிப்பட்ட நேர்காணல் **தற்செயல் நேர்காணல்** என்று அழைக்கப்படும்.

- **ஆளுமை விளக்க நேர்காணல்** (Personality Interview)

புகழ்பெற்ற சாதனையாளர் ஒருவரை அவரது ஆளுமைத் தன்மையை வெளிக்கொணரும் வகையில் நேர் கண்டு சிறப்புக் கட்டுரை வரைவது **ஆளுமை விளக்க நேர்காணல்** ஆகும்.

நடிகர்கள், அரசியல் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களின் நேர்காணல், புகழ் பெற்றவர்களின் நேர்காணல் வகையைச் சேர்ந்ததாகும். பாம்புப் பண்ணை வைத்துப் பாம்புகளோடு நெருங்கிப் பழகும் ஒருவரை நேர்காணல் கண்டு சிறப்புக் கட்டுரை எழுதுவது புகழ்பெற்றவரின் அல்லது தனிச்சிறப்பு உடைய ஒருவரின் **ஆளுமை விளக்க நேர்காணல்** ஆகும்.

- **செய்தி நேர்காணல்** (News Interview)

செய்தியைப் பெறும் நோக்கில் ஒரு செய்தியாளர் செய்தி தரும் ஒருவரை நேர்காணல் காண்பது செய்தி நேர்காணலாகும். இதில் செய்தியைப் பெறுவது ஒன்றுதான் நோக்கமாக இருக்கும். அதற்குத் தயாரித்து வைத்திருக்கும் கேள்விகளை நேர்காணலில் கேட்பார்கள். எடுத்துக்காட்டாக, ஒருவர் உண்ணாவிரதம் இருந்தால், அதற்கான காரணங்களை அறிந்து வெளியிடுவதற்காக நேர் காண்பதைக் கூறலாம்.

- **செய்திக் கூட்டம்** (News Conference)

செய்தி தருகின்றவர் செய்தியாளர்களை மொத்தமாக அழைத்துச் செய்தியை வழங்கக் கூட்டம் நடத்தலாம். அந்தக் கூட்டம் ஒருவகை நேர்காணலாக அமையும். செய்தியாளர்கள் செய்தி தருகின்றவரிடம் கேள்விகள் கேட்டு விளக்கம் பெறலாம். தனது கருத்தைப் பரப்பிப் பெயர் பெறும் நோக்கில் ஒருவர் செய்திக் கூட்டம் நடத்தலாம். உயர்நிலைப் பொறுப்பில் உள்ளவர்களும் செய்திக் கூட்டம் நடத்தலாம். இப்படிப்பட்ட கூட்டங்களில் ஒரு செய்தியாளரே தொடர்ந்து கேள்விகள் கேட்கக்கூடாது.

- **செய்திச் சுருக்கம் தருதல்** (Briefing)

செய்திகளைத் தருவதில் புதிய முறையாக, செய்திச் சுருக்கம் அமைந்து உள்ளது. ஓர் அமைச்சகத்தின் சார்பில் செய்திகளைத் தருகின்றவர் செய்தியாளர்களை அழைத்து, தயாரித்து வைத்திருக்கும் செய்திக் குறிப்பினை வழங்குவார். தேநீர் விருந்தோடு செய்திகளை, செய்தியாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர் வழங்குவார். இதில் அதிகமாகக் கேள்விகள் கேட்க வேண்டிய நிலை இருக்காது.

- **காலைச் சிற்றுண்டிக் கூட்டம்** (Breakfast Meeting)

குறிப்பிடத்தக்க பன்னாட்டுத் தலைநகரங்களில் செய்திச் சுருக்கம் தரப் புதிய முறை ஒன்றைப் பின்பற்றுகின்றனர். செய்தியின் முக்கியத்துவத்தை ஒட்டி, தெரிந்தெடுத்த செய்தியாளர்களைச் சிற்றுண்டிக்கு அழைப்பார்கள். மிகவும் நெருக்கமான முறையில் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டே செய்திகளைப் பரிமாறிக் கொள்வார்கள்.

- **தொலைபேசி நேர்காணல்** (Telephone Interview)

செய்திகளை விரைந்து சேகரிக்கும் வழிமுறையாக, **தொலைபேசி நேர்காணல்** வளர்ந்து வருகின்றது. செய்தியாளர் இருந்த இடத்தில் இருந்து கொண்டே செய்தியினை இதன் மூலம் திரட்டலாம். இந்த முறையில் நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

தொலைபேசி நேர்காணலில் சில குறைபாடுகள் உள்ளன. தொலை பேசியில் இருவரும் தொடர்ந்து பேசவேண்டும். சில விநாடிகள் பேசாமல் இருந்தால் தொடர்பு பாதிக்கப்படும். நேரடி நேர்காணலில் செய்தி அளிப்பவரின் முகபாவங்களை, கண்ணைப் பார்த்து உணர்வுகளையும், பேசுவது உண்மைதானா என்பதையும் அறிந்து கொள்ளலாம். தொலைபேசியில் இந்த வாய்ப்பு இல்லை. மேலும் தொலைபேசியில் எல்லாரையும் தொடர்பு கொள்ளமுடியாது.

தொலைபேசி நேர்காணலில் தொடக்கத்திலேயே செய்தியாளர் முழுக்கத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் குரல் தான் முதலிடம் பெறுகிறது. ஆதலால் தெளிவாக, இனிமையாகப் பேசவேண்டும். சத்தம் போடக் கூடாது. நேர்காணல் சுருக்கமாக இருப்பது நல்லது.

- **அடைகாத்தல் நேர்காணல்** (Incubated Interview)

வேளைகளில் கொள்கைகளை உருவாக்குகிறவர்கள், தங்களது கருத்துகளை எப்படியாவது திணிக்கக் கருதி, அதற்கான சூழ்நிலையை உருவாக்குவார்கள்.

யாரும் கேட்காமலே, கேட்டதைப் போலப் பாவித்துச் செய்திகளை வலிந்து கூறி, பொதுமக்களிடம் அவை சென்றடையுமாறு செய்வார்கள். இத்தகைய நேர்காணலை, செய்தியாளர்கள் **அடைகாத்தல் நேர்காணல்** எனக் கூறி ஒதுக்க முயல்வார்கள்.

• **பட்டம் பறக்க விடும் நேர்காணல்** (Kite - Flying)

செய்தியாளர் ஏற்பாடு செய்து நடத்தும் நேர்காணலை, சில முக்கியமானவர்கள், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். தங்களது கருத்துகளை நேர்காண்பவர் கருத்துப் போல வெளியிடச் செய்துவிடுவார்கள். ஆதலால் தான் இப்படி அமைந்துவிடும் நேர்காணலை, **பட்டம் பறக்க விடும் நேர்காணல்** என்கின்றனர். இப்படி அமைந்து விடாமல் நேர்காண்பவர் கவனமாக இருக்க வேண்டும்.

## 2.2 கலைச் சொல்லாக்கம்

அறிவியல் நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பில் கலைச்சொல்லாக்கம் அடிப்படையானது. ஆய்வின் அண்மைக்காலத்திய நிலைக்கேற்ப கலைச்சொற்கள் புதிதாக உருவாக்கப்பட வேண்டும். மூலமொழிச் சொற்களின் பொருளினை நுட்பமாக அறிந்து கொண்டால், தமிழில் கலைச்சொல்லாக்கம் செம்மையாக அமையும். ஒரு சொல் மூலமொழியில் பயன்படுத்தப்பட்ட சூழலுக்கும் தமிழ்மொழியின் சொல்லுக்கும் உள்ள உறவினை ஆராய்ந்து உருவாக்கப்படும் கலைச்சொல் பொருத்தமானதாக அமையும். அறிவியலில் ஒவ்வொரு துறைக்கும் உள்ள தனித்த பண்பினை ஆராய்வதுடன், தமிழ்மொழியின் மரபினையும் அறிந்துகொள்ள வேண்டியது, கலைச்சொல்லாக்கத்தில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறை ஆகும்.

அறிவியல் மொழிபெயர்ப்பில் கலைச்சொற்களை விதைகளாகவும், பிற சொற்களைச் சதைப் பற்றுகளாகவும் கொண்டு தொடர்கள் அமைக்கப்படுகின்றன.

### 2.2.1கலைச்சொல்லாக்க முயற்சிகள்

ஃபிஷ் கிரீன், 1875-ஆம் ஆண்டில் எஸ்.சுவாமிநாதன், சாப்மன் ஆகியோரின் துணையுடன் மருத்துவம் தொடர்பான கலைச்சொற்கள் அடங்கிய நான்கு தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இதுவே தமிழில் அறிவியல் கலைச்சொல்லாக்க முயற்சியில் முதன்மையானதாகும்.

1932-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தினரால் அமைக்கப்பட்ட குழுவினர் சுமார் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட கலைச்சொற்களைத் தொகுத்தனர். அவற்றில் பெரும்பான்மை ஆங்கிலக் கலைச்சொற்களின் ஒலிபெயர்ப்பாகவும் சமஸ்கிருதச் சொற்களாகவும் விளங்கின.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 1936-இல் தயாரித்த கலைச்சொல் தொகுதி, தமிழில் அறிவியல் சொற்களை வெளியிட வழிவகுத்தது; அருமையான முயற்சியாக விளங்கியது.

இலங்கை அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் 1956-ஆம் ஆண்டு, கலைச்சொற்களின் தொகுப்புத் தயாரிக்கப்பட்டது.

1967-ஆம் ஆண்டு முதல் அண்மையில் வெளியான கடைசி இதழ் வரையில் யுனெஸ்கோ கூரியரில் கையாளப்பட்ட ஆயிரக்கணக்கான கலைச்சொற்கள், மணவை முஸ்தபாவினால் 'அறிவியல் தமிழ்க் கலைச்சொற்கள்' என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் 1995-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அறிஞர் குழுவினர் கணினித்துறை தொடர்பான கலைச் சொற்களைத் தமிழாக்குவதில் சிறப்புடன் செயல்பட்டுள்ளனர். 1996-ஆம் ஆண்டில் சாமி சண்முகம் என்பவர் 17,000 மருத்துவச் சொற்களைத் தமிழாக்கியுள்ளார். கடந்த 150 ஆண்டுகளில் இதுவரை தமிழில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான அறிவியல் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய சொற்களைப் பயன்படுத்துவதில் சீர்மை இல்லாத நிலை உள்ளது. மேலும் கலைச்சொல் ஆக்கத்தில் தரப்படுத்துதலும் பொதுப்பயன்பாடும் குறைவாகவே உள்ளன. இந்நிலையை மாற்றுவதற்கான சூழலைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கிட வேண்டும்

**கலைச்சொல்லாக்கம்**

- **பிறமொழிச் சொற்களுக்கு தகுத்த தமிழ்ச் சொற்களை உருவாக்கும் முறைமைக்கு கலைச்சொல்லாக்கம் என்று பெயர்.**
- **கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும், தேவையான இடத்து புதிதாக சொற்களை உருவாக்கியும் தருவது ஆகும்.**
- **ஒரு மொழியில் காலத்திற்கேற்ப துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்பர்.**
- **ஒரு மொழி தன வேர்ச்சொற்களை கொண்டு புதிய கலைச்சொற்களை உருவாக்கி கொள்ள வேண்டும்**
- **கலைச் சொற்கள் பெரும்பாலும் காரணப்பெயராகவே அமையும்.**

**அகராதியின் நோக்கம்**

- **பொருள் தெரியாத சொற்களுக்கு பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம் ஆகும்.**

**கலைச்சொல்லாக்க பணிக்கு முன் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள்**

- **ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.**
- **பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.**
- **வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.**
- **ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.**
- **தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.**

- நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக்கூடாது.

ஒரு சொல்லில் இருந்து பல சொற்களை உருவாக்கல்

- ஒரு சொல்லை மொழிபெயர்க்கும்போதோ அல்லது புதிய சொல்லை உருவாக்கும்போதோ அச்சொல் அதே போன்ற வேறு பல சொற்களை உருவாக்க உதவ வேண்டும்.
- எடுத்துக்காட்டாக,
    - Library என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நூலகம், நூல்நிலையம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன.
    - இச்சொற்களில் நூலகம் என்னும் சொல்லே மேலும் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டது.
    - library – நூலகம்
    - librarian – நூலகர்
    - library science – நூலக இயல்

கலைச்சொற்களை தரப்படுத்தல் வேண்டும்

- அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கும்போது பல்வேறு சொற்களை ஆள்கின்றனர்.
- எடுத்துக்காட்டாக, Antibiotics = எதிர் உயிர்ப்பொருள், நுண்ணுயிர்க் கொல்லிகள், உயிர் எதிர் நச்சுகள், கேடுயிர்க் கொல்லிகள், நச்சுயிர்க் கொல்லிகள் எனப் பல்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
- இக்கலைச்சொற்கள் தமிழில் சொல்லாக்க வளர்ச்சியினை வெளிப்படுத்துவனவாக உள்ளன.
- ஆனால், கலைச்சொற்களைக் கற்பதிலும் அவற்றைப் புரிந்துகொள்வதிலும் துறைசார்ந்த நிலையில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- இவற்றைத் தவிர்க்க அச்சொற்களைத் தரப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். இதற்கென குழு ஒன்றை உருவாக்கலாம்.

தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை

- 'தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதத் தொடங்கிய பாரதி, Member என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லொன்றை உருவாக்க முனைந்தார்.
- மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை .
- "அவயவி, அங்கத்தான், சபிகன், உறுப்பாளி" என்ற பல்வேறு சொற்களை பயன்படுத்தி பார்கிறார். ஆனால் அவருக்கு அந்த வார்த்தைகளில் திருப்தி ஏற்படவில்லை.
- "கடைசியாக மெம்பர் என்று எழுதி விட்டேன்" என்று கூறுகிறார் <u>பாரதியார்</u>

தொழில்நுட்ப கலைச்சொற்கள்

- Cellphone = கைப்பேசி, செல்லிடப்பேசி, அலைபேசி
- <u>Website</u> = இணையம்
- Blog = வலைப்பூ
- E-Mail = மின்னஞ்சல்
- Smartphone = திறன்பேசி
- Windows = பலகணி

மருத்துவ கலைச் சொற்கள்

- Clinic = மருத்துவமனை
- Blood Group = குருதிப் பிரிவு
- Pharmacist = மருந்தாளுநர்
- X-Ray = ஊடுகதிர்

- Typhoid = குடற்காய்ச்சல்
- Ointment = களிம்பு

**கல்வி சார்ந்த கலைச் சொற்கள்**

- Note Book = எழுதுசுவடி
- Answer Book = விடைச்சுவடி
- Rough Note Book = பொதுக் குறிப்புச் சுவடி
- Prospectus = விளக்கச்சுவடி

**ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ் கலைச்சொற்கள்**

- Touch Scrren = தொடுதிரை
- Bug = பிழை
- Gazette = அரசிதழ்
- Despatch = அனுப்புகை
- Subsidy = நல்கை
- Ceiling = உச்சவரம்பு
- Circular = சுற்றறிக்கை
- Sub Junior = மிக இளையோர்
- Super Senior = மீமூத்தோர்
- Carrom = நாலாங்குழி ஆட்டம்
- Sales Tax = விற்பனை வரி
- Customer = வாடிக்கையாளர்
- Consumer = நுகர்வோர்
- Account = பற்று வரவுக் கணக்கு
- Refree = நடுவர்

நாம் இன்று இலத்திரனியல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆங்கில மொழியில் சமூக வலைதளங்களுக்கான பெயர்கள் கூறப்பட்டிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. நம்மில் அநேகமானோருக்கு தமிழ் மொழியில் அவற்றிற்கான பெயர் இருப்பது தெரியாது. நாம் அன்றாடம் உபயோகிக்கும் சமூக வலைதளங்களுக்கான தமிழ் பெயர்களை அறிவோம்,

**WhatsApp – புலனம்**
**YouTube – வலையொளி**
**Instagram – படவரி**
**We chat – அளாவி**
**Messenger – பற்றியம்**
**Twitter – கீச்சகம்**
**Telegram – தொலைவரி**
**Skype – காயலை**

மேற்கூறப்பட்டவை மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்டவையே. அம் மாநாட்டில் வெளியிடப்பட்ட இன்னும் சில நுட்பவியல் கலைச் சொற்களையும் அறிவோம்.

**Bluetooth – ஊடலை**
**Wi Fi – அருகலை** **Hotspot – பகிரலை** **Broadband – ஆலலை**
**Online – இயங்கலை** **Offline – முடக்கலை** **Thumb drive – விரலி**
**Hard disk – வன்தட்டு** **GPS – தடங்காட்டி** **CCTV – மறைகாணி**
**OCR – எழுத்துணரி LED – ஒளிர்விமுனை** **3D – முத்திரட்சி**
**2D – இருதிரட்சி** **Projector – ஒளிவீச்சி** **Printer – அச்சுப்பொறி**
**Scanner – வருடி** **Smart phone – திறன்பேசி**
**Sim card – செறிவட்டை** **Charger – மின்னூக்கி** **Digital – எண்மின்**
**Cyber – மின்வெளி Router – திசைவி**

**Selfie – தம் படம் - சுயஉரு - சுயப்பு** **Thumbnail – சிறுபடம்**
**Meme – போன்மி** **Print Screen – திரைப் பிடிப்பு**
**Inkjet – மைவீச்சு** **Laser – சீரொளி**

அலகு-3

## 3.0 தமிழிலக்கிய வரலாறு

**3.1 பல்லவர் கால பக்தி இலக்கியங்கள்:**
பல்லவர்கள் கி.பி.600 நூற்றாண்டு முதல் கி.பி 850ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர். அக்காலத்தைப் 'பல்லவர் காலம்" என்று அழைப்பர்.

பல்லவர்களின் காலத்தில் தமிழகத்தில் பௌத்தமும் சமணமும் சிறப்புடன் விளங்கின. புத்தரின் தாய்மொழியான பாலியும் மகாவீரரின் தாய்மொழியான பிராகிருதமும் வடவரின் சமஸ்கிருதமும் தமிழ்நாட்டில் பெருஞ்செல்வாக்குப் பெற்று விளங்கின. தமிழ்மொழியானது ஆட்சிமொழியாக இல்லாது இரண்டாம் நிலையில் இருந்தது.

**3.2 சைவ, வைணவ சமயங்களின் எழுச்சி**:
பல்லவர்களின் காலத்தில் இல்லறத்திற்கு எதிர்ப்பு, இசைக்கு எதிர்ப்பு, தமிழ்ப் புறக்கணிப்பு போன்ற புறச் சமயமான பௌத்த சமண சமயங்களின் நிலை சைவ, வைணவ சமயக் கருத்துக்களால் வீழ்ச்சி அடைந்தது. சிவனைப் போற்றும் சைவமும் திருமாலை வணங்கும் வைணவமும் இல்லறத்தைச் சிறப்பித்தன. இசைவடிவில் இறைவனைப் போற்றின. தமிழ் இறைவனுக்கு உகந்த மொழியாக மாறியது. இந்நிலையில் சைவ, வைணவ சமயங்கள் எழுச்சி பெற்றன.

பக்திக்காலம்:-
பல்லவர்கள் ஆட்சி செய்த கி.பி.7ம் நூற்றாண்டு முதல் 10ம் நூற்றாண்டு வரையான காலத்தை பக்திக்காலம் என்று அழைப்பர். அக்காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் சார்ந்து பக்தி இலக்கியங்கள் பல தோன்றின.

பக்தி இலக்கியங்கள்

சைவத் திருமுறைகளான 'பன்னிரு திருமுறைகளும்" வைணவ ஆழ்வார்களின் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும்" பக்தி இலக்கியங்கள் ஆகும்.

பன்னிரு திருமுறைகள்

சைவ அடியார்கள் இயற்றிய பாடல்களின் தொகுப்;பே பன்னிரு திருமுறைகள் எனப்படும். இவற்றை நம்பியாண்டார் நம்பி என்பவர் இராசராசசோழன் வேண்டுகோளின்படி தொகுத்துத் தந்தார்.

| | | |
|---|---|---|
| திருஞான சம்பந்தர் | - | 1,2,3ம் திருமுறைகள் |
| அப்பர் தேவாரம் | - | 4,5,6ம் திருமுறைகள் |
| சுந்தரர் தேவாரம் | - | 7ம் திருமுறை |
| மாணிக்கவாசகரின் திருவாசகம் | - | 8ம் திருமுறை திருக்கோவையார் |
| ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா | - | 9ம் திருமுறை திருப்பல்லாண்டு |
| திருமூலரின் திருமந்திரம் | - | 10ம் திருமுறை |
| பன்னிருவர் பாடிய 40 நூல்கள் | - | 11ம் திருமுறை |
| சேக்கிழாரின் பெரிய புராணம் | - | 12ம் திருமுறை |

சைவ சமயக்குரவர்:

சிவபெருமான் மீது பக்தி கொண்டு போற்றிப் பாடியவர்கள் சைவசமயக் குரவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

தேவாரம் பெயர்க்காரணம்

தேவாரம் - தே + வாரம் எனப் பிரிந்து கடவுளுக்குரிய பாடல்கள் என்றும், - தே + ஆரம் எனப் பிரிந்து கடவுளுக்குச் சூட்டப்படும் பாமாலை என்றும் பொருள்படுவது. தேவாரப் பாக்களைப் 'பழம் மரபிசைக் களஞ்சியம்" என்று அழைப்பர்.

திருஞான சம்பந்தரின் சிறப்புப் பெயர்கள்

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன். தமிழ்ஞான சம்பந்தன் ஆளுடைய பிள்ளை காழி வள்ளல் - என்றும் அழைக்கப்பெறும் சிறப்புப் பெயர்களைக் கொண்டவர். ஆதிசங்கரர் இவரைத் 'திராவிட சிசு" என்று அழைத்துள்ளார். மேலும் 'கவுணியர்" என்னும் சிறப்புப் பெயரும் எண்டு.

'பிள்ளை பாதி புராணம் பாதி"

பெரிய புராணத்தில் பாதியளவு திருஞானசம்பந்தர் வரலாறு கூறப் பெறுகின்ற காரணத்தால் ' பிள்ளைபாதி புராணம் பாதி" என்று கூறப்பெறுகின்றது.

திருஞான சம்பந்தரின்பா டலின் தொகுப்பு முறை:

பொதுவாக பத்துப் பாடல்களின் தொகுப்பு பதிகம் எனப்படும். சம்பந்தரின் பதிகம் ஒவ்வொன்றும் பதினொரு பாடல்களைக் கொண்டவை.

| | | |
|---|---|---|
| 8-ம் பாடல் | : | இராவணன் கயிலாய மலையை எடுத்த கதை |
| 9ம் பாடல் | : | திருமாலும் பிரம்மனும் சிவனின் அடிமுடி காண மாட்டாமை. |
| 10ம் பாடல் | : | சமண புத்த மதங்களைக் கண்டித்தல் |
| 11ம் பாடல் | : | பதிகம் பாடிய சூழலும், தம்மைப் பற்றிய குறிப்பும் கூறுதல். |

திருநாவுக்;க்;கரசர்:

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தார். தந்தையார் புகழனார். தாயார் மாதினியார். தமக்கை திலகவதியார். வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். இயற்பெயர் மருள் நீக்கியார். சமண சமயத்தில்; இருந்தபோது துறவியர்க்குத் தலைமையேற்று 'தரும சேனர்" எனச் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். திருஞான சம்பந்தரால் 'அப்பர்" என்று

அழைக்கப்பெற்றார். நாவுக்கரசர், ஆளுடைய அரசு, வாசீசர், தாண்டக வேந்தர் எனும் சிறப்புப் பெயர்களைப் பெற்றார். சமண சமயத்திலிருந்து தம் தமக்கை திலகவதியால் சைவ சமயத்திற்கு மாறியவர். தம் சூலை நோயை சிவபெருமானின் திருநீறு தீர்த்ததால் சைவ சமயத்திற்கு மாறி, சிவபெருமான் மீது பல பதிகங்களைப் பாடினார். உழவாரத் தொண்டு படை செய்து தம் 81ம் வயதில் சிவபெருமானின் திருவடியை அடைந்தார்.

சுந்தரர்:
திருமுனைப்பாடி நாட்டுத் திரு நாவலூரில் பிறந்தார். தந்தையார் சடையனார். தாயார் இசை ஞானியார். இயற்பெயர் நம்பியாரூரர். இவரை நரசிங்க முனையரையர் என்னும் குறுநில மன்னர் தத்து எடுத்து வளர்த்தார்.

வேறு பெயர்கள்:

தம்பிரான் தோழர், சேரமான் தோழர், திருநாவலூரர், வன்தொண்டர், ஆளுடைய நம்பி. பரவை நாசச்சியார், சங்கிலி நாச்சியார் ஆகிய இரு பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்.

மாணிக்கவாசகர்:
இயற்பெயர் திருவாதவூரர். தந்தை சம்புபாதசாரியர். தாய் சிவஞானவதியார். அரிமர்த்தன பாண்டியமன்னன் அவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் வீற்றிருந்த சிவபெருமானிடம் பக்தி கொண்டவர். அரசன் குதிரைகளை வாங்க கொடுத்த பணத்தை சிவனுக்குக் கோயில் கட்ட செலவு செய்தார். அரசன் குதிரைகளைக் கேட்க காட்டிலிருக்கும் நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றி சிவபெருமானே அரசனிடம் சென்று கொடுத்தார். அவை மீணடும்; நரிகளாகி ஓட்டம் எடுக்க, அரசன் மாணிக்கவாசகரை சிறையில் அடைத்தான். சிவபெருமானிடம் மாணிக்கவாசகர் வேண்ட வைகை ஆற்றில் பெருவெள்ளம் வரச் செய்து மாணிக்கவாசகரின் பக்தியினை அரசனுக்குச் சிவபெருமான் உணர்த்தினார். அரசன் உணர்ந்து மாணிக்கவாசகரை விடுதலை செய்தான்.

ஒன்பதாம் திருமுறையின் தொகுப்பு முறை:
பன்னிரு திருமுறைகளில் ஒன்று. சிவன் மீது பக்திகொண்ட அடியவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு.
திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், சேந்தனார், பூத்துருத்தி காடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பது பேர் பாடிய பாடல்களின் தொகுப்பாக அமைவது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பது.
மொத்தப் பதிகங்கள் 29 பாடல்கள் 301 ஆகும்.
பத்தாம் திருமுறை:
பத்தாம் திருமுறையை இயற்றியவர் திருமூலர். இவர் இயற்றியது திருமந்திரம். இதற்கு திருமந்திரமாலை, தமிழ்மூவாயிரம் என்னும் வேறுபெயர்களும் உண்டு. 9 தந்திரங்களாகப் பகுக்கப்பெற்று 232 அதிகாரங்களைக் கொண்டது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் புகழ்பெற்ற வாசகங்களைக் கொண்ட மனிதநேய நூல்.
பதினோராம் திருமுறை:
பதினொருவர் இயற்றியுள்ளனர். திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், கல்லாட தேவ நாயனார், நக்கீர தேவநாயனார், கபில தேவ நாயனார், பரண தேவநாயனார், அதிரா அடிகள், இளம் பெருமானடிகள், ஐயடிகள், காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்தடிகள்.
பன்னிரெண்டாம் திருமுறை:

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் 12ம் திருமுறையாக விளங்குகிறது. 63 சைவத் தனியடியார்கள் (நாயன்மார்கள்) 9 தொகையடியார்களையும் பற்றிய வரலாற்றுக் காப்பியம். சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அமைச்சராகப் பணியாற்றியவர். அவருடைய
இயற்பெயர் 'அருண்மொழித்தேவர்" இராம தேவர் என்றும் இவரை அழைப்பர். பெரியபுராணம்
இயற்றிய பிறகு 'தொண்டர் சீர் பரவுவார்" என்னும் பட்டமும் இவருக்குக் கிடைக்கப்பெற்றது. சோழ அரசன் இவருக்கு 'உத்தம சோழப் பல்லவராயன்" என்னும் பட்டம் வழங்கியுள்ளார்.

பெரிய புராணம் சிறப்புகள்

சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும் பெரிய புராணத்திற்கு முதன்மை நூல்களாக அமைவனவாகும். சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இதற்குத் 'திருத் தொண்டர் புராணம்" என்று மற்றொரு பெயரும் உண்டு. 4287 பாடல்களையும் 13 சருக்கங்களையும் இரண்டு காண்டங்களையும் கொண்டு விளங்குகிறது. 'உலகெலாம்" எனத் தில்லைச் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்க அதனையே முதலாகக் கொண்டு பாடியுள்ளார்.

சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்ற பல ஊர்களுக்கும் சென்று கல்வெட்டுச் செய்திகளையும் செவிவழிச் செய்திகளையும் தேர்ந்து இப்புராணத்தைப் பாடியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழார் பிள்ளைத் தமிழில் 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று பாராட்டியுள்ளார்.

பெரிய புராணம்;

- 11 ஆம் அல்லது 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சேக்கிழார் என்பவரால் எழுதப்பட்ட ஒரு நூல்.
- சைவ சமயத்தைச் சார்ந்தது. சிவனடியார்களின் பெருமையையும் அவர்கள் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறது.
- சுந்தரமூர்த்தி நாயனார் எழுதிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூல்களாகக் கொண்டும்
- சேக்கிழார் பல ஊர்களுக்கும் சென்றுதிரட்டிய தகவல்களைக் கொண்டும் பெரியபுராணம் ஆக்கப்பட்டது.
- இதைத் திருத்தொண்டர் புராணம் என்றும் கூறுவர்.
- இரண்டு காண்டங்களாகவும் 13 சருக்கங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. 4253 விருத்தப்பாக்களால் பாடப்பட்டது.

முதற் காண்டம்

1. திருமலைச் சருக்கம்.
2. தில்லைவாழ் அந்தணர் சருக்கம்.
3. இலை மலிந்த சருக்கம்
4. மும்மையால் உலகாண்ட சருக்கம்
5. திருநின்ற சருக்கம்

இரண்டாம் காண்டம்

1. வம்பறா வரிவண்டுச் சருக்கம்
2. வார்கொண்ட வன முலையாள் சருக்கம்
3. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்
4. கறைக்கண்டன் சருக்கம்
5. கடல் சூழ்ந்த சருக்கம்

6. பத்தராய்ப் பணிவார் சருக்கம்
7. மன்னிய சீர்ச் சருக்கம்
8. வெள்ளானைச் சருக்கம

வினாக்கள்: (இரண்டு மதிப்பெண்கள்
1. பக்தி இலக்கியங்கள் என்பன யாவை?
2. பல்லவர்களின் ஆட்சிக்காலத்தைக் குறிப்பிடுக.
3. பக்திக் காலம் என்று எதனைக் குறிப்பிடுவர்?
4. பன்னிரு திரு முறைகள் என்றால் என்ன?
5. பன்னிரு திரு முறைகளைத் தொகுத்தவர் யார்?
6. முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் யார்?
7. பன்னிரெண்டாம் திருமுறை என்றழைக்கப்படும் நூல் எது?
8. சைவ சமயக் குரவர்கள் யாவர்?
9. சைவர்கள் யாரை வழிபடுபவர்?
10. தேவாரம் - பெயர்க் காரணம் யாது?
11. திருஞான சம்பந்தரின் சிறப்புப் பெயர்கள் யாவை?
12. 'பிள்ளைபாதி புராணம் பாதி" எனறழைக்கப்படும் நூல் எது?
13. திருநாவுக்கரசரின் இயற்பெயர் என்ன? அவருக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் யாவை?
14. சுந்தரரின் வேறுபெயர்கள் யாவை?
15. மாணிக்கவாசகர் இயற்பெயர் என்ன?
16. மாணிக்கவாசகர் யாருடைய அவையில் எப்பதவியில் பணியாற்றினார்?
17. மாணிக்கவாசகர் பாடியுள்ள நூல்கள் யாவை?
18. பத்தாம் திருமுறையை இயற்றியவர் யார்? அதன் பெயர் என்ன?
19. பன்னிரெண்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ள நூலைப் பாடியவர் யார்?
20. சேக்கிழார் எவருடைய வரலாற்றைப் பெரியபுராணத்தில் பாடியுள்ளார்?
21. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன? அவருக்கு வழங்கப்பட்ட வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
22. சேக்கிழாருக்கு வழங்கப்பட்டுள்ள பட்டங்கள் யாவை?
23. பெரிய புராணத்திற்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் யாவை?
24. பெரிய புராணத்திற்கு முதன்மை நூல்களாக அமைவன யாவை?
25. சேக்கிழார் யாருடைய அவையில் அமைச்சராகப் பணியாற்றினார்?

(ஐந்;து;;து மதிப்;ெ;;பெண்;க்;கள்;);;)
1. சைவ, வைணவ சமயங்களின் எழுச்சி குறித்து விளக்குக.
2. பன்னிரு திருமுறைகள் யாவை?
3. திருஞானசம்பந்தரின் பாடலின் தொகுப்புமுறை யாது?
4. திருநாவுக்கரசர் - குறிப்பு வரைக.
5. சுந்தரர் - குறிப்பு வரைக.
6. மாணிக்கவாசகர் - குறிப்பு வரைக.
7. பன்னிரெண்டாம் திருமுறை குறித்து விளக்குக.
8. பெரியபுராணம் - குறிப்பு வரைக.

பத்து மதிபெண்கள்
1. பல்லவர் கால பக்தி இலக்கியங்கள் குறித்து கட்டுரை வரைக.
2. பக்திக்காலம் என்று எதனை அழைப்பர்? அக்கால இலக்கிய வளர்ச்சிக் குறித்து விளக்குக.
3. பன்னிரு திருமுறைகள் குறித்து விளக்குக.

4. சைவ சமயக் குரவர் நால்வர் குறித்து விளக்குக.

3.2 வைணவ இலக்கியங்கள்

பன்னிரு ஆழ்வார்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை யாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகியோர் பாடிய பாடல்களைத் தொகுத்து நாலாயிரத்திவ்வியப் பிரபந்தமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனைத் தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார்.

நம்மாழ்வார்:

சடகோபன், பராங்குசன், குருகைக் காவலன், காரிமாறன், தமிழ்மாறன், வகுளாபரணன் எனப் பலச் சிறப்புப் பெயர்களைச் கொண்டவர். இவர் ஆழ்வார் திருநகரியில் பிறந்து அசைவு தரும் காற்றைத் தடுத்து நிறுத்தியதால் ‘சடகோபர்” என்று பெயர் கொண்டார்.

பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வார் ‘அவ்யவி” என்றும் பிற ஆழ்வார்கள் ‘அவயவம்” என்றும் அழைக்கப்பெற்றனர்.

பாடிய பாசுரங்கள்

திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்குமாகும். அவை நான்கும் இருக்கு, யசூர், சாம, அதர்வண வேதங்களாகக் கருதப் பெறுவன. ‘திராவிடவேத சாரம்”, ‘செந்தமிழ் வேதம்” ஆன்ற திருமுறைகள் 1000 என்றும் அதற்கு வேறுபெயர்களும் உண்டு.

மதுரகவியாழ்வார்:

நம்மாழ்வாரை தெய்வமாக, குருவாகக் கொண்டு பாடியவர், பாண்டிநாட்டுத் திருக்கோளூரில் அவர் பாடிய பாசுரங்கள் ‘கண்ணிநுன் சிறுத்தாம்பு” என்னும் பத்துப் பாசுரங்களாகும்.

திருமங்கையாழ்வார்:

சோழநாட்டில் திருக்குறையலூரில் கள்ளர்குடியில் பிறந்தவர். ‘நீலன்’; என்னும் இயற்பெயரைக் கொண்டவர். பரகாலன், கலியன், கலிகன்றி என வேறு சிறப்புப் பெயர்களும் கொண்டவர். சோழ மன்னனின் படைத்தலைவராகப் பணியாற்றியவர்.

இவர் பாடியவை:

திருக்குறுத்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரிய திருமொழி, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழு கூற்றிருக்கை. இவை ஆறும் நான்மறையின் ஆறு அங்கங்களாகக் கருதப்பெறுகின்றன.

திருப்பாணழ்வார்:

பாணர்குடியில் பிறந்தவர். தாழ்ந்த சாதியில் பிறந்த இவர் திருவரங்கப் பெருமாளைத் தரிசிக்க இயலாது வருந்தினார். ‘உலோக காரங்கள்” என்னும் குருக்களின் கனவில் பெருமாள் தோன்றித் திருப்பாணாழ்வாரை அவர் தோள்களில் தூக்கிக் கொணர்ந்து பெருமாளின் கருவரையில் இறக்கி விட வேண்டும் என்று பணிந்தார். அவ்வகையில் திருப்பாணாழ்வார் திருவரங்கப்பெருமானைக் கண்டு ‘அமலானிபிரான்” எனத் தொடங்கும் பத்துப் பாசுரங்களைப் பாடி உயர்நிலைப் பெற்றார்.

பெரியாழ்வார்:

இயற்பெயர் விஷ்ணு சித்தன். பட்டர்பிரான், புதுவை மன்னன் போன்ற சிறப்புப் பெயர்களைக் கொண்டவர். திருமொழி, திருப்பல்லாண்டு ஆகியனவற்றைப் பாடியுள்ளார். கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய பாடல்களே ‘பிள்ளைத்தமிழ்” என்னும் சிற்றிலக்கிய வகையாக உருவாகியது. இவரின் வளர்ப்பு மகள் ஆண்டாள்.

ஆண்டாள்

‘சூடி கொடுத்த சுடர்க்கொடி” என்று அழைக்கப்படுபவர். கோதை என்னும் பெயரை உடையவர். திருமாலை ஆட்கொண்டதால் ஆண்டாள் என்று அழைக்கப் பெற்றார்.
இவர் பாடியவை:
திருப்பாவை, நாச்சியார் திருமொழி.
திருமாலைக் கணவனாக அடைய விரும்பி பாடிய பாடல்கள் திருமணம் ஆகாத பெண்களுக்கும் போற்றிப் பாடுவதற்குரிய ஒன்றாக விளங்குவன. திருப்பாவையின் முப்பது பாடல்களும் மார்கழி மாதத்தில் பெண்கள் நோன்பு நோற்று பாடுவதற்குரியதாக அமைவன. ஆண்டாள் திருமாலிடம் கொண்ட காதல் உள்ளத்தை கனவை நாச்சியார் திருமொழி எடுத்துரைத்து உள்ளது. திருமணச் சடங்குகளை எடுத்துரைக்கும் இனிய பாடல்கள் உள்ளன. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இத்திருப்பாவையில் ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு பாடப்பெற்ற பாட்டுகளின் தொகுப்பாகும்.
இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைந்துருகிப் பாடும் காதல் ரசம் மிகுந்த பாடல்களின் தொகுப்பாக காணப்படுகின்றது. இது வடமொழியில் எழுதப்பட்ட ஜெயதேவரின் கீத கோவிந்தம் எனம் நூலினை ஒத்த தன்மை உடையதாக காணப்படுகின்றது.

திருப்பாவைச் சிறப்பு

வைணவ சமய வழிபாட்டில் கலந்து விட்ட ஒன்று திருப்பாவை ஆகும். மார்கழி மாதக் காலைகளில் அனைத்து வைணவக் கோயில்களிலும் இசைக்கப்படுவதே இதன் பெரும் சிறப்பு. தமிழில் பாடல்கள் புனையப்படதாயினும், தமிழறியா அடியார்கள் கொண்ட வைணவத் தளங்களிலும் திருப்பாவை இசைக்கப்படுவதும், இந்தியாவில் எங்கெல்லாம், கோதை தனக்கும் ஒரு சந்நதி கொண்டுள்ளதும் வேறு எந்தவொரு அடியவருக்கும் காணப்பெறாத தனிச் சிறப்பாகும்.

திருப்பாவையின் சிறப்பு முதன்மையாக அதன் பக்திப் பெருக்கு மட்டுமல்ல, பாற்கோவை முழுவதும் விரவிக் கிடக்கும் கோதை மாதவன் மீதுகொண்ட தூய காதலமுதம் மற்றும் அதன் விளைவாய் அடியவருக்கும் அனைவருக்கும் அரும்பெரும் வரமாகக் கிடைத்த தமிழ் மணம்.

திருப்பாவையின் பக்தி, காதல், தமிழ் மணம் இந்த முச்சுவையும் தித்திக்கும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன.

கம்பராமாயணம்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் - சிறப்புகள்

- கம்பராமயணத்தை இயற்றிய பெரும்புலவர்.
- மகாகவி பாரதியார் - ‘கம்பர் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்”, ‘கல்வி சிந்த தமிழ்நாடு புகழ்க் கம்பர் பிறந்த தமிழ்நாடு”
- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை - ‘அம் புவியில் மக்கள் அமுதம் அருந்த வைத்த கம்பர் கவியே கவி”
- நாமக்கல் கவிஞர் - ‘தமிழ்மொழி தனக்கு ஒரு தவச்சிறப்பைத் தந்தது கம்பரின் கவிச் சிறப்பே”
- ‘கல்வியில் பெரியன் கம்பன்”, ‘கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்”

கம்;ப்;பர் - பெயர்:

- தஞ்சை மாவட்டத்துத் திருவழுந்தூர் என்னும் ஊரில் பிறந்தார்.
- உவச்சர் குலத்தில் (பூசாரிக் குலம்) பிறந்தமையால் பெற்ற பெயர்.
- கம்பர் குழந்தையாகக் காளிக் கோயில் கம்பத்தின் அருகே கிடந்தமையால் இப்பெயர் பெற்றார்.

- கம்பங் கொல்லையைக் காத்து வந்தமையால் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.
- காஞ்சிபுரத்தில் உள்ள இறைவனாகிய ஏகம்பன் தேவாரப் பதிகங்களில் 'கம்பன்' என்றே சூட்டப்படுகின்றான். அந்தப் பெயர் இவருக்கும் இடப்பட்டது என்பர்.

காலம்:

கம்பரது காலத்தைப் பற்றி மூன்று வேறு கருத்துகள் நிலவுகின்றன.
கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய காலம் கி.பி. 885 என்று அறிஞர்கள் கூறுவர். ஆவின் கொடைச் சகரர் என்ற பாடலை ஆதாரமாகக் கொண்டு கி.பி.978 என்று சிலர்

விளக்குவர். இது முதலாம் இராசராச சோழனுக்கு முன்பு இருந்த உத்தம சோழன் காலம் ஆகும். இந்தக் காலத்தையும் சில அறிஞர்கள் மறுத்துள்ளனர்.
கம்பரின் காலம் மூன்றாம் குலோத்துங்கன் வாழ்ந்த காலம் என்று அறிஞர் பலரும் கூறி உள்ளனர். மூன்றாம் குலோத்துங்கனின் காலம் கி.பி 12 ஆம் நூற்றாண்டு ஆகும்.
கம்பர் இயற்றிய நூல்கள்
வடமொழியில் வான்மீகி எழுதிய இராமாயணத்தைக் கம்பர் தமிழில் இராமகாதையாக இயற்றினார். ஏர் எழுபது, திருக்கை வழக்கம் சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, மும்மணிக் கோவை.
கம்பரும் சடையப்ப வள்ளலும்
வெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்தார். அதற்காக இராமாயணத்தில் சடையப்ப வள்ளலைக் கம்பர் பத்து இடங்களில் குறிப்பிட்டு உள்ளார். வள்ளலின் கொடை, பண்பு, புகழ், பெருமை முதலியவற்றை நன்றியோடு பாராட்டியுள்ளார்.
கம்பரும் இராமாயண அரங்கேற்றமும்
இராமகாதையைத் திருவரங்கத்தில் அரங்கேற்ற விரும்பினார். அங்குள்ளோர் தில்லைத் தீட்சிதர்கள் ஒப்புக் கொண்டால் அரங்கேற்றலாம் என்றனர். தில்லைத் தீட்சிதர்கள் மூவாயிரம் பேர். ஒரு சமயம் குழந்தை ஒன்று பாம்பு தீண்டி இறந்து போனது. இதற்காகத் தீட்சிதர்கள் ஒன்று கூடியிருந்தனர். கம்பர் நாகபாசப் படலம் பாடி குழந்தையை உயிர்ப்பித்தார். கம்பரைப் பாராட்டிய தீட்சிதர்கள் இராமாயணத்தை அரங்கேற்றம் செய்ய ஒப்புதல் தந்தனர்.

¶

## 4. நல்வாழ்வு

-மு. வரதராசனார்

நல்வாழ்வு மு.வ. என்பது மு.வரதராசனால் எழுதப்பட்ட ஒரு தமிழ் புத்தகம். இது வாழ்வியலின் அடிப்படை நெறிகள் மற்றும் நல்ல வாழ்வுக்கு வழி காட்டுதல் போன்றவற்றை விளக்குகிறது. "நல்வாழ்வு" என்ற நூலின் மூலம் மு.வ, வாழ்வின் அமைதி மற்றும் மகிழ்ச்சிக்கு வழி காணக்கூடிய நெறிகளை எடுத்துரைக்கிறார்

4.1 மு. வரதராசன் ((மு.வ):

- மு.வ என்பது மு. வரதராசனை சுருக்கமாக அழைப்பதற்கான பெயர்.

- இவர் 20 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர்.
- இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், சிறுகதைகள், புதினங்கள் என பலவற்றை எழுதியுள்ளார்.
- இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார்.
- இவரது இயற்பெயர் திருவேங்கடம்
- இவர் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் பிறந்தார்.

நல்வாழ்வு நூல்:

இந்த நூல் வாழ்வியலின் அடிப்படை நெறிகளைப் பற்றி பேசுகிறது. வாழ்வில் அமைதி மற்றும் மகிழ்ச்சிக்கு வழி காணக்கூடிய நெறிகளை எடுத்துரைக்கிறது. மு.வ.வின் அறிவுரைகள் மூலம் வாழ்வில் நல்ல வழிகாட்டுதல்களை பெற முடிகிறது. இந்நூலின் மூலம் மனிதர்கள் தங்களது வாழ்வை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

4.2 புலனடக்கம்

உலகம் ஒரே மண்ணுருண்டை தான். உலகத்து மக்கள் எல்லோரும் ஒரே குடு4ம்பம் தான். இதுதான் முடிந்த முடிவு. இதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனாலும் வெயிலும் மழையும் பயும் குளிரும் ஒவ்வொரு நாட்டில் கூடுதலாகவும், ஒவ்வொரு நாட்டில் குறைவாகவும் இருப்பதால் சிசில வேறுபாடுகள் ஏற்படுகின்றன. மக்களின் உள்ளத்துப் பண்புகள் பொதுவாக உள்ளன ஆனால் தட்பவெப்ப வேறுபாடுகளால் மக்களின் பழக்கவழக்கங்கள் நாடு தோறும் வேறு ஆக உள்ளன. தென்னிந்தியாவில் தண்ணீரைத் தொடுவது இன்பமாக உள்ளது. ஆகவே, அடிக்கடி முகம் கை கால் அலம்பும் பழக்கமும், தண்ணீரில் குளிக்கும் பழக்கமும் இங்கு உள்ளன. இங்கிலாந்து, ரஷ்யா முதலான நாடுகளில் சில மாதங்களில் தண்ணீரை தொடுவதற்கு அஞ்சுகிறார்கள். கை அலம்பினால் கை உறைந்து போகிறது. உணர்ச்சியற்றுப் போகிறது. அடிக்கடி கை, கால் அலம்பினால் நீ கொகிறது. சளி பிடித்து மூச்சுப்பை கெடுகிறது. ஆகவே, உணவு பண்டங்களைக் கையால் எடுத்து உண்டு கை அலம்புவதற்கு அஞ்சுகிறார்கள். கரண்டிகள், முள் பிடிகள், கத்திகள் முதலியவற்றை அந்த நாடுகளில் பயன்படுத்த வேண்டி உள்ளது. தண்ணீரை தொடுவது இன்பமாக உள்ள இந்த நாட்டில் அந்தப் பழக்கத்தை பின்பற்ற தேவையில்லை.

மார்பில் குளிர்ந்த சந்தனம் பூசிக்கொள்ளும் வழக்கம் நம் முன்னோர்களுக்கு இருந்தது. சட்டை அணியாமல் படுத்து ஓய்வு கொள்வதற்கு இந்த நாட்டு வெப்பநிலை இடம் தருகிறது. ஆனால் பக்காற்று கடுமையாக வீசும் ஐரோப்பியாவில் பல மாதங்கள் கழுத்திலும் மார்பிலும் ஈரக்காற்று படாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. கம்பளி சட்டைகளால் உடம்பை முழுவதும் மூடிக்கொள்ள வேண்டியுள்ளது. சட்டையின் கழுத்துப் பகுதி சிறிது திறந்தாலும் பனிக்காற்று கழுத்தில் பட்டு நோய் உண்டாகும் நாடு அது. சட்டையின் உள்ளே பனிக்காற்று புகுந்து உடம்பை நடுங்க செய்துவிடும். ஆகையால் சட்டையின் கழுத்துப் பகுதி சிறிதும் நெகிழ்ந்த வகையில் அந்த சட்டைக்கு மேல் இறுகி கழுத்து பட்டை தனியே கட்ட வேண்டியுள்ளது. அந்த பட்டைக்கட்டாமல் அங்கே குளிர்காலங்களில் வெளியே வர முடியாது.

ஆனால் மெல்லிய பருத்தி சட்டையும், வேர்வையால் நனையும் அளவிற்கு வெயிலும் புழுக்கமும் உள்ள நம் நாட்டில் அவ்வாறு கழுத்து பட்டை கட்டும் முறையை பின்பற்ற தேவையில்லை.

இவை போன்றே பழக்கவழக்கங்களே குளிர் நாடுகளுக்கும் வெப்ப நாடுகளுக்கும் வேறுபாடுகள் உண்டு. ஆகவே ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரின் பழக்க வழக்கங்களை கண்மூடித்தனமாக பின்பற்ற தேவையில்லை. மது குடிப்பதும் இவ்வகையில் வேறுபட்ட ஒரு பழக்கமாகும்.. நாட்டில் தண்ணீர் குடிப்பது குறைவு வெப்பநாட்டில் அடிக்கடி தண்ணீர் குடிப்போம். மிகுதியாகவும் குடிப்போம். குளிர் நாட்டில் மது குடிக்கும் போது சிறிது மதுவை சோடா உடன் கலந்து மெல்ல மெல்ல குடிப்பார்கள். சிறு கிண்ணத்தில் மதுவை பார்த்து நான் ஊறுகாய் சுவைப்பது போல் மெல்ல மெல்ல சிறிது சிறிதாக சுவைத்து பருகுவார்கள். அதனால் பெருந்தீமைவர்வதில்லை. அந்த நாட்டுச் சான்றோர்களும் மதுவை அவ்வளவாகப் பழிக்கவில்லை. மதுவின் போதையும் காமத்தின் போதையும் குளிர் நாட்டில் குறைவு. ஆகையால் அங்கெல்லாம் மதுவை ஒழிக்க வேண்டும் என்றும் பிற மங்கையருடன் பழகக் கூடாது என்றும் ஒழுக்க விதிகள் வகுக்கவில்லை. ஆயினும் அந்த நாட்டிலும் அறிவு மயங்குமாறு குடிக்கின்றவர்களை குடிகாரர் என்றே பழிக்கிறார்கள் ஒழுங்காக வாழாத கணவன் மனைவியரை காமுகர் என்று பழிக்கிறார்கள். இங்கு மது என்றால் நிறைய தண்ணீர் குடிப்பது போலவே குடித்து உடனே அறிவு மயங்குகிறார்கள். பெற்ற தாயும் பழிக்குமாறு நடந்து கொள்கிறார்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார். ஆகவே இந்த நாட்டுக்கு ஏற்ற முறையில் மதுவை விளக்குதலே தனிப்பட்டவர்களுக்கும் நல்லது. சமூகத்திற்கும் நல்லது. அவ்வாறே உடனே காமிழச்சி ஏற்படும் வெப்பமுள்ள இந்த நாட்டு நிலையை கருதி மற்ற பெண்களுடன் நெருங்கி பழகாமல் இருப்பதே நல்லது பழகி விட்டு பிறகு சில தொல்லைகளுக்கு ஆளாகி குடும்ப அமைதி கெடுவதை விட நெருங்கி பழகாமல் காத்துக் கொள்வதே நல்லது என்பது நம் முன்னோர்களின் கொள்கையாகும்.

கண் காது முதலிய ஐம்பொறிகளுக்கும் இன்பம் வேண்டும் அவ்வாறு இன்பத்தை நாடுவதிலும் நுகர்வதிலும் அளவு வேண்டும் முறை வேண்டும் மனம் போனபடி இன்பத்தை நாடுவது சுவைகளைப் பெருக்கி அளவு கடந்து உண்பதைப் போல் தீமையாய் முடியும் உடம்பின் நலத்துக்கு கெடுதி ஆகாத வகையில் புலன் இன்பங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் மனதின் நலத்துக்கும் கேடு இல்லாத வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும் புலன்களின் இன்பங்களை தேடுவதால் பிறருடைய பொல்லாப்பு தேடிக் கொள்ளவும் கூடாது. நம் கடமைகளுக்கு இடையூறு தேடிக் கொள்ளவும் கூடாது கடமைகளை செய்து முடித்த பிறகு சிறிது இன்பம் என்று விதி வைத்துக் கொள்ள வேண்டும் கடமைகளை சோற விட்டுவிட்டு குத்து சண்டையை காணவோ திரைப்படத்தை காணவோ ஓடக்கூடாது உடம்பும் மனமும் நன்றாக இருந்தால்தான் இன்ப வாழ்க்கை உண்டு ஆகவே உடம்புக்கு மனதுக்கோ தீங்காக உள்ள எந்த இன்பத்தையும் கொடுக்க வேண்டும் தீமை இல்லாத இன்பம் எவ்வளவோ இந்த உலகில் உண்டு எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா இறைவா என்று பாரதியார் வியந்து பாடுகிறார் பாலின் சுவை பழத்தின் இனிமை குளிர்ந்த நிலவின் ஒளி தென்றலின் மென்மை மலர்களின் நறுமணம் பறவைகளின் அழகு அவற்றின் இனிய ஒளி வளரும் பயிர்களின் பசுமை கலைஞர்களின் சுவையான கற்பனை புலவர்களின் இலக்கியம் நாதஸ்வரம் குழல் முதலியவற்றின் இன்னிசை ஆறு மலை சோலை முதலியவற்றின்

அழகிய காட்சிகள் குழந்தைகளின் மழலை இன்னும் இவை போன்ற தீமை கலக்காத எவ்வளவோ இன்பங்கள் எளிதில் கிடைக்கின்றன இந்த இன்பங்களை நாடுவதிலும் நுகர்வதிலும் ஒருவகை வனப்பும் இல்லை துன்பமும் இல்லை உடம்புக்கு தீங்கு இல்லை உள்ளத்திற்கும் தீங்கு இல்லை ஆனால் ஒரு சீட்டாட்டம் என்றால் நேரத்தோடு உணவு உண்ண முடியவில்லை போதிய நேரம் உறங்க முடியவில்லை கோபம் முதலிய தீய இயல்புகளை அடக்க முடியவில்லை இவ்வாறு உடம்புக்கும் உள்ளத்துக்கும் இடையூறான துன்பங்களை ஏன் தேட வேண்டும் அவற்றை வாழ்வுக்கு வேண்டாதவை என்று விட்டொழிக்க வேண்டும் ஒதுங்கி செல்ல வேண்டும்

புலன்களின் இன்பம் எதுவும் வேண்டாம் என்று அவற்றை ஒடுக்குவது புலன் ஒடுக்கம் அது தேவையில்லை புலன்களுக்கு உரிய இன்பங்களை நாடி என்னாலும் அலைவது புலன் அலைவு அதுவும் தேவையில்லை திருவள்ளுவர் கூறுவது புலநடக்கம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான தீமையற்ற சில இன்பங்களை தந்து புலன்களை தன் வசமாக ஆறுதல் தான் புலனடக்கம் புலன்கள் நமக்கு குற்றியலு செய்ய வேண்டும் புலன்களுக்கு நாம் தலைமை தாங்கி ஆள வேண்டும் அதுதான் நல் வாழ்க்கைக்குத் தேவையானது.

கடவுள் பெரிய நாடகம் நடத்துகிறார் அதுதான் அலகிலா விளையாட்டு என்ன கூறப்படுவது. உலகமே ஒரு பெரிய நாடக மேடை அந்த நாடகத்திற்கு பல நடிகர்கள் வேண்டும் நாம் எல்லாம் நடிகர்கள் நம் உடம்பில் கொண்டு நடிக்கிறோம் அந்த உடம்புகள் நன்றாக வளர்வதற்காக உணவு வகைகள் இயற்கையில் படைக்கப்பட்டிருக்கின்றன அந்த உணவுகளை நாம் உட்கொள்ள வேண்டும் அல்லவா அதற்காக அந்த உணவுகளில் சுவை அமைத்து அந்த சுவையை உணர்ந்து இன்புறவும் ஆற்றலை நாக்கிற்கு அமைத்திருக்கிறார் சுவையால் கவரப்பட்டு நாக்கு விரும்பி உண்கிறது உடல் வளர்கிறது நாம் மயங்கி அதற்கு இடம் தருகிறோம் உணவை உண்பதற்காக நமக்கு கடவுள் தரும் கோழியே சுவை மனித உடல் வளர்வதற்கு உரிய சுவையான உணவு சிலர் நாம் நாக்கு விரும்பாத கசப்பான வேப்பிலை முதலேவற்றால் ஆடுகளின் நாக்கிற்கு இன்பம் தந்து சுவையூட்டி உன்ன செல்கிறார் புழு விலங்கு பறவை முதலியவற்றிற்கும் இவ்வாறே வெவ்வேறு உணவுகள் சுவையாக உள்ளன கழுகு சுவையானவை வேறு கிளிக்கு சுவையானவை வேறு இவ்வாறு உலகில் உள்ளவை எல்லாம் வெவ்வேறு வகை உயிரினங்களுக்கும் சுவையூட்டி பயன்படுகின்றன ஆகவே உணவு வகைகளில் நாக்கு இன்பம் பெறுகின்றது என்றால் படைத்தவன் அமைத்த மயங்கி எனக்கு நாம் ஆளாகி நாடகம் ஆடுகிறோம் என்பது பொருள் இவ்வாறே மற்ற புலன்களின் இன்பங்களை நாடி உழைக்கும் போதும் நாம் அதன் மயக்கத்திற்கு ஆட்பட்டு நடிப்பாகவே உள்ளது இந்த உண்மையை உணர்ந்தால் புலன்களின் இன்பங்களை நாடி அலையும் அளவையைக் குறைத்து அளவிற்கு வைத்துக் கொண்டு வாழ்வதே போதும் என்று தோன்றும் அதை விட்டு மேலும் மேலும் அலைச்சலை பெருக்கி கொள்வதற்காக புலன்களின் இன்பத்தை பெருக்கிக் கொள்வதில் பயன் இல்லை வாழ்வு வேண்டும் அதற்காக உடல் வேண்டும் கடவுளின் நாடகத்திற்கு கருவியாக பயன்பட வேண்டும் என்ற அமைதியான உணர்வோடு ஆசைகளையும் அல்லல்களையும் பெருக்கிக் கொள்ளாமல் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

4.3 மனவலிமை வேண்டும்

நம் வாழ்க்கையில் மூன்று கூறுகள் உள்ளன ஒன்று உலகத்தால் சுற்றுப்புறத் தான் அமையும் வாழ்க்கை பகுதி மற்றொன்று உடம்பால் அமையும் பகுதி இன்னொன்று மனதால் அமையும் பகுதி

பெரும்பாலானார் உலகத்தை சுற்றுப்புறத்தை திருத்துவதில் முனைந்திருக்கிறார்கள் உடம்பை திருத்துவதில் சிறு முயற்சியை செய்கிறார்கள் மனதை திருத்துவதற்கு முயற்சி செய்வதில்லை இது தலைகீழான நிலை எப்படி என்று பார்ப்போம்

இந்த உலகம் சுற்றுப்புறம் மிகப் பெரியது தனிமனிதன் அதில் மிகச் சிறுசிறு கூறாகவே ஒருவன் எண்ணியபடி உலகத்தை திருத்தி விட முடியாது தவிர மனிதனுடைய சக்தியை விட காற்று மழை வெள்ளம் கடல் எரிமலை முதலிய இயற்கை கூறுகளின் சக்தி மிகப் பெரிது புயலோ பூகம்பமோ நிகழும் போது இயற்கையின் முன் மனிதன் எவ்வளவு சிறியவன் என்று எண்ணத் தோன்றுகிறது நோ கிருமிகளை எதிர்த்து மனிதன் எவ்வளவு போராட வேண்டி உள்ளது சாதி மத பூசல் அரசியல் கட்சி பூசல் மூடநம்பிக்கை கோளாறுகள் இவை போன்ற சமுதாயக் குறைகள் எவ்வளவோ உள்ளன எவ்வளவோ உத்தமர்களின் அறிவுரைகளை எல்லாம் உலகம் விழுங்கி ஏப்பமிட்டு கொண்டிருப்பது போல் உள்ளது பலர் உலகத்தை திருத்துவது அரிய செயலை எளியது என்று தவறாக எண்ணி விடுகிறார்கள் செய்யத் தக்க மற்ற நல்ல கடமைகளை கைவிடுகிறார்கள்

உலகத்தை திருத்த முயற்சிக்குக் கூடாது என்று சொல்லவில்லை அது எளியது என்று தப்பு கணக்கு இட்டு ஏமாறக்கூடாது என்பதை கருத்து

உலகத்தை திருத்துவதை விட உடம்பை திருத்துவது எளியது எவ்வாறு என்றால் உடம்பு ஓரளவு நம்முடைய கையில் உள்ளது தகுந்த உணவு நல்ல பயிற்சி உளநடக்கம் தக்க மருத்துவம் முதலியவற்றால் ஓரளவு உடம்பு திருத்துவதை காண்கிறோம் ஆயினும் உடம்பு முழுவதும் நம் வசப்பட்டது என்று கருதக்கூடாது அது இயற்கையின் தட்பவெப்பதால் கட்டுப்படுவது வெளியே உள்ள தூசி புகை முதலியவற்றால் மாறுவது தீய காற்று கெட்ட நீர் முதலியவற்றால் கெடுவது நோய் கிருமிகளா தாக்கப்படுவது அல்லாமலும் உடம்பு கருவில் வளரும் போதே பெற்றோர்களின் உடம்பில் இருந்து சில தீமைகளையும் பெற்று வளர்கிறது ஆகவே பாதி அளவிற்கு நாம் முயற்சிக்கு உட்பட்டதாகவும் உள்ளது ஆகையால் உடம்பைக் காக்கும் கடமையை ஒருவகை நம்பிக்கையோடு மேற்கொள்ள வேண்டும் ஆனால் இவ்வகையில் முயற்சி எடுத்துக் கொள்வோம் ஒரு சிலரே உலகத்தை திருத்த வரிந்து கட்டி ஓடுகின்றவர்களும் உடம்பை திருத்த முயல்வதில்லை.

மூன்றாவதாக உள்ளது மனம் அதை செம்மைப்படுத்திக் கொள்ள முயல்வது மிக மிகக் குறைவு விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இந்த முயற்சியை செய்கிறார்கள் உண்மையாக பார்த்தால் இந்த துறையில் தான் பலரும் இயல வேண்டும் ஏனென்றால் இங்கு தான் முயற்சிக்கு ஏற்ற கூலி உண்டு மனதை பொருத்தவரையில் பரந்த உலகத்தின் தாக்குதல் குறைவு இயற்கையின் தாக்குதல் மிகக் குறைவு உடம்பில் தாக்குதலும் ஓரலவே உள்ளது எந்த சூழ்நிலையிலும் இருந்தாலும் எப்படிப்பட்ட உடம்பினுள் இருந்தாலும் ஒருவர் விடாமல் முயன்றால் விரும்பிய படி மனதை வைத்துக் கொள்ள முடியும் காந்தியடிகள் இளமையில் எவ்வளவோ பயம் கொள்ளியாக இருந்தார் பிறகு அஞ்சாமையின் திருவுருவாக விளங்கினார் தன்னலம் நிறைந்த மனம் தியாகம் நிரம்பிய மணமாக ஆக முடியும்

ஒழுக்கத்தில் நம்பிக்கை அற்ற மனம் முழுக்கத்தில் உறுதி பெற முடியும் கண்டபடி அலையும் மனம் புத்தர் மனம் போல் அமைதி பெற முடியும் சோம்பலுக்கு இடம் தரும் மனம் விடாமுயற்சியை போற்றும் மனம் ஆக முடியும் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்பது மனதை பொருத்தவரையில் முழுவதும் நடக்கக்கூடியது உடம்பைப் பொறுத்தவரையில் ஒரு பாதியை நடக்கக் கூடியது உலகத்தை பொறுத்தவரையில் பல ஆயிரத்தில் ஒரு சிறு பங்கை நடக்கக் கூடாது அப்படி இருந்தும் மனதை செம்மைப்படுத்திக் கொள்ள முயல் போல் ஒரு சிலர் ஆகவே இருப்பது வருந்தத்தக்கது.

மனம் போல் வாழ்வு மனத்தினால் எண்ணி தானே வந்தது இவ்வுலகம் ஆகும் மனம் இங்கேயே நரகத்தை உண்டு பண்ணிக் கொள்ள முடியும் சொர்க்கத்தை படைத்துக் கொள்ள முடியும் வாழ்வே மனத்தின் தன்மையை ஒட்டியதுதான் இன்பமும் துன்பமும் மனநிலைக்கு ஏற்றவாறு அமையும் இவ்வாளவெல்லாம் மனம் அடிப்படையாக இருந்தும் மனதை பண்படுத்துவதற்கு பலர் முயல்வதில்லை அதனாலேயே உத்தமர்களின் அறிவுரைகள் பலருக்கு பயன்படுவதில்லை.

மனம் பண்படுவதற்கு வழி என்ன நமக்கு முன் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாறுகளை படிக்க வேண்டும் அவர்கள் சொன்ன சொற்களை அல்லது எழுதி வைத்த எழுத்துக்களை திரும்பத் திரும்ப படித்து உணர வேண்டும் கெட்ட காற்றிலும் நீரிலும் உள்ள நோக்கிருமிகள் நம் உடம்பில் புகாமல் ஊசி போட்டும் மருந்து உண்டும் காத்துக் கொள்வது போலவே கெட்ட நூல்களிலும் கெட்ட கலைகளிலும் மனத்தின் பண்பாட்டுக்கு ஆகாத நோய் கருத்துக்கள் உள்ளன அவை மனதில் போகாமல் காத்துக் கொள்ள வேண்டும் அவ்வாறு காப்போம் ஆனால் கட்டாயம் குறிக்கோளை அடைய முடியும் உலகத்தையும் உடம்பையும் திருத்துவதை விட இவ்வாறு மனதை பயன்படுத்துவது தான் கருதியை படி கை கூடுவது என்பதை உணர வேண்டும்.

பரிபாடல் என்ற பழைய நூலில் ஒரு புலவர் கடவுளிடம் தம் வேண்டுகோளை சொல்லி முடிக்கும் போது ஐயனே உன்னிடம் நான் வேண்டி கேட்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல அன்பும் அருளும் அறம் ஆகிய இந்த மூன்றையுமே கேட்கின்றேன் என்கிறார்.

யாம் இரப்பவை....

இவ்வாறு அவர் வேண்டிக் கொள்வதன் அடிப்படையில் மேற் சொன்ன உண்மை உள்ளது அதாவது உலகத்து தொடர்பான பொன் பொருள் போகம் இவற்றை நாம் நினைத்தபடி அடைய முடியாது ஆனால் மனதின் தொடர்பான அன்பு அருள் அற உணர்வு இவற்றை விரும்பி முயன்றால் முயற்சிக்கு ஏற்ப அடைய முடியும் என்ற உண்மையை உணர்ந்தே அவ்வாறு வேண்டினார்.

இந்த நம்பிக்கை ஏற்பட்டால் நமக்கு பொறுமை இயல்பாக அமையும் பொறுமை என்றால் பிறர் கூறும் கொடுஞ்சொல்லை கேட்டு பொருத்தலும் பிறர் செய்யும் துன்பத்தை தாங்கி பொறுத்தலும் மட்டும் அல்ல உடனடியாக விளையும் சிறு பயனை நாடி அவசரப்படாமல் நாளடைவில் விளையும் பெரும் பயனை விரும்பி பொறுத்திருக்கும் பொறுமையும் நமக்கு இயல்பாக அமையும்.

பிறர் கொடுஞ்சொல் சொல்வதைக் கேட்டவுடன் நம் மனம் கொதிக்கிறது அதற்கு ஈடாக நாமும் சினம் கொண்டு கொடுஞ்சொல் சொல்லி பழிக்கிறோம் ஏன் அதனால் உடனே ஒருவகை திருப்தி நிறைவு ஏற்படுகிறது பழிக்குப் பழி வாங்கி விட்டதாக ஒரு மனநிறைவு

உண்டாகிறது எண்ணிப் பார்த்தால் அது சிறு பையன் தான் கொஞ்சம் பொறுத்து இருந்தால் அதைவிட பெரிய பையன் ஏற்பட்டிருக்கும் உடனடியாக விளையும் பயனை நாடினோம் அதனால் நின்று விளையும் நல்ல பயனை இழந்தோம் உடனே கொடுஞ்சொல் சொல்லிவிட்ட காரணத்தால் பழித்தவரின் உறவை இழந்தோம் அவருடைய பகையைத் தேடிக் கொண்டோம் பொறுத்திருந்தால் அவரே மனம் மாறி இருக்கலாம் நம்மிடம் அவரே வந்து வருத்தத்தை தெரிவித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம் அவருக்கும் மற்றவர்களுக்கும் நம்மிடம் மறுபடியும் அன்பு ஏற்பட்டிருக்கும் பயனை உடனடியாக விரும்பிய காரணத்தால் இவ்வளவும் இழந்து விட்டோம் திருவள்ளுவரும் இதை எவ்வளவு அழகாக சொல்கிறார்

ஒருத்தருக்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார் துணையும் புகழ்

பழிக்கு பழி என்று ஒருத்தவர்களுக்கு உடனடியாக கிடைப்பது ஒரு நாள் இன்பம் தானா அவ்வாறு அன்றி பொறுமையுடன் இருப்பதற்கு எவ்வளவோ மனவலிமை வேண்டும் அந்த மன வலிமை பாடுபட்டால் பெறக் கூடியது துறவிகளின் மன வலிமையை விட இந்த மன வலிமை சிறந்தது என்பது திருவள்ளுவரின் கருத்து உணவு உண்ணாமல் நோன்பு நோற்பவர்களை விட பிறருடைய கழுண் சொற்களைப் பொறுத்திருப்பவர்கள் பெரியவர்கள் என்கிறார் அவர்.

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும் இன்னா சொல் நூற்பாறின் பின்

அவ்வளவு கோபம் கொள்வதற்கு மனவலிமை தேவை இல்லை கோபம் வராமல் தடுத்துக் கொள்வதற்கே மனவலிமை வேண்டும் பொய் சொல்வதற்கு மனவலிமை தேவை இல்லை ஆனால் யார் வேண்டுமானாலும் எப்பொழுதும் பொய் சொல்ல முடியும் ஆனால் என்ன காரணத்திற்காகவும் பொய் சொல்லாமல் உண்மையே பேசி உண்மையாக நடப்பதற்கு மனவலிமை வேண்டும் சூது ஆடுவதற்கு மனவலிமை வேண்டியதில்லை ஆட்டத்தில் பழக்கம் இருந்தால் போதும் ஆனால் சூது ஆடாமல் அந்த நேரத்தை படிப்பு தோட்ட வேலை முதலியவற்றில் செலவிடுவதற்கு மனவலிமை வேண்டும் சூதாடும் இன்பம் நிலையற்ற சிறு சுகம் என்றும் படிப்பு முதலியவை நிலையான இன்பம் என்றும் உணர்ந்து தெளிந்தால்தான் அந்த மன வலிமையை பெற முடியும்.

பண்டிகை நாள்களில் மற்றவர்களைப் போல் கண்மூடி நடந்து ஆரவாரமாக வாழ்வதற்கு மனவலிமை தேவையில்லை அந்த நாள்களில் கடவுளின் ஆட்சியை நினைத்து போற்றி அமைதியாக உணர்வதற்கு தான் மனவலிமை வேண்டும் திருவிழா நாட்களில் ஊரை விட்டு ஊருக்கு போய் பஸ் நெரிசலுக்கும் ரயில் நெரிசலுக்கும் ஆளாகி மந்தையோடு மந்தையாய் அலைச்சலை பெருக்குவதற்கு மனவலிமை தேவை இல்லை அமைதியாக இருந்து வழிபாடு நடத்தி நல் உணர்வை வளர்த்து சிறந்த சிந்தனைகளில் மூழ்குவதற்கு தான் மனவலிமை தேவை கண்டபடி கடமைகளை பெருக்கிக் கொண்டு எதையும் செம்மையாக செய்யாமல் பலவற்றில் ஈடுபட்டு அலைவதற்கு மனவலிமை தேவை இல்லை நேரம் வேலைகளில் பலவற்றைத் தள்ளி தக்க சிலவற்றை மட்டும் மேற்கொண்டு அவற்றை செம்மையாக செய்வதற்கு தான் மன வலிமை வேண்டும் இவ்வாறே நம்முடைய ஆத்திர செயல்களுக்கும் பரபரப்பான அலைவுகளுக்கும் கண்மூடி போக்குகளுக்கும் காரணம் மனவலிமை இல்லாத குறையே என்பதை உணர வேண்டும் மனவலிமை ஏற்பட ஏற்பட ஆத்திரமும் அலைச்சலும் குறைந்து தெளிவு வளர்வதை காணலாம் அமைதி வளர்வதை காணலாம் இவ்வளவு நல்ல பயன் விலைக்கும் மனவலிமை என்பது திட்டுவதற்கு அருமையானது என்று அஞ்சி தயங்க வேண்டியதில்லை உலக செல்வாக்கை விட உடம்பின் ஆட்சியை விட மனவலிமை தான்

முயற்சியால் பெறக்கூடியது என்று உணர வேண்டும் முயற்சிக்கு ஏற்ற கூலி தரும் ஒரு துறையை வாழ்விற்கு அடிப்படையான ஒரு துறையை அருமையானது என்று விட்டுவிடக் கூடாது

அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்

முன்னோர்கள் ஏற்படுத்திய நோன்புகள் விரதங்கள் மனவலிமை பெறுவதற்கு உதவியாக ஏற்படுத்தியவைகளே ஆனால் அவற்றின் நோக்கம் பெரும்பாலும் நிறைவேற்ற வில்லை ஏதோ அச்சம் அல்லது தவறான நம்பிக்கை காரணமாக அவற்றை பலர் மேற்கொள்வதால் தக்க பயன் விளைய வில்லை நோன்புகளும் தவறான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன சில நாட்களில் சில வேலைகளில் உணவை விட்டு இருந்தால் சில வகை உணவுகளை விடுதல் முதல்ல என நம் நாட்டிற்கு அடிமையாகாமல் ஆளும் தலைமை பெறுவதற்கு அமைந்தவை ஆனால் அந்த நாள்களை எப்படியோ கழித்து அடுத்த நாளே அந்த உணவை மிகுதியாகவே நுகரும் போக்கு உள்ளது.

வயது ஆனவர்கள் காசிகோ பிற இடங்களுக்கும் போய் வந்த பிறகு ஏதாவது ஒன்றை விட்டுப் பழகுவதற்கு வழி வகுத்தார்கள் அதுவும் மூடநம்பிக்கையாய் முடிந்து பயன்படாமல் போயிட்டு அவ்வாறு போய் வந்தவர்களில் சிலர் முருங்கை இலையில் சாப்பிடுவதை விட்டு வாழை இலையில் உண்பதை மேற்கொள்கிறார்கள் இதில் என்ன பயன் தட்டுகளில் உண்டு என்பதை விட்டு இவைகளில் மட்டுமே உணவை தொடங்குகிறார்கள் இதனாலும் பயனில்லை சிலர் வாழக்காய் கத்திரிக்காய் முதலியவற்றை ஒன்றை விட்டு விட்டு அதை நோன்பாக மதித்து மகிழ்கிறார்கள் நாக்கை அடக்குவதற்காக மனவலிமை மிகுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பழக்கம் இது என்பதை மறந்து விடுகிறார்கள் உடம்புக்கு தீமையானதும் புலன்களுக்கு சுவையானதும் ஆகிய ஒன்றை விட்டால் பயன் விளையும் மனதை வலிமையாக உடையதாக ஆக்கி பழகுவதற்காக ஒரு நோன்பை நாமாகவே மேற்கொள்வதற்கு முன்னோர்கள் வழிவகுத்தார்கள் வற்புறுத்தலால் அச்சுறுத்தலால் மேற்கொள்ள நோன்பை விட நாம ாக முன்வந்து மேற்கொள்ளும் நோன்பை நல்லது அதனால் மனதுக்கு நல்ல பயிற்சி ஏற்படும் ஆனால் முருங்கை இலையையும் கத்திரிக்காயையும் விடுவதால் பயனில்லை கோபத்தையும் ஆத்திரத்தையும் குறைத்து குறைக்கும் வகையில் பேசா நோன்பு உண்ணார் நோன்பு முதலைவற்றை மேற்கொள்வது பயன் தரும் அல்லது புகைப்படக்கம் குடிப்பழக்கம் சூதாட்ட பழக்கம் காலையில் எழுதாத சோம்பர் பழக்கம் முதலியவற்ற இருந்தால் அவற்றுள் ஒன்றை விடும் நோன்பை கொள்ள வேண்டும் அத்தகைய நோன்பு பயன் தரும் நம் ஆத்திரம் கோபம் முதலிய தீய இயல்புகளை பற்றி காலையில் வழிபாட்டின் போது நினைத்து உறுதி கொள்ளும் அன்றாட பயிற்சியும் பயன் தரும் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி நாட்குறிப்பு எழுதும் பயிற்சியும் பயன் தரும் இவை எல்லாம் படிப்படியே மன வலிமை வளர்வதற்கு உதவி புரிவன ஆகும்.

4.4 பண்பாடு

நாம் வாழும் காலம் சிக்கலான காலம் காலத்தில் அன்புடைய பெற்றோர்களும் மக்களோடு நெருங்கி பழகி அன்பாக வளர்ப்பதற்கு வாய்ப்பு குறைவு பெற்றோர்களுக்கு வெவ்வேறு கடமைகள் மிகுந்து விட்டன வீட்டில் இருந்து வாழும் நேரம் குறைந்துவிட்டது ஆகவே பெற்ற மக்களில் உள்ளத்தோடு இயந்து வாழ்ந்து அவர்களை பண்படுத்த முடியவில்லை கல்விக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களோடு உள்ளம் ஏந்து பழக முடியாத காலம் இது மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது பாடங்கள் கூட வருகின்றன மணிக்கணக்கு பார்த்து வகுப்புகள் எந்திரம் போல நடத்தி முடிக்க வேண்டி உள்ளது பரிட்சை பாடங்களுக்காக மாணவர்களையும் சம்பளத்திற்காக ஆசிரியர்களையும் கல்விக்கூடங்கள் ஒன்று சேர்க்கின்றன பிரித்து விடுகின்றன ஆகவே மனங்களை பண்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்கும் முன்போல் இல்லை

புத்தகங்கள் நல்ல நூல்கள் ஓரளவிற்கு அந்தப் பயனை விளைவிக்கின்றன ஆனால் எப்படியோ இளமையிலேயே பண்பட்ட சில மனங்களுக்கு தான் அந்த நூல்களும் பயன்படுகின்றன புத்தகங்கள் மிகப் பரவலாக பல்கி விட்டன சிலவற்றை ஆழ்ந்து படித்து அவற்றையே நம்பி பயன்பெறும் பழங்காலம் போய்விட்டது புத்தகங்கள் பெருகி விட்டமையால் பலவற்றையும் மேற்கோக்காக படிப்பதற்கு நேரம் உள்ளது ஆகவே நல்ல நூல்களுக்கும் மனங்களுக்கும் தொடர்பு குறைகிறது புத்தகங்களை விட வார இதழ் முதலானவை கவர்ச்சி மிகுந்தவை ஆகிவிட்டன படித்து மறப்பதற்கு என்று படைக்கப் படுபவை அவை ஆகவே நெஞ்சில் ஆழ்ந்து பதிவது என்ற நிலைக்கு அப்பாற்பட்டு உள்ளன அந்தந்த வாரத்தோடு அவற்றின் பயன் முடிந்து போகிறது வானொலியும் அந்தந்த மணியோடு பயன் முடியும் இயல்பு உடையன தொலைக்காட்சியின் டெலிவிஷன் பயணம் அப்படிப்பட்டது இவ்வாறு இவை பரவலாக பெருகி விட்டமையால் வளரும் மனதிற்கு பரபரப்பும் வேகமும் அமைகின்றனவே தவிர பண்பாடும் ஆழமும் அமைவதில்லை.

தக்கச் சான்றோர்களை அடுத்து பழகி பண்படும் வாய்ப்பும் குறைகிறது. மக்கள் தொகை பெருகிய நகரங்களின் நெருக்கடியால் யார் எப்படிப்பட்டவர் என்ற உண்மை உணர முடியாத நிலைமையில் உள்ளது விளம்பர வளர்ச்சியால் கெட்டவர்கள் செல்வாக்கு பெற்று உயரமுடிகிறது . நல்லவர்கள் செல்வாக்கு இழந்து மூளையில் ஒடுங்கவும் நேர்கிறது ஆகையால் நல்லவர் கெட்டவர் போல் தோன்றவும் கெட்டவர் நல்லவர் போல் விளங்கவும் வாய்ப்பு உள்ளது இவற்றையெல்லாம் கடந்து உண்மையாகவே நல்லவர் ஒருவர் வாய்த்தாலும் அவருடன் நெருங்கி பழக இக்கால வாழ்க்கை சூழல் இடம் தருவதில்லை அவர்களுக்கும் கடமைகள் பல நமக்கும் கடமைகள் பல பழகி பண்படுவதற்கு தேவையான ஓய்வும் அமைதியும் கிடைப்பதில்லை.

இழுத்தல் உடை ஊழி ஊற்றுகோல்.....

என்று திருவள்ளுவரும் இயற்றிய ஒழுக்கமுடையவர் கிடைப்பதற்கு அரியராக உள்ளனர்.

திரைப்படம் முதலானவை பணம் என்னும் பேயால் ஆட்டி வைக்கப்படுகின்றன. லட்சக்கணக்கில் முதலிட்டவர்கள் அறத்தையும் பண்பாட்டையும் பொருட்படுத்தினால் அடியோடு அழிந்து போகும் நிலையும் உண்டு அதனால் சுவைகளையும் கவர்ச்சிகளையும் பெருக்கி புலன்களுக்கு விருந்து அளிப்பதிலேயே முதலீடு செய்தவர்கள் கருத்தாக இருக்கிறார்கள் அவற்றால் பொழுது போக்க வாய்ப்பு பெருகி உள்ளதை தவிர பண்படுவதற்கு வாய்ப்பு பெருகவில்லை புலன் அடக்கம் இல்லாதவர்கள் அவற்றால் நெறி தவறுவதற்கு வேகம் பெறுகிறார்கள் பிறகு அவர்களை திருத்துவது அரிது ஆகின்றது.

போக்குவரத்து வேகம் மிகுந்து விட்டமையால் உலகம் ஒரு சிறு நாடு போல் ஆகிவிட்டது சிலரோடு நெருங்கி பழகும் பழைய வாழ்வு இல்லை பலரோடு மேற்போக்காக பழகும் புதிய வாழ்வு பெருகிவிட்டது யந்திரங்கள் முன்னேறி விட்டன. தொழிற்சாலைகளும் பெருகிவிட்டன மக்களிடையே பரபரப்பு மிகுந்து விட்டது எத்தனை செய்திகளை பரப்பும் தாருங்கள் வளர்ந்து விட்டன ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான செவிகளை எட்டும் வானொலி முதலை கருவிகள் இவற்றிற்கு ஏற்ப அரசியல் அமைப்புகளும் விளம்பரங்களும் பெருகி விட்டன ஆகவே மனித இனம் சிறு சிறு குட்டைகளாக இருந்த நிலை மாறி பெரிய பெரிய குளங்களாக இருந்த நிலையில் கடந்து கடல்களாக பறந்து விளங்க காண்கிறோம். அதனால் அரசியல் முதலில் அமைப்புகள் வலுத்து விட்டன. மனித உள்ளங்கள் மெலிந்து விட்டன.

ஒரு சில எந்திரங்கள் உலகையே அழித்துவிட முடியும் ஒரு சிலரின் ஆணவம் மனித இனத்தையே ஆட்டிப் படைக்க முடியும் அமைப்புகளை கைப்பற்றுவோர்க்கே ஆற்றல் திறள்கிறது. பண்பாட்டை போற்றுவோர்க்கு ஒரு சிறு மூளையை கிடைக்கிறது அமைப்புகளை கைப்பற்ற உதவும் தேர்தல் முதல் இவைகளையும் அவற்றிற்கு உதவி புரியும் செய்தித்தாள் முதலிய விளம்பர கருவிகளையும் இளைஞர்களின் உள்ளங்கள் நாடுகின்றன பண்பாட்டை வளர்க்க உதவும் நூல்கள் சிலவற்றையும் மனிதர் சிலரையும் அந்த உள்ளங்கள் நாடுவது குறைகிறது..

ஹிப்பிகள் என்னும் சிலர் கூட்டம் கூட்டமாய்ப் புறப்படுவதைப் பார்த்து இந்த நாகரீக வேகத்திற்கு எதிர்ப்பு தோன்றியுள்ளதாக எண்ணுகிறார்கள் இது தவறு எதிர்ப்பு மேற்குறித்த அமைப்புகளுக்காக தோன்றியுள்ளது என்று நம்பக் கூடாது கல்விக்கூடங்களிலும் தொழில்கூடங்களிலும் மனம் போனவாறு வாழ முடியாத கட்டுப்பாட்டை எதிர்க்கும் எதிர்ப்பு என்று அதைக் கொள்ள வேண்டும் கட்டுப்பாடு வற்புறுத்தல் இவற்றிற்கு என்றும் எதிர்ப்பு உண்டு அவ்வாறு தோன்றியுள்ள எதிர்ப்பே அது அந்த எதிர்ப்பில் நன்மைக்கு ஆக்கமான திருப்பத்தைக் காண முடியவில்லை தாமாக உரிமைடன் ஒரு நல்ல நெறிக்கு கட்டுப்பட்டு பண்பாட்டோடு வளரும் வளர்ச்சியில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை ஆகையால் அதனால் பயன் விளையும் என எதிர்பார்க்கக் கூடாது

பொதுவாக இக்காலம் தீமைக்கு வேகம் ஊட்டுகிறது நன்மைக்கு உரம் தருவதில்லை இயல்பாகவே நல்லது ஒட்டிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டியதாக உள்ளது தீமை தானாகவே ஒட்டிக் கொள்கிறது இக்கால சூழ்நிலையோ தீமை பெருகுவதற்கு வழி வகுத்துள்ளது நன்மை வளர்வதற்கு துணை புரிவதில்லை இந்நிலையில் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புவோர் தாமாக விடாமுயற்சி மேற்கொண்டால்தான் வெற்றி பெற முடியும் ஆனால் ஒன்று நல்வாழ்வு மனதுக்கு அமைதியும் இன்பமும் தரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் பிறகு எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும் அவற்றைக் கடந்து முன்னேற முடியும் பொல்லாத சூழ்நிலையில் சிக்குண்டிருந்தாலும் ஒரு சில நல்ல நூல்களின் துணைக் கொண்டு பண்பட்டு விளங்க முடியும்

ஒரு குடும்பத்தில் மனைவியாகவும் தாயாகவும் இருந்து கணவனுக்காகவும் மக்களுக்காகவும் சுவையாக சமைத்து உணவு தந்து அவர்கள் மகிழ்ந்து சுவைத்து உண்பதைக் காண்கிறாள் ஒருத்தி. அவளுடைய மகிழ்ச்சி ஈடில்லா பெரிய மகிழ்ச்சி ஆனால் உணவுக் கடையில் பல நூறு மக்களுக்கு உணவு விற்பதற்காக கூலிக்குச் சமைக்கிறான் சமையல் காரன். எனக்கு

இது வருது அவன் அப்படிப்பட்ட மகிழ்ச்சியை பெற முடியாது அவன் பெரும் மகிழ்ச்சி அவனுக்கு தரப்படும் கூலி அல்லது சம்பளத்தை ஒட்டியது சமையல் அறையில் வேலையை விரைவில் முடித்து அரை மணி கால் மணி முன்னதாக விடுதலைப் பெரும் வாய்ப்பு கிடைத்தால் அன்று அவனுடைய மகிழ்ச்சி சிறிது மிகுதியாக இருக்கும் இன்றைய சமுதாயத்தில் எந்தத் தொழிலிலும் ஒருவன் பெரும் மகிழ்ச்சி அந்த சமையல்காரன் பெறும் மகிழ்ச்சி போன்றதாக ஆகிவிட்டது இன்றைய அலுவலகங்களும் வாணிப நிலையங்களும் தரும் கூலிக்காக அல்லது சம்பளத்திற்காக தொழில் செய்துவிட்டு மணி கணக்கை பார்த்து ஓடி வர எல்லோரும் விரும்புகிறார்கள் எல்லாம் எந்திரம் போன்ற அமைப்புகள் அந்த எந்திரத்தில் சிறு கருவியாக உழைப்பதில் இன்பம் காண முடியவில்லை விடுமுறை நாள் நெருங்குவதை உணர்ந்து மகிழ்கிறார்கள் அந்த தொழிலில் இருந்து ஒரு நாள் இரு நாள் விடுமுறை பெறுவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள் அன்று எங்கேயும் வெளியிடத்திற்குச் சென்று பொழுது போக்குவதில் இன்பம் காண்கிறார்கள் இல்லை ஆனால் கடமைகளையும் கடிகாரத்தையும் கவலைகளையும் மறப்பதற்காக குடிப்பதில் மூழ்கி மகிழ முயல்கிறார்கள் வேறு வகையில் மகிழ்ச்சிக்கான முடியாமல் வருந்துகிறார்கள் பழங்காலத்து தச்சன் ஒரு வண்டியை செய்து முடிப்பதில் மகிழ்வான் செய்து முடித்த வண்டி நன்றாக ஓடுவதை காணும் போது மகிழ்வான் அழகான ஒரு அகப்பை செய்வதிலும் மகிழ்ச்சி காண்பான் ஒரு வீட்டிற்கு வாசல் நிலையை அழகாக செய்து நிற்கலை வைப்பதிலும் மகிழ்ச்சி காண்பான் அப்படிப்பட்ட மகிழ்ச்சி எல்லாம் இன்றைய பெரிய தொழிற்சாலையில் ஒரு சிறு மனித சக்தியாக இருந்து உழைக்கும் தச்சனுக்கு கிடைப்பதில்லை இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் தொழில் செய்பவன் பெரும் மகிழ்ச்சியை மிகக் குறைந்துவிட்டது ஆகையால் கள்,சாராயம் முதலியவற்றை குடித்து மகிழ்வதை நாடுதல் மிகுந்து விட்டது.

அதனால் பழங்கால வாழ்க்கைக்கு திரும்பி செல்லலாம் என்றால் அது முடியாது ஆகவே குறைந்து வரும் தொழில் இன்பத்திற்கு ஈடு செய்ய என்ன செய்வது?

எல்லா நாடுகளிலும் விளையாட்டுகளை பெருக்கி ஆங்காங்கே பதினாயிரக்கணக்கில் 3000 கணக்கில் மக்கள் கூடி பார்த்து கைகொட்டி ஆரவாரம் செய்து மகிழ்வதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்கள் ஆடல் பாடல் கலைகளைப் பெருக்கியும் திரைப்படங்களை வளர்த்தும் ஒவ்வொரு ஊரிலும் அவற்றைக் கண்டு மகிழ ஏற்பாடு செய்கிறார்கள். பிறர் விளையாடுவதை பார்த்து கைகொட்டி மகிழ்வதை காட்டிலும் தாமே விளையாடும் சிறு அமைப்புகள் நல்லவை பிறருடைய ஆடல் பாடல்கள் கண்டு கேட்டு மகிழ்வது நல்லதே இயலுமானால் தாமே கலைத்துறையில் ஈடுபடக்கூடிய சிறு அமைப்புகள் நல்லவை அவ்வாறே எவ்வளவு பெரிய தொழில் கூடத்தில் வேலை செய்த போதிலும் தம் வாழும் வீ...

### 4.5 பொதுமை அறம்

குடும்பத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் அதுதான் நல்ல குடும்பம் சிலர் உழைக்க சிலர் உழைக்காமல் அவர்களின் உழைப்பின் பயனை உண்டு சோம்பலாக இருப்பதால் அது போற்றத்தக்க குடும்பம் ஆகாது உலகம் பெரிய குடும்பம் அதிலும் எல்லோரும் உழைக்க வேண்டும் உழைக்காமல் உயிர் வாழ எவருக்கும் உரிமை இருக்கக் கூடாது திருடன் உழைக்காமல் பிறருடைய உழைப்பின் பயனை பெற்று

வாழ்கிறான் அதனால் தான் அவன் சமுதாயத்தில் வெறுக்கப்படுகிறான் எதிர்காலத்தில் உழைக்காமல் உயிர் வாழ்வோர் எவரும் அவ்வாறு வெறுக்கப்படுவார்கள்
உடம்பால் கை கால்களால் உழைக்கலாம் அறிவால் மூளையால் உழைக்கலாம் சமுதாயத்தில் வாழ உரிமை பெற்றதற்காக எந்த வகையிலாவது உழைத்து அந்த உழைப்பை காணிக்கையாக தர வேண்டும் உழைப்பில் உயர்வு தாழ்வு கருதக்கூடாது பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவது ஒரு காலத்தில் நாகரிக கொள்கையாக இருந்தது இப்போது அது குற்றமாக கொள்ளப்படுகிறது அதுபோலவே உயர்ந்த வேலை என்றும் தாழ்ந்த வேலை என்றும் உழைப்பால் வேறுபாடு செய்வதும் எதிர்காலத்தில் குற்றமாக கொள்ளப்படும் நிலத்தில் பயிரிட்டு கை கால்களால் உழைக்கும் உழைப்பும் நகரத்தில் மாவட்ட அலுவலகத்தில் மூளையால் உழைக்கும் உழைப்பும் ஒரே வகையான மதிப்பு உடையனவாக கருதப்படும் காலம் வந்து கொண்டிருக்கிறது பெரும் ஊதியத்தைக் கொண்டு அல்லது ஊதியத்திலிருந்து சேர்த்து வைத்த பொருள் செல்வமாக திரண்டு வளர்ந்த வளர்ச்சியைக் கொண்டோ இன்றைய சமுதாயத்தில் பெருமையும் சிறப்பும் தரப்படுகிறது அதையும் மெல்ல மாறிவிடும் உழைப்பதில் என் பங்கை செய்கிறேன் சமுதாய தரும் பயனை பெற்று வாழ்கிறேன் என்று ஒவ்வொருவரும் உணர்வதற்கு மட்டுமே எதிர்காலத்தில் இடம் இருக்கும் அப்படிப்பட்ட மாறுதலை வரவேற்கும் மனப்பான்மை வேண்டும் கடவுளின் படைப்பில் எல்லா செயற்கை வேறுபாடும் மறைந்து சமுதாயத்தில் உறுப்பினராக வாழும் ஒத்த உரிமை உணர்ச்சி மட்டுமே நிற்கும் என்பதை தெளிய வேண்டும்.

புது உலகம் புகட்டி வரும் பாடம் மனிதர் யாவரும் சமம் என்பதே அறிவியலின்படி நோக்கினாலும் மனிதர் யாவரும் ஒரு நிலையினரே அந்தந்த நாட்டு தட்பவெப்ப நிலையால் நிறத்தாலும் உடல் அமைப்பாலும் வேறுபாடுகள் சில அமைந்துள்ளன ஆனாலும் அவைகளும் நிலையான வேறுபாடுகள் அல்ல இடம் சூழ்நிலை முதலியவை மாறினான் சில தலைமுறைகளில் நிறமும் அமைப்பும் மாற காண்கிறோம் நிறமும் உடல் அமைப்பில் கடந்து உடம்பின் உறுப்புகளின் இயல்பும் அமைப்பும் நோக்கினால் இதய நுரையீரல் மூளை முதலியவை வேலை செய்யும் பான்மையை நோக்கினால் மக்களிடையே வேறுபாடு இல்லை ரத்தத்தின் தன்மையும் சூடும் ஆராய்ந்தாலும் அவை எல்லோருக்கும் ஒரே வகையாக இருத்தல் காணலாம் இந்தியன் சீன ன் நீக்ரோ வெள்ளையன் வெள்ளையன் எஸ்கிமோ முதலான எல்லாருடைய உடம்பின் சூடும் 93.4 டிகிரி என்னும் அளவினதாகவே இருத்தலும் காணலாம் இன்பத் துன்பங்களும் சினம் உவகை முதலிய உணர்ச்சிகளும் எல்லோருக்கும் பொதுவாக அமைந்திருத்தல் காணலாம்

சமய நோக்கின்படி ஆராய்ந்தாலும் மக்கள் எல்லோரும் ஒரு கடவுளின் ஆட்சிக்கு உட்பட்ட குடும்பத்தினர் என்பதே முடிந்த முடிவு ஆகும் எந்த வகையான வேறுபாடு கருதுவதும் இந்த நோக்கத்திற்கு பொருந்தி வராததே ஆகும் நேரம் உடல் அமைப்பு முதலியவற்றை எந்த சமய நெறியும் உடன்படுவதில்லை எல்லாரும் கடவுளின் மக்களே என்பதை சான்றோர்களின் அருள்மொழிகள் வலியுறுத்துகின்றன சில சமயங்கள் எல்லா உயிரினங்களையும் ஒரு நிகராக கருதி பறவை விலங்குகளையும் தம் போல் கருத வேண்டும் என்று வலியுறுத்துகின்றன நடைமுறையில் மக்கள் எல்லோரையும் தம்மவர் என்று கருதும் மனப்பான்மை வளர்ந்தால் அதுவே போதும் அது உலக வாழ்க்கைக்கு பெரும் தன்மையாக

முடியும் அதற்கு அடிப்படையாகவே உயிர் இரக்கம் ஜீவகாருண்யம் முன்னோர்களால் அறிவுறுத்தப்பட்டது.

ஆகவே எந்த காரணத்தாலும் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மையை ஒழிப்பது நல்லது உலகம் அந்த கொள்கையை ஏற்று நடக்கும் போக்கில் தான் முன்னேறி வருகிறது எத்தனை தடைகளும் தயக்கங்களும் இன்று காணப்பட்டாலும் எதிர்காலத்தில் அவற்றைக் கடந்து ஒரு வகை சமத்துவ நிலை ஏற்பட்டே தீரும் அதை இன்றே உள்ளத்தின் அளவில் உணர்ந்து மாறுதலுக்கு ஆயத்தமாக வாழ்வது ஒரு நல்ல தொண்டு ஆகும்.

எத்தனையோ பேதமுறாது இவ்விரும் தன் உயிர் போல் என்னை......
பாடல்
என்று ராமலிங்க அடிகளார் இந்த சமய நோக்கிற்கு தெளிவான வடிவம் தந்துள்ளார். அவர் மக்கள் எல்லோரும் பசியும் பட்டினியும் இல்லாமல் கொலையும் நலிவும் இல்லாமல் அமைதியாக வாழ வேண்டும் என்று விளைந்த பெருந்தகை ஆவார் வேறுபாடுகளைப் பெருக்கி சாதி சண்டைகளிலும் மதர் சண்டைகளிலும் சாத்திரப் போர்களிலும் வெறிகொண்டு அலைதல் கூடாது என்று அறிவுரை கூறிய சான்றோர் ஆவார்
சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச்ச தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர்
அலைந்த அலைந்து வீணேநீர் அழுதல் அழ கலவே
என்று வீணான குழப்பங்களை கடிந்தவர் அவர் எல்லா உயிர்களும் தம்முயிர் போல் என்னும் அறநெறியை மிக மிக வற்புறுத்தி உள்ளார் அவர் அவர்களின் கால நிலைக்கு ஏற்ப எல்லா சமயச் சான்றோர்களும் இந்த உண்மையை வெவ்வேறு வடிவில் எடுத்துரைக்கிறார்கள் சென்ற ஆண்டில் தோன்றிய அடிகளார் தம் காலத்தில் பல வகை குழப்பங்களை கண்டவர் ஆதலால் மிகத் தெளிவாக இதை அறிவுறுத்தியுள்ளார் தம்முடைய முத்தியையும்பொருட்படுத்தாமல் உலக மக்களின் நல்வாழ்வையை கருத்தில் கொண்டு இதை ஆழ்ந்து உணர்ந்து விளக்கியுள்ளார்
இது சமுதாயத்தின் அமைதிக்கு தேவையாக இருக்கலாம் தனிமனிதரின் நல்வாழ்க்கும் இது தேவையா என கேட்கலாம் சமுதாயம் எப்படி இருந்தாலும் அதன் தாக்குதலைக் கடந்து தனி மனித வாழ்வுக்கு வேண்டிய வழியை வகுத்துக் கொண்டு அமைதியாக வாழ முடியும் வாழ்வு என்பது பெரும்பாலும் ஒருவரின் மனதை பொறுத்தது என்பது உண்மைதான் பழங்காலத்தில் துறவிகள் தனியே ஒதுக்கிடம் தேடி அமைதியாக வாழ்ந்தது போல இக்காலத்திலும் ஒருவர் துறவி ஆகாமலே பற்றுகளைக் குறைத்துக் கொண்டு அமைதியாக வாழ முடியும் ஆனாலும் சுற்றுப்புறத்தோடு ஓரளவு போராட்டம் இருந்தே தீரும் அந்தப் போராட்டங்களை புறக்கணித்து ஒரு சிலர் புறத்தை என்ன இடையூறு வந்த போதிலும் உள்ளத்தில் அமைதியை காக்க முடியும் ஒரு சிலரே அவ்வாறு வாழ முடியும் அவர்களும் சில இன்னல்களை எதிர்பார்த்து போராட நேர்கிறது பலர் சமுதாய சிக்கல்களால் தான் கொண்டு கலங்கவே நேர்கிறது

சமுதாயம் நல்ல வகையில் அமைந்துவிட்டால் அந்த இடையூறுகளும் இன்னல்களும் இல்லாமல் பலர் நல்வாழ்வு வாழ முடியும் ஆகவே சமுதாய சீர்படுத்தல் தனி மனிதருக்கு

எவ்வளவு நன்மையாகும் அதனால் நல்வாழ்த்துக்கள் ஒவ்வொரு நெஞ்சமும் சமுதாய நல்ல அமைப்பையும் நாடுவது கடமையாகும்

சிலர் சீரும் சிறப்புமாக வாழ பலர் அவர்களைப் பார்த்து ஏங்கும் நிலைமையும் எதிர்க்கும் நிலைமையும் சமுதாயத்திற்கு நல்லவை அல்ல அவற்றால் ஏற்றத்தாழ்வும் பகை பூசலும் இருந்து வருதலால் சமுதாயத்தில் அமைதியாக வாழும் வாய்ப்பு இருப்பதில்லை அதனால் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புவோருக்கு பல இடையூறுகள் நேர்கின்றன அவற்றை கடப்பதில் முயற்சியும் ஆற்றலும் வீணில் செலவாகின்றன.

ஆகவே கூடிய வரையில் ஏற்றத்தாழ்வுகளை குறைத்து உழைப்பால் வாழ முடியும் என்ற நம்பிக்கை அளிக்கும் சமுதாயம் அமைந்தால் நல்வாழ்வு வாழ்தல் எளிதாகும்.

உலகத்தில் இப்படிப்பட்ட சமத்துவத்தை பொதுமையை விரும்பும் ஒருவரின் நெஞ்சில் மற்றவர்களை விட உயர்வாக விளங்க வேண்டும் என்ற ஆசை அரும்பாது மற்றவர்களை விட மிகுதியாக புகழ்பெற வேண்டும் என்ற ஆர்வம் எழாது மற்றவர்களை விட வளமாக வாழ வேண்டும் என்ற முயற்சியும் தோன்றாது தாம் பெற்ற அமைதி இன்பத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற ஆசையே விளங்கும் அடுத்து உள்ளவர்களை இந்த உயர் நெருக்கி திருப்ப வேண்டும் என்ற ஆர்வமே தோன்றும் அதற்கு உரிய வழியில் அவர்களுக்காக பாடுபட வேண்டும் என்ற முயற்சியே மிகுந்திடும் ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள் என்று அவர்களுக்கு அறிவுரை கூறத் தேவையில்லை இயல்பாகவே அவர்களின் நெஞ்சம் தன்னல ஆசை அற்றதாய் திகழும் ஆடம்பரத்தை சிறிதும் நாடாமல் எளிய வாழ்வையே நாடுவதாய் விளங்கும் குழந்தையை பெற்ற தாயின் மனம் இயல்பாகவே தன்னலம் துறந்து அன்புருவாய் திகழ்வது போல் இதய நெஞ்சம் பெற்றவர்கள் உயர்ந்த அறவோராய்திகழ்வார்கள் புலனடக்கம் எளிமை முதலியன இயல்பாகவே அவர்களுக்கு அமைந்துவிடும் மற்றவர்களை விட செல்வ வளம் காட்டி திரிந்து பகட்டாக வாழ்வதை வெறுத்து கூடியவரையில் எளிய உடை முதலியவை மேற்கொண்டு வாழ்வதையே விரும்புவார்கள்

விரும்புவதை பெறுவதற்காக பலவகையாளும் முயன்று அவையும் அலைவு அவர்களின் வாழ்வில் இருக்காது விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பி அமைதி அடையும் மனநிறைவு அவர்களிடம் காணப்படும் செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்று போற்றப்பட்ட அந்த நிலையான செல்வம் அலையும் கவலையும் தராத உயர்ந்த செல்வம் அவர்கள் வாய்க்கப் பெறுவார்கள்

மக்களாட்சியின் தேர்தல் முறை இன்று பலன் நாடுகளிலும் எவ்வளவு பிணத்தையும் பூசலையும் வளர்த்து வருகிறது பழங்கால சாதி சமய சண்டைகளை விட இக்கால தேர்தல் போராட்டங்கள் பொல்லாதவைகளாக வளர்ந்து வருகின்றன மக்களாட்சியில் குறை ஒன்றும் இல்லை அதற்காக நடத்தப்படுகின்ற தேர்தல் முறையில் குறை உள்ளது மற்றவர்களை விட உயர்வதற்கு உரிய போட்டியும் போராட்டமும் அந்த தேர்தல் முறையில் உள்ளன மக்களை தம் போல் கருதும் சமத்துவ உணர்வும் தன்னலமற்ற பான்மையும் தேர்தல் முறையில் இல்லை அதனால் சமத்துவத்தை வளர்ப்பதற்கு என்று அமைந்த தேர்தல் முறை அதையே கொன்று விடுகிறது ஆயிரம் பூசலையும் பிணத்தையும் வளர்த்து விடுகிறது அதனால்

இக்கால சமுதாயத்தில் உயர்ந்த பண்புகளுக்கு போற்றுதல் இல்லை நடுநிலையானவருக்கு ஆக்கம் இல்லை தன்னலம் இல்லாமல் தொண்டு செய்ய முன் வருவோர்க்கு இடமில்லை நல்வாழ்வு என்ற நெறிக்கு மதிப்பு இல்லை எல்லாரும் அமைதியற்று பூசலும் பிணக்கும் பெருக்கி அலைந்து போராடுவதே சமுதாயத்தின் போக்கு ஆகிறது இந்த நிலை யாருக்கு நன்மை செய்கிறது என்பது தெரியவில்லை மற்றவர்களை விட செல்வமும் செல்வாக்கும் திறமையும் தந்திரமும் பெருக்குவோருக்கு சில காலம் வெற்றி வாய்க்கிறது பிறகு அவர்களும் கலங்கும் படியான மாறுதல் ஏற்படுகிறது ஆகையால் இந்த தேர்தல் முறை யாருக்கும் நன்மை செய்யாமல் எல்லோருக்கும் தொல்லை தருவதாக உள்ளது தேர்தல் முறையில் மாறுதல் ஏற்படும் எதிர்காலம் வந்தே தீரும் அப்போது மக்களாட்சி மேற்குறித்த குறைகள் இல்லாததால் விளங்க கூடும் அதுவரையில் பலர் நல்வாழ்வு வாழ இயலாமல் தடுமாற நேரும்

சமுதாய பூசல்களுக்கு இப்படிப்பட்ட தவறான தேர்தல் முறை காரணமாக இருப்பது போலவே சமய நெறிகளிலே புகுந்துவிடும் மூடநம்பிக்கைகளும் ஓரளவு காரணமாகவே உள்ளன சமயத்துறையில் அறிவுக்கு எட்டாதவை சில உள்ளன ஆனால் அந்தக் காரணம் கொண்டு அறிவுக்கு ஒவ்வாதவை பலவற்றை சிலர் புகுத்தி விடுகிறார்கள் அவைகளே மூடநம்பிக்கைகள் அறிவுக்கு எட்டாதவற்றை உயர்ந்த சான்றோர்களின் நன்மொழிகளைக் கொண்டு நம்பலாம் ஆனால் அறிவுக்கு ஒவ்வாதவற்றை கண்மூடி நம்புதல் கூடாது அறிவை பயன்படுத்தி கடவுளின் நெறியில் வாழ கற்றுக் கொள்ள வேண்டும் குறுக்கு வழிகளால் கடவுளின் அருளை பெற்று விட முயலுதல் கூடாது குறுக்கு வழிகள் நம் அறிவை மயக்க வல்லவை அந்த மயக்கத்தை கடந்து நோக்க வல்ல அறிவு தெளிவை பெற முயல வேண்டும் அல்லது தெளிந்த அறிவு பெற்றவர்களின் துணையை நாட வேண்டும்

படைப்பில் சில விந்தைகள் உள்ளன ஒரு சிலருக்கு அளவு கடந்த நினைவாற்றல் அமைந்து விடுகிறது அவர்களால் கணக்கு முதலிய சில துறைகளில் மேதைகளாய் விளங்குகிறார்கள் ஒரு சிலருக்கு பிறருடைய எண்ணங்களை மன அலைகளை உணரும் ஆற்றல் அமைந்து விடுகிறது அவர்கள் பிறரை பார்த்தவுடன் அவர்களின் திறமைகளை அளந்து கூறி திகைக்க வைக்கிறார்கள் ஒரு சிலருக்கு எங்கிருந்தோ கண் காணாமல் பொருள்களை தருவித்து கொடுக்கும் ஆற்றல் அமைந்து விடுகிறது அவர்கள் வெறும் கையால் பெற்று தரும் பொருட்களைக் கண்டு மக்கள் மருண்டு போற்றுகிறார்கள் பாம்பின் நஞ்சு முதலியவற்றை மாற்றுவதிலும் சில நோய்களை தீர்ப்பதிலும் ஒரு சிலருக்கு ஆற்றல் கிடைக்கிறது எல்லாம் ஒரு சிலருக்கு சிறுசிறு காலத்திற்கு கிட்டும் விந்தையான ஆற்றல் ஆகும் இவற்றை இயல்பானவை என்றோ நிலையானவை என்றோ எண்ணி மறுவதில் பயனில்லை இயற்கையின் விந்தைகளாக காணப்படும் அவற்றால் மருண்டு போய் உயர்வு தாழ்வுகளை படைத்துக் கொள்ளக் கூடாது அவ்வாறு அற்புதங்கள் செய்வோரும் கடவுள் ஆட்சியில் அமைந்த சிறு கருவிகளே என்று உணர்ந்து விட வேண்டும் முயற்சியால் பெற முடியாத அந்த அற்புத ஆற்றல்களை போற்றுவதை விட்டு முயற்சியால் பெறக்கூடிய அறிவையும் பண்பையும் பெற்று வளர்வதையே குறிக்கோளாக கொண்டு அமைதியுற வேண்டும்.

இவ்வாறு ஏற்றத்தாழ்வுகளும் அவற்றால் விளையும் பகை பூசல்களும் இல்லாத நல்ல சமுதாயத்தை விரும்புவோர் தம் எதிர்பார்க்கும் அளவிற்கு வேகமாக உலகம்

மாறவில்லையே என்று கவலைப்படல ஆகாது தாம் கருதுவது போல் நடக்கவில்லையே என்று ஏமாற்றமும் வெறுப்பும் கொள்ளக் கூடாது. ஆத்திரமும் கொதிப்பும் அடைவது ஆகாது பத்து இருபது ஆண்டுகளோ ஒரு சில நூற்றாண்டுகளோ இந்த உலகத்தின் வரலாற்றில் மிகச்சிறு பகுதியை ஆகும் செயற்கையாகப் பெரிய கட்டடத்தை ஏழு எட்டு திங்களில் அல்லது இரண்டு மூன்று ஆண்டுகளில் கட்டி முடித்து விடலாம் ஆனால் ஒரு பெரிய ஆலமரத்தையோ வேப்ப மரத்தையோ என்ன பாடுபட்டாலும் அப்படி இரண்டோர் ஆண்டுகளில் வளர்த்து விட முடியாது அவை அப்படியே வளர்வதே இயற்கை. பத்து பதினைந்து ஆண்டுகள் கழிந்தால் தான் அவை அடர்ந்து படர்ந்து பெரிய மரமாக வளர முடியும் அதுபோல சமுதாய வளர்ச்சிக்கும் காலம் தேவைப்படும் அதுவரையில் பொறுமையாக இருந்து நம் பங்கை செய்து முடித்து செல்ல வேண்டும்

அவ்வாறு கடமை பங்கை செய்யும் போது பொறுமை குன்றாமல் வாழ்வதற்காக சில உண்மைகளை மறவாமல் நினைவில் கொள்ள வேண்டும் வேறுபாடுகள் எல்லாம் வெளி தோற்றத்தை ஒட்டியவை வாழ்க்கை என்பது வெளியே தோன்றுவது மட்டும் அன்று பெரும் பங்காள வாழ்க்கை இன்ப துன்பங்களும் எல்லோருக்கும் பொதுவாக உள்ளன செல்வாக்கும் கவலை உண்டு துன்பங்கள் உண்டு இன்பங்கள் உண்டு வரியவருக்கும் கவலை இன்பம் துன்பம் எல்லாம் உண்டு உயர் பதவியில், உள்ளவர்களுக்கும் அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு பெரிய அளவில் கவலைகளும் இன்ப துன்பங்களும் உண்டு சின்ன தொழில் செய்து வளர்ப்பவர்களுக்கும் சிறிய அளவில் அவை உண்டு இன்ப துன்பத்தின் வரவு செலவு கணக்கை பார்க்க வல்லவர்களுக்கு எல்லாருக்கும் பொதுவான ஒரு நிலை இருப்பது புலப்படும் சிலருக்கு வரவு செலவு பெரிய அளவின பலருக்கு சிறிய அளவின முடிவில் எல்லாருக்கும் கணக்கு இருப்பு ஒரே வகையில் உள்ளது உறக்கமும் பசியும் அவ்வாறே பொதுவாக உள்ளன மூப்பும் மரணமும் பொதுவாக உள்ளன ஆகவே கடவுளின் படைப்பில் பொதுமை நிலவுவதை உணர்ந்து ஆறுதல் அடைய வேண்டும்.

இன்னா செய்யாதீர்கள் பிறப்பொருள் கவராதீர்கள் பொறாமை ஒழியுங்கள் பொய் அகற்றுங்கள் பற்றி விடுங்கள் ஆசை நீக்குங்கள் என்றெல்லாம் முன்னோர்கள் அறிவுரை கூறி வந்தார்கள் சிலர் முயற்சியில் ஈடுபட்டார்கள் ஒரு சிலர் வெற்றி பெற்றார்கள் ஆனால் சமுதாயம் பழைய படியே இருந்து வருகிறது நாகரிக உலகில் இந்த தீமைகள் நாகரீகமான பொது வடிவங்கள் கொண்டு இருந்து வருகின்றன ஊரெல்லாம் சாக்கடை தீர்க்கங்கள் பெருகி விட்டு விட்டு கொசு மருந்து பூசிக் கொள்ளுங்கள் கொசு வலைக்குள் உறங்குங்கள் மலேரியாவுக்கு இடங் கொடுக்காதீர்கள் என்று அறிவுறுத்தி வருவது போன்ற நிலை இது அதனால் முயற்சி போதிய பயன்தரவில்லை. வாழ்க்கையின் அடிப்படையான அறமே எல்லோரும் கடவுளின் மக்கள் கடவுளின் குடும்பத்தினர் என்று உணர்வது தான் அந்த புது நேரம் சமுதாயத்தில் விளங்குமாறு செய்வதை நல்வாழ்வுக்கு தேவை அவ்வாறு செய்து சமுதாயம் திருந்துமாறு செய்துவிட்டால் தனி மனிதனின் மனங்கள் உயர்ந்து விடும் பொறாமைக்கும் பொய்மைக்கும் இடம் குறைந்து விடும் பற்றும் ஆசையும் குறைந்துவிடும் நல்வாழ்வு வாழ்தல் எளிதாகும் உலகம் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்டது என்றும் பிறந்த ஒவ்வொருவரும் தம் தம் கடமையை செய்து சமுதாயத்தில் தமக்குள்ள பங்கை நிறைவேற்ற வேண்டும் என்றும் தெளிவு பிறந்த நெஞ்சில் தவறான ஆசை வளர இடமில்லை வீணான பற்று மிகுவதற்கும் இடமில்லை. பொய்மையாலும் பொறாமையாலும் ஒரு பயனும் இல்லை

என்று அவை கைவிடப்படும் அந்த நல்ல நிலை வந்தால் தனிமனிதர் நல்வாழ்வு வாழ்தல் எளிதாகும் அந்த நிலை வரும் வரையில் தனிமனித தம் தம் நெஞ்சத்தில் அந்த பொதுப் பான்மையை வளர்த்துக் கொண்டு நல்வாழ்வு வாழ முயல வேண்டும் உலகம் எப்படி இருக்கிறது என்று வெறுத்துக் காட்டும் ஓடும் துறவு தேவையில்லை உலகம் இப்படி திருந்த வேண்டும் என்ற ஆசையை உள்ளத்தில் கொண்டு நல் வாழ்வில் பற்றுக்கொண்டு வாழ்தல் வேண்டும்.

4.6 நீந்துக

கண்ணாடிகளுக்குள் குவியாடி, குழியாடி என இரு வகை உள்ளன. இரண்டும் அல்லாத மற்றொன்று குவியாமல் குழியாமல் சமமாக உள்ளது அவர் சமமாக உள்ளதை கொண்டு நோக்கினால் பொருள்கள் உள்ளவாறே தோன்றும் வேறுபாடு இருக்காது மற்ற இருவகை அப்படி அல்ல ஒன்று சிறிய பொருளை பெரிதாக்கி காட்டும் பூதக்கண்ணாடி மற்றொன்று பெரிய பொருளை சிறுதாகி காட்டும் நிழல் பட கண்ணாடி

நம்முடைய விருப்பு வெறுப்புகள் இந்த குவியாடி குவியாடி போன்றவை இவற்றால் நம்முடைய இன்ப துன்பங்களுக்கும் பிறருடைய இன்ப துன்பங்களும் வெவ்வேறு அளவில் தோன்றும் உண்மையான அளவில் தோன்றுவதில்லை
ஒருவன் தனக்கு ஒரு சிறு துன்பம் வந்தாலும் அதை பெரிதாக கருதி கலங்குகிறான் துன்பம் தனக்கு வராமல் மற்றொருவனுக்கு வந்தால் அவ்வாறு கொள்வதில்லை காரணம் தன் குழந்தை மேல் உள்ள விருப்பம் தான் ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு வந்த நோயைக் கண்டு துடிக்கிறாள் அதே நோய் எதிர் வீட்டு குழந்தைக்கு வந்த போது அவ்வாறு வருந்தவில்லை தன் குழந்தையின் மேல் உள்ள ஆசை அப்படிப்பட்டது ஒருவனுக்கு அவனுடைய காதலின் குறைகள் புலப்படுவதில்லை மற்றவர்களுக்கு தன் மனைவியின் சிறு குறைகளும் பெரும் குறைகளாக தோன்றுகின்றன உண்ணவனுடைய விருப்பம் உண்மையை மறைக்கிறது பின்னவனுடைய வெறுப்பு நடுநிலை இல்லாமல் பூதக்கண்ணாடி போல் சிறியதை பெரிதாக காட்டுகிறது சாதி சமயம் அரசியல் கட்சி முதலான காரணங்களால் வளரும் விருப்பம் வெறுப்பும் இவ்வாறு குவி ஆடி குறிஆடிகளாக இருந்து உண்மையை திரித்து உணருமாறு செய்கின்றன.

## 5. தமிழ்ப் பண்பாடு அறிமுகம்

பண்பு என்னும் சொல்லின் அடிப்படையில் பிற்காலத்தில் ஆக்கம் பெற்ற சொல் வடிவம் பண்பாடு ஆகும் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்னும் கலித்தொகை தொடர் இச்சொல்லாக்கத்தோடு தொடர்பு படுத்தி கருதத்தக்க பழமையான ஆட்சியாகும் ஆங்கிலத்தில் உள்ள கல்ச்சர் (culture) என்னும் சொல்லுக்கு இணையாக தமிழில் பண்பாடு என்னும் சொல் ஆளப்பெறுகிறது.

பண்பாடு என்பதனை மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினன் என்னும் நிலைமையில் அறிவு நம்பிக்கை அறவாழ்க்கை சட்டம் வழக்கங்கள் முதல் எனப் பற்றி பெற்ற ஒரு வகை வாழ்க்கை முறையாகும் என்கிறார் ஈபி டைலர்

பண்பாடு என்றதும் உயர்ந்த பண்புடைமை எனப் பொதுவாகப் பலரும் கருத்துவர். ஆனால் பண்பாடு என்பது மனித சமுதாயத்தின் வாழ்வியல் ஒழுங்கைக் குறிக்கிறது. ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் நம் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு ஆகும் பண்பாட்டுக்கு மானிடவியல் அல்லது சமூகவியல் இவ்வாறு இலக்கணம் கூறுகின்றது மனித இனங்களில் பண்பாடற்ற இனமே இல்லை. ஒவ்வொரு இனமும் தனக்கென ஒரு வகையான பண்பாட்டை பெற்றே இருக்கும்

பண்பாடு என்பது ஒவ்வொருவரும் சமுதாயத்திடமிருந்து பெரும் செல்வமாகும் இச்செல்வம் சடப் பொருள்கள் சடப் பொருட்கள் அல்லாதன என இரு வகைப்படும் வீடுகள் கருவிகள் ஆடைகள் அணிகலன்கள் முதலியவை சடப்பொருள்கள் மொழி தொழில் மனப்போக்கு கொள்கை வழக்கங்கள் அறநெறி முதலானவை சடப் பொருள்கள் அல்லாதவன் இப்பண்பாட்டை பொருள்பற்றியவை ஆன்மா பற்றியவை என இருவகை படுத்துவர் கருவிகள் ஆயுதங்கள் அணிகள் ஆடைகள் முதலியவற்றை பொருள்பற்றிய பண்பாடு வடிவம் எனவும் பழக்கவழக்கங்கள் சட்டதிட்டங்கள் கொள்கைகள் மனப்பான்மைகள் கலைகள் முதலியவற்றை ஆன்மா பற்றிய பண்பாடு எனவும் பகுப்பர்.

நாகரீகம் என்பதனையும் பண்பாடு என்பதனையும் இணைத்து தொடர்பு படுத்தியும் பேசுதல் மரபு நாகரீகம் பண்பாடு ஆகியவற்றின் இலக்கணம் காலத்துக்கு காலம் மாறுபடும் தன்மையதே ஆகும் மனித இனம் ஒவ்வொன்றிலும் காணப்பெறும் வாழ்க்கை முறை செயல்பாடுகள் அந்தந்த இனத்தின் பண்பாடு என விளக்கப் பெறும். மனிதப் பண்பாடு என்பது ஒரு பொதுத் தன்மையை கொண்டதாயினும் குறிப்பிட்ட மனித இனம் ஒவ்வொன்றுக்கும் தனக்கென தனித்து அடையாளப்படுத்த தக்க பண்பாட்டு ஒழுங்கை கொண்டதாக இருக்கும்

தமிழ் மக்களின் வாழ்வில் காலம் காலமாக காணப்பெறும் அமைப்பு செயல்பாடுகள் அதாவது வாழ்வியல் முறைகள் தமிழ் பண்பாடு எனப்படும் தமிழ் பண்பாடு செழுமையும் உயர்வும் உடையது சங்க இலக்கியங்கள் முதலிய பண்டைய இலக்கியங்கள் வழியும்

நாட்டுப்புறவியல் படைப்புகள் வழியும் தமிழ் பண்பாடு குறித்த செய்திகள் பலவற்றை நாம் வரலாற்று நோக்கில் அறியலாம்

குறிப்பிட்ட இனத்தின் பண்பாடு என்பது பல இனத்தவரோடு கலந்து வாழும் சூழலில் மற்ற இனத்தாரின் பண்பாட்டுத் தாக்கத்தால் நெகிழ்ச்சியும் மாற்றமும் பெறும் தமிழரின் தனித்த பண்பாடு என்பது அயல் மொழி அயல் நிலத்தவர் தம் வரவால் ஆட்சியால் மாற்றங்களை பெற்றுள்ளது தமிழர்கள் புலம்பெயர்ந்து அயல் மொழி அயல் நிலவு சூழலில் குடியேறி வாழ்வதால் தம் தனித்த பண்பாட்டு பாங்கினை இழக்க வேண்டிய நிலையும் நேர்ந்துள்ளது எனினும் தமது தனித்த பண்பாட்டை பேணிக்காக்கும் முயற்சியை தமிழ் மக்கள் தாய் நிலத்திலும் அயல் நிலத்திலும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்

தமிழ் பண்பாட்டின் தலையாய கூறுகள் ஆகிய தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை உணவு முறை ஆடை அணிகலன்கள் அணியும் முறை திருமணம் விருந்தோம்பல் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் வழிபாட்டு முறைகள் விழாக்கள் சடங்குகள் உறவு நிலைகள் கட்டடம் சிற்பம் ஓவியம் இசை கூத்து நடனம் கைவினைகள் முதலிய கலை கலை வெளிப்பாடுகள் ஆகியன குறித்த செய்திகளை இனி நோக்கலாம்.

5.1 அன்றாட வாழ்க்கை முறை

அன்றாட வாழ்க்கை முறை என்பது மக்கள் காலையில் துயில் எழுதல் தொடங்கி இரவில் துயில் கொள்ளுதல் வரையிலான நிகழ்வுகளின் கோவை எனலாம் தமிழர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கம் வாழ்க்கை முறை கொண்டிருக்கலாம் ஒருவரே கூட ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கம் வாழ்க்கை முறை கொண்டிருக்கலாம் எனினும் தமிழர் அனைவரும் பொதுவாக கொண்டிருக்கும் வாழ்க்கை முறை குறித்து நாம் இங்கு காண இருக்கிறோம்

தொல்காப்பியம் நாள் ஒன்றை ஆறு பொழுதுகளாக பாகுபடுத்தி உள்ளது வைகறை காலை நண்பகல் ஏற்பாடு மாலை யாமம் என்பன அவை இவற்றுள் வைகறை என்பது மணி இரண்டு தொடங்கி ஆறு மணி வரையிலான காலப்பகுதி ஆகும் வைகறைப்பொழுதில் துயில் எழுவதை போற்றி வந்துள்ளன இதனை வைகறையாமலும் துயில் எழுந்து என்னும் ஆசாரக்கோவை தொடராலும் அறியலாம்

தமிழர்கள் தாம் வைகறையில் துயில் எழுவதை தெய்வத்திடமும் பொருத்திப் பார்த்தனர் விளைவு திருப்பள்ளி எழுச்சி இலக்கியங்கள் மலர்ந்தன பாலை பாடல்கள் வைகறையில் துயில் நிழல் பற்றி பேசுகின்றன அன்றாட வாழ்வின் தொடக்கமே தூய்மை அழகியல் உணர்வு இவற்றை அடிப்படையாகக் கொண்டது விடியற்காலையில் மகளிர் சத்தம் இல்ல வாசலைப் பெருக்கி தூய்மை செய்து சாணம் தெளித்து மெழுகுவர் அழகிய கோலங்களை வாசலில் இடுவர் சாணமிடல் சுகாதார அறிவின் வெளிப்பாடாகவும் கோலமிடல் முருகல் உணர்வின் வெளிப்பாடாகவும் மனதை ஒருமுகப்படுத்தும் கலையாகவும் கோலத்தை அரிசி மாவு கொண்டு போடுதல் எறும்பு முதலிய சிறு உயிர்க்கும் உணவு தரும் கருணை உணர்வின் வெளிப்பாடாகவும் அமைகின்றன அன்றாட வாழ்வின் தொடக்க நிகழ்வை பாரதிதாசன் பின்வரும் குடும்ப விளக்கு தீட்டியுள்ளார்

சின்ன மூக்குத்தி திருவோடு தொங்கும்....

வைகறையில் உயில் எழல் ஆறு குளம் முதலிய நீர்நிலைகளுக்கு சென்று நீராடல் இறைவழிபாடு செய்தல் தேவாரம் முதலியவற்றை பாடி பூசித்தல் முதல் நாள் வடித்த சோற்றில் நீரூற்றி வைத்திருந்த நீராகாரத் தெளிவினை அருந்துதல் பழையது உன்னால் கூழ்,

களி உண்ணல் என தமிழரின் அன்றாட வாழ்வின் தொடக்கப் பகுதி அமைந்திருப்பதை இலக்கியங்கள் நமக்கு காட்டுகின்றன

மார்கழி மாதம் முழுமையும் அதிகாலை வேளையில் கோயில்கள் திருப்பள்ளி எழுச்சி விழா கொண்டாடப்படும் பக்தர்கள் கடுமையான குளிரையும் பணியையும் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரில் குளித்து இறைவனை வழிபடுவர் இறைவனை வழிபடுதல் நோக்கமாயினும் மருத்துவ நோக்கில் அதிகாலை நேரத்தில் குளிர் நீரில் குளித்தல் உடல் வெப்பத்தை போக்கி உடம்புக்கு குளிர்ச்சியை தரக்கூடியது மேலும் ஓசோன் படலம் அதிகாலை வேளையில் பூமிக்கு அண்மையில் இருப்பதால் அதன் காற்று உடலுக்கு நன்மை பயக்கும் என்பது அறிவியல் அந்தணர்கள் துறவிகளும் முனிவர்களும் இறைவனுக்கு வழிபாடு நடத்த காலை நேரத்தை மிகச் சிறந்ததாக தேர்ந்தெடுப்பர் இப்போது கூட கோவில்களின் அதிகாலை வேளையில் திருப்பள்ளி எழுச்சி பூஜையும் காலை சந்தி எனப்படும் காலை வேலை பூஜையும் நடப்பதை காணலாம் அனைத்து தொழில்களும் புது உணர்வோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் தொடங்க ஏற்ற நேரமாக காலை நேரம் கருதப்படுகிறது தமிழர்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் தூய்மையும் ஒழுங்கும் கொண்டன வாய் விளங்கிய மையை தேவநேய பாவாணர் தமது பண்டைய தமிழர் நாகரிகமும் பண்பாடும் என்னும் நூலில் பக்கம் 31 32 விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார் அச்செய்திகளில் சிலவற்றை இங்கு பார்ப்போம்

கல்வித் தொழிலாளர் காவலர் வணிகர் முதலிய உடல் உழைப்பில்லா வகுப்பார் காலையிலும் உழவர் கைத்தொழிலாளர் கூலிக்காரர் முதலிய உழைக்கும் வகுப்பார் மாலையிலும் நாள்தோறும் குளித்து வந்தனர் அழுக்கை தேய்ப்பதற்கு ஆடவர் பீர்க்கங்கூட்டைப் பயன்படுத்துவதுண்டு பெண்டீர் மஞ்சள் சுண்ணம் முதலியவற்றை தேய்த்து குளிப்பர் சுண்ணம் என்பது பலவகை நறுமணப் பொருள்களை சேர்த்து இடிக்கும் பொடி அதனை இடித்து வைப்பது பண்டைய காலத்து இளமகள்களுக்கு பெருவழக்காக இருந்தது பாட்டு பாடுவர் இச்செயல் மாணிக்கவாசகர் மனதை கவர்ந்ததினால் திருப்பொற் சுண்ணம் என்னும் திருவாசகப் பாடல் தில்லையில் அருளி செய்யப்பட்டது ஆடவர் அறிவன் காரியும் பெண்ணே செவ்வாய் வெள்ளியும் ஒழுங்காய் எண்ணெய் தேய்த்து தலை முழுகினர் குளிப்பு நீராட்டு என்றும் தலைமுறுக்கு நெய் பாட்டு என்றும் சொல்லப் பெறும் நெய் ஆட்டில் எண்ணெயையும் உடல் யழுக்கையும் போக்க சீயக்காய் அரையல் அரைப்பு அரையல் உசிலைத்தூள் பாசிப்பயிற்றுமா களிமண் முதலியவற்றை பயன்படுத்தினர் இரு பாலரும் குளித்தவுடனும் தலை முழுகிய உடனும் வெளுத்த துவர்த்து துண்டினால் தலையையும் உடம்பையும் துவற்றி வெளுத்தாடை அல்லது புத்தாடை எடுப்பர் மாற்றடை இல்லாவிடில் முன்பு அணிந்திருந்த ஆடையை துவைத்துக் கொள்வர்

பெண்டிர் காரகிற்புகையாலும் சந்தனக் கட்டை புகையாலும் தன் கூந்தலின் ஈரம் புலத்துவர் காலையில் குளிப்பினும் குளியா விடினும் பல் துலக்காமல் ஒருவரும் உண்பதில்லை சோறு உண்பர் வாயும் முகமும் கை, காலும் கழுவியப்பின் துப்புரவான இடத்தில் தடுக்கில் அல்லது பலகையில் அமர்ந்து சப்பளித்திருந்து கழுவிய வாழை இலையில் அல்லது வெண்கலவட்டில் வல கையாலேயே எடுத்து உங்கள் அரசர் பொற்கலத்திலும் செல்வர் வெள்ளிகலத்திலும் உண்பது வழக்கம். பெற்றோரும் பெற்ற சிறு பிள்ளைகளுமாய் இருந்தால் ஒழிய ஒரே கலத்தில் அல்லது இலையில் பலர் உண்பதில்லை. உண்டு எழுந்தபின் உண்ட இடம் இலைய அகற்றி தண்ணீர் அல்லது சாணம் நீர் தெளித்து துப்புரவாக பெறும் இலையில் இட்ட மிச்சலை பெற்றோரும் மனைவியரும் இரப்போரும் தவிர பிறர் உண்னார். சில

உணவு வகையால் ஏற்படும் வாய் நாற்றத்தை போக்குவதற்கு நறுமண சரக்கை வாயில் இடுவது வெற்றிலை தின்னுதல் மார்பில் சந்தனம் பூசுதல் முதலியவற்றை கையாளுவார் இவற்றை செரிமானத்தின் பொருட்டென்று சொல்வதுண்டு

5.2 உணவு முறை

உணவினை சுவையுற சமைப்பதிலும் சுவை தேர்ந்து உண்பதிலும் தமிழர் சிறந்து திகழ்ந்தனர் சமுதாய ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப உணவு முறை தரம் வேறுபட்டும் காணப்படுகின்றன தமிழர் தம் உணவு பண்பாடு குறித்து நியா தேவநேய பாவாணரின் கருத்துக்கள் சிலவற்றை முதலில் இங்கு பார்ப்போம்

உலகில் முதன் முதல் உணவை நாகரீகமாய் சமைத்து உண்டவன் தமிழனே ஏனைய நாட்டார் எல்லாம் தன் நாட்டில் விளைந்த உணவுப் பொருள்களை பச்சையாகவும் சுட்டும் வெறுமையாய் அவித்தும் உண்டு வந்த காலத்தில் உணவை சோறும் கறியும் என இரண்டாக வகுத்து நெல்லரிசியை சோறாக சமைத்தும் கரி அல்லது குழம்பு வகைகளை சுவை மூட்டு வனவும் உடம்பை வலுப்படுத்துவனவும் நோய் வராது தடுப்பணவும் ஆன பலவகை மருந்து சரக்குகளை மசாலாவாக சேர்த்து ஆக்கியும் உயர்வாக உண்டு வந்த பெருமை தமிழனதாகும். காய் வகைகளை காம்பு கலைந்து சீவ வேண்டியவற்றை சீவி கழுவியும் பித்தம் உள்ளவற்றை அவித்தும் மஞ்சள் மிளகு அல்லது மிளகாய் வற்றல் சீரகம் கொத்தமல்லி தேங்காய் முதலியவற்றை மை போல் அரைத்து கலந்தும் இஞ்சி வெங்காயம் வெள்ளைப் பூண்டு பெருங்காயம் கராம்பு கருவாய்ப்பட்டை ஏலம் சோம்பு முதலியவற்றை வேண்டும் அளவு சேர்த்தும் வெந்தபின் புலி அல்லது எலுமிச்சை சாறு விட வேண்டியவற்றுக்கு வெட்டும் கடுகு கருவேப்பிலை முதலியவனா தூவி ஆவின் நெய்யில் தாளித்தும் முதன்முதல் குழம்பு காய்ச்ச பெற்றது தமிழகத்திலேயே தாளிப்பு இலக்கிய வழக்கில் குயில் என்னும் குய்யுடைய அடிசில் புறநானூறு 127

உலகில் அரிசி உள்ள தவசங்களிற் பலவகை உள்ளன. அவற்றுள் நெல்லரிசி சோறு போல வேறு ஒன்றும் சுவையாய் குழம்போடு பொருந்துவதில்லை தமிழகத்திலேயே கார்டை கன்னி அரிசி குதிரைவாலி அரிசி சாமை அரிசி திணை அரிசி வரகரிசி என ஐவகை அரிசி உள்ளன அவை நெல்லரிசி கீடாக கம்பும் சோலமும் கஞ்சியும் கூழுவுமே சமைப்பதற்கு கேழ்வரகால் கழியும் கூழும்தான் ஆக்க முடியும் கோதுமை வாற்கோதுமை போன்ற பிற நாட்டு தவசங்கள் அப்பமும் சிற்றுண்டியும் தான் அடவும் சுடவும் ஏற்கும்

பச்சரிசி புழுங்கல் அரிசி என இரு வகையுள் தமிழர் விரும்பியது பின்னதே அது சூட்டை தணிப்பதனால் வெப்பநாட்டிற்கு ஏற்றதாகும் குழம்பின் சுவையையும் மிகுத்து காட்டும் அதற்காகவே அதற்குரிய தனி முயற்சியை மேற்கொண்டனர் அதனால் ஏற்படும் வலு குறைவிற்கு கறி வகைகளாலும் நெய்யாலும் ஈடு செய்யப் பெறும்

பொதுவாக காலை சிற்றுண்டியும் நண்பகல் மாலை பேருண்டியும் ஆக மூவுண்டிகளேபண்டைய தமிழர் உண்டு வந்தனர். காலை உணவும் நண்பகல் உணவும் உழவருக்கும் கூலி ஆளர்க்கும் பழஞ்சோறும் பழங்கறியும் ஊறுகாயும் ஆகும் புதுக்கறியாயின் நெருப்பில் வட்டியதும் துவையலுமாயிருக்கும். இரவு உணவே அவருக்கு புது சமையலாகும் என்பதனை புறநானூறு பாடல் (395) வழி அறியலாம். உழவர் மங்கல வினை நாளும் விழா நாளும் விருந்தினாலும் போன்ற சிறப்பு நாள் அன்றே மு வேளையும் நெல்லரிசி சோறு உண்பதில்லை வரகு சாமை கம்பு சோளம் கேழ்வரகு முதலிய அவ்வக் காலத்து விளைந்த தானியங்களை காலத்து பகல் உணவாய் உண்பர் இல்லத்திலும்

நிழலிலும் இருந்து வேலை செய்வோரெல்லாம் பெரும்பாலும் காலையில் பழையதும் நண்பகல் மாலையில் சுடு சோறும் முன்பர் அரசரும் செல்வரும் எல்லா நாளும் பிறவெல்லாம் சிறப்பு நாளும் காலையில் பலகாரமும் பொங்கலும் போன்ற சுடு சிற்றுண்டி வகைகளை உண்பர் இருவேளை பேருந்துகளுள் தமிழர்களுக்கு சிறந்தது நண்பகலே குழம்பு சோறும் மிளகு நீர் சோறும் மோர் அல்லது தயிர் சோறும் என மு க்கடவை உள்ளது பேருந்து அதை அறுசுவை உண்டு என்பது வழக்கு முக்கனிகளில் ஏதேனும் ஒன்று இனிப்பும் பாகற்காய் அல்லது சுண்டல் வற்றல் கசப்பும் காரவடை உரைக்கும் புளிக்கரியும் தயிரும் ஊறுகாயும் புளிப்பும் மாதுளங்காய் அல்லது கச்சல் துவர்ப்பும் ஒப்பேறிய உவர்பும் ஆகும் இத்தகைய உண்டி தமிழரின் சுவை முதிர்ச்சியையும் தலைசிறந்த நாகரிகத்தையும் மருத்துவ அறிவையும் உடல் நல உணர்ச்சியையும் ஒருங்கே காட்டும் அறுசுவைகள் உள்ளும் தமிழர்களுக்கு சிறந்தவை இனிப்பும் புளிப்பும் ஆகும் இது வெப்பநாட்டின் இயல்பு.

பண்டைய காலத்தில் தமிழர்களால் மறக்கடி உணவும் புலால் உணவும் விரும்பி உண்ண பட்டன புலால் முன்னுதலை திருவள்ளுவர் கடிந்து ஒதுக்கினும் பண்டைய காலத்திலும் இக்காலத்திலும் புலால் உணவு விரும்பி உண்ணப்படுகிறது

அரிசி சோறு தயிர் சோறு காய்கறி சமையல் நண்டு கறி வலால் மீன் குழம்பு ஊறுகாய் உடும்பு கறி வரகு சோறு கோழிக்கறி பன்றி இறைச்சி இயல் உணவு ஆட்டு கிடாயினை அறுத்து உண்ணல் மாதுளங்காயை வெண்ணையில் பொரித்து உண்ணல் கள்ளுண்டல் முதலிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகப் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன

பிற்காலத்தில் மேலும் உணவு வகைகள் உணவு சமைத்தல் உணவு பரிமாறும் முறை ஆகியவற்றில் மேலும் செழுமையான நிலைகள் அமைந்தன பெரியபுராணம் முதலிய இலக்கியங்கள் அத்தகைய செய்திகளை பேசுகின்றன

தமிழ் நிலத்தில் இஸ்லாமிய கிறிஸ்துவ நாயக்கர் மராட்டியர் முதலியார் வருகைக்கு பின் அவர்தம் உணவு முறைகளில் சில தமிழர் தம் உறவு முறைகளில் கலந்தன ாட்டு மேநாட்டு உணவு முறைகளும் இடம்பெறலாயின தேநீர்,காப்பி குளிர்பானங்கள் அருந்துதல் உணவு முறைகளில் ஒன்றாகவே இன்று காணப்படுகிறது தமிழரின் உணவின் இடம் பெறினும் பண்டிகைகள் படையல்கள் ஆகிய நிகழ்ச்சிகளில் மரபான உணவுகளை இடம்பெற காணலாம்

5.3 ஆடை

ஆடை நெய்யும் கலையில் தமிழர்கள் சிறந்து விளங்கினர் சமுதாயத்தில் வாழும் பல நிலையினர் தத்தம் தகுதிக்கேற்ப ஆடைகள் அணிந்தனர் ஆடவர் மகளிர் இருபாலரும் வேறுபட்ட அமைப்பில் ஆடைகள் அணிந்தனர் தமிழகத்தில் நெய்யப்பட்ட ஆடைகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியில் செய்யப்பட்டன. ஆடைகள் பல வகையான வேலைப்பாடுகளுடன் நெய்யப் பெற்றன புகையைப் போலவும் பாலாவியை போலவும் ஆடைகள் மென்மையாக விளங்கியமையை பெரும்பாணாற்றுப்படை 469 பாடல் எடுத்துரைக்கின்றது. நூற்புத் தொழிலில் ஈடுபட்ட பெண்கள் பருத்தி பெண்டிர் எனப்பட்டனர். பருத்திப்பட்டு ஆட்டு மயிர் எலி மயிர்ஆகியவற்றால் ஆடைகள் நெய்யப் பெற்றன ஆடை நெய்யும் நெசவாளர்கள் தனி வீதிகளில் வசித்துள்ளனர் என்பதனை சிலப்பதிகார பாடல் வரி பகிர்கின்றது

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
சுட்டும் நுண் வினை காருகர் இருக்கை

என்பது அப்பாடல் வரி. துணி வெளுக்கும் கலை பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன புலைத்தி துணியை கஞ்சி இட்டு உலர வைத்து மடித்து வைத்தல் முதலிய குறிப்புகள்

கிடைக்கின்றன. ஆடைகளுக்கு வண்ணமூட்டும் கலையில் நெசவாளர்கள் தேர்ந்த திறம் கொண்டிருந்தனர் செந்நிறம் கொண்ட மெல்லிய ஆடையை நீல நிற ஆடையை அணிந்த செய்தியை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் ஆடை வகைகள் பல குறிக்கப்பட்டுள்ளன. கோசிகம் பீதகம் பச்சிலை அர்த்தம் நுண்டுகில் சுண்ணம் வடகம் பஞ்சு இரட்டு பாடகம் கோங்கலர் கோபம் சித்திர கம்பி குருதி கரியல் பேடகம் பரியப்பட்ட காசு வேதங்கம் புங்கர் காலகம் சில்லிகை துரியம் பங்கம் தத்தியம் வண்ணடை சுவற்றுமடி நூல் யாப்பு திருக்கு தேவாங்கு பொன்னெழுத்து குச்சரி தேவகிரி காத்துலம் இறைஞ்சி வெண்பொத்தி செம்பொத்தி பணிப் பொத்தி எனும் முப்பத்தாறு ஆகும். இந்த ஆடை வகைகளுள் சங்க காலத்தவையும் பிற்காலத்தவையும் அயல்நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய பெற்றவையும் அடங்கும் எனலாம் தமிழரின் ஆடை அணியும் பண்பாடு குறித்து வையாபுரி பிள்ளை தரும் சில செய்திகளை இங்கு காணலாம்.

சீதோசன நிலைக்கு தக்கபடி தமிழ் மக்களின் உடைகள் அமைந்திருந்தன மாணவர்கள் பொதுவாக உடுப்பவை இரண்டு ஆடைகள்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவுமெல்லாம் ஓரக்குமே புறநானூறு 189
என்று ஒரு செய்யுளில் வருகின்றது. பெண்பாலர் நீண்ட ஒற்றை அடை உடுத்தி வந்தனர் என்று கொள்ளலாம் இவ்வாடைகள் மக்களுக்கு செல்வ நிலைக்கும் தகுதிக்கும் தக்கபடி தரந்தரமாய் கூரை நல்லாடை பட்டாடை என மூன்று தரங்கள் திவாகரத்தில் காணப்படுகின்றன கூரை சாதாரண ஆடையாய் இருத்தல் வேண்டும் வறுமையினால் வருந்தி ஒருவனது ஆடை
நேற்று இழை நுழைந்த வேர்ணனை சிதா அர் புறம் 69
என்று கூறப்படுகிறது தொழிலாளர்கள் ஒற்றையாடையை தாங்கள் செய்து வந்த வேலைக்கு ஏற்ப உடுத்தி வந்தார்கள் இதனை உடுத்தும் முறை தற்றுடுத்தல் என பிற்காலத்து வழங்கினர் அக்காலத்தில் அனைவரும் வேர் சட்டை அணிந்திலர். சிலரே அணிந்தனர் மேசட்டை கஞ்சுகம் எனப்பட்டது. இடையூறு போன்று எளிமையான உடையை உடுத்தினர் மகளிர் இடையில் புடவை உடுத்தினர் இடையில் மேகலை அணிந்து அதன் மேல் பூந்துகிலை உடுத்தினர் பூ வேலைப்பாடு செய்யப்பட்ட புடவைகள் பற்றிய குறிப்புகள் மதுரை காஞ்சியில் 431, 433, 513 இடம்பெற்றுள்ளன

பிற்காலத்தில் ஆடைகள் நெய்வதிலும் உடுத்துவதிலும் மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டன வேட்டி உடுத்தல் தார்ப்பாய்ச்சி கட்டுதல் முதலிய மரபுகள் விளங்கின இக்காலத்தில் மகளிர் வடநாட்டு உடைய உடுத்தும் வழக்கமும் ஆடவர் மேல் நாட்டு உடைமை அணியும் வழக்கமும் பெருகி காணப்படுகின்றன

5.4 அணிகலன்

அணிகலன்கள் நேர்த்தியாக செய்வதிலும் அழகுற அணிவதிலும் தமிழர் ஈடுபாடுமிக்கு விளங்கினர் பொன்னாள் வேலைப்பாடு மிகுந்த அணி வகைகள் பலவற்றை ஆக்கி பயன்படுத்தினர் அணிகலன்கள் செய்வதற்கேற்ற பொன் வெள்ளி முத்து மணி முதலே கருவிகளும் தேர்ந்த பொற்கொல்லரும் பண்டை தமிழகத்தில் இருந்தனர்

பொன்னின் மாற்றுறைக்கும் கல் கட்டளைகள் எனவும் உறைக்கும் கம்பி உரையாடிய எனவும் பெயர் பெற்றன சிலப்பதிகாரம் அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்த 27 வகை அணிகலன்களை குறிப்பிடுகின்றது குறிப்பாக விராலி பரிகம் சலங்கை அரியகம் மோதிரம் குரங்கு சரி தோல் விலை சூடகம் கைவலை கைச்சடி வாழ்வலை பவளவளை மோதிரம் மணி மோதிரம் உள்ளிட்ட பல்வேறு வகையான அணிகலன்கள் குறித்த செய்தியை சிலப்பதிகாரம் கடலாடு காரை நமக்கு எடுத்துரைக்கின்றது

மகளிர் காதில் போடும் இடையில் மேகலையும் காலில் சிலம்பும் விரல்களில் மோதிரமும் அணிந்தனர் குழை கடகம் தண்டை முதலிய பலவகை அணிகலன்களை ஆடவர் அணிந்தனர் உடலை அழகுற செய்வதை உணர்ந்த ஆர் சூடு புனை பூண், மிலை, வேய் முதலிய சொற்கள் காணப்படுகின்றன. பிற்காலத்திலும் பழங்காலத்திலும் தோடு காதோலை முத்துமாலை பவள மாலை சங்கிலி குரங்கு சரி பட்டிகை சதங்கை கிண்கினி சிலம்பு வலை மோதிரம் மேகலை கிளி சோலை சிங்கு கண்மலர் பொட்டு போன்றவை உட்பட எண்ணற்ற அணிகலன்கள் வழக்கில் இருந்தன

அரசர் பாணனுக்கு பொற்றாமரையும் அவன் மனைவியாகிய பாடினிக்கி அல்லது விறலிக்கு பொன் அணிகலன்களும் பரிசாக அளித்து வந்தனர் .

19ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை பார்க்க வந்த மார்க்கோபோலோ என்னும் வெனிசு நகர வணிகர் சுந்தரபாண்டியன் தன் கழுத்தில் விலை மதிக்க ஒண்ணாத பன்மணி மாலையும் மார்பில் விலை ஏறப்பெற்ற இரு மணி ஆழமும் தோளில் மூன்று பன்முத்து கடிகையும் காலில் கழலும் கால் விரல்களில் மோதிரமும் அணிந்திருந்ததாக கூறியுள்ளார்.(பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும் பக்கம் . 50)

பொன் வெள்ளி ஆகிய உலோகங்களால் பலவகை அணிகளை அணியும் மரபு இக்காலத்திலும் தொடர்ந்து நிலவுகிறது எனினும் செயற்கை இழைப்பொருள்களால் தோடு வளையல் கழுத்து மாலை ஆகியவற்றை அணியும் போக்கும் காணப்படுகிறது பண்டை நாளில் பனை ஓலைகளில் காதோலை செய்து அணிந்த செய்தினையும் இலக்கியங்கள் காட்டுகின்றன ஆண் பெண் இருபாலரும் பல அணிகளை அணிந்த நிலைக்கு மாறாக பிற்காலத்தில் பெண்களே நகை அணியும் நிலை வலுப்பெற்றது இக்காலத்திலும் பெண்களை வெறும் அலங்கார பொம்மையாக நகை தாங்கிய கருதும் போக்கிற்கு எதிராக நகை அணிவது எதிர்க்கும் நிலையும் சில பெண்களிடத்தில் காணப்படுகின்றன

கற்பது பெண்களுக்கு ஆபரணம் கெம்புக்
கல் வைத்த நகை தீராத ரணம்

என்னும் பாரதிதாசனின் பாடல் அணிகலன் குறித்த விழிப்புணர்வை பெண்களிடம் விதைக்கும் இயக்கத்தின் விளைவாகும்.

5.5 திருமணம்

தமிழர் வாழ்க்கையை அகம் புறம் என பாகு படுத்தினர். காதல் பிறர் அறிய வண்ணம் தலைவனும் தலைவியும் சந்தித்து பழகும் களவு வாழ்க்கை பெற்றோர் இசைவு உடன் தலைமகனும் தலைமகனும் மணந்து வாழும் கருப்பு வாழ்க்கை பெற்றோர் இசைவு இல்லா சூழலில் தலைவன் உடன் தலைவி தன் இல்லத்திலிருந்து நீங்கிச் செல்லம் உடன்போக்கு முதலிய அகழ வாழ்க்கை நிலைகளை தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியன காட்டுகின்றன

உறவு சொந்தம் எனும் தொடர்புகள் இல்லாத ஓர் ஆணும் பெண்ணும் காதல் வயப்பட்டு உள்ளம் கலந்து நின்றதை குடும்பத் தலைவன் தலைவி ஆனதை

யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்
யானும் நீயும் எவ்வழி அரிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடைய நெஞ்சம் தான் கலந்தனவே

எனக் குறுந்தொகை காட்டுகின்றது உறவு உடைய ஆணும் பெண்ணும் மணந்து வாழ்வதே அக்கால பொது வழக்கு எனலாம் காதல் கொண்டு பின் கற்பு வாழ்வில் ஈடுபடும் தன்மைகள் குறித்த பாட்டோவியங்கள் பலவும் இலக்கியங்களில் உள்ள கற்பு வாழ்வை தொல்காப்பியம் பெண் கொடுப்பதற்குரிய மரபினர் அழுக கொளற்குரிய மரபின் தலைவன் கரணம் எனும் திருமண சடங்கோடு பெறுவது என வரையறுக்கின்றது

தலைமக்கள் ஊரார் அறியாமல் உடன் போக்கில் ஈடுபட்டபோது கொடுப்போர் இன்றியும் காரணம் உண்டு என தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது அக்காலத்தில் மணப்பெண்ணுக்கு மணமகள் பரிசளிக்கும் வழக்கம் நிலவி வந்துள்ளது அக்காலத்தில் இது ம*** விலை சிறு விலை விலை அறிய பரியம் என குறிக்கப்பட்டது.

திங்களும் ரோகிணியும் கூடிய நல்ல நாளில் திருமணம் நிகழ்ந்தது வைகறை பொழுதில் மனவினை நடந்தது பந்தல் அமைந்து புது மணல் பரப்பினர் விளக்குகளை ஏற்றினர் மாலைகளை தொங்கவிட்டு இல்லத்தை அழகுப்படுத்தினர் துவையல் அடிசில் கொடுக்கப்பட்டது

உழுந்து பெய்த கொழுந்துவை அடிசில் கொடுக்கப்பட்டது. உச்சி குடத்தர் புத்தக்கல் மண்டையர் பெரிய ஆரவாரத்தோடு பந்தலுக்கு வந்தனர் அவர்கள் பொதுச் செய் கம்பளை முதுசெம் பெண்டிர் ஆவர் புதல்வர்கள் பயந்த இழையணி மகளிர் வாழ்த்தியதோடு நீரில் நெல்லும் மலரும் கலந்து வதுவை நீராட்டினர் அப்போது பெண்கள் கூட்டம் புகுந்து பேரிற் கிழத்தி ஆக என வாழ்த்தியது பெற்றோர் மணமகளை தலைவனிடம் (அகநானூறு 86)

அகநானூற்றின் பிறிதொரு பாடல் 136 மன வினைச்சடங்கின் போது விண்ணூலில் வாகை இலையையும் அருகம்புல்லையும் சேர்த்து கட்டி காப்பாக பெண்ணுக்கு அணிவித்தனர் தூய ஆடை அணிவித்தனர் என்னும் செய்தியையும் தருகின்றது சங்க இலக்கியங்கள் காட்டும் திருமண சடங்குகளில் பார்ப்பனர் மணத்தை நடத்தி வைத்தல் மந்திரம் ஓதுதல் தீவலம் வருதல் அம்மி மிதித்தல் அருந்ததி காட்டல் ஆகியன இடம்பெறவில்லை தாலி அணிவித்த குறிப்பும் காணப்படவில்லை. சிலப்பதிகாலத்தில் கண்ணகியின் திருமணம் மா முது பார்ப்பன் மறைவழி காட்ட நடந்தது. மணமக்கள் தீவலம் வந்தனர். ஆண்டாள் நாச்சியார் திருமொழி யில் தன் திருமணம் குறித்து கண்ட கனவினை எடுத்துரைக்கையில் திருமண சடங்குகள் பல குறிப்பிடப்படுகின்றன. தேவர்கள் வருதல் புத்தாடை உடுத்தல் காப்பு நாண் கட்டுதல் மேளம் முழங்குதல் மந்திரம் ஒலிக்கக் கைப்பற்றி தீவலம் வருதல் பெண்ணின் காலை எடுத்து அம்மிமேல் வைத்தல் ஆண்டாளின் உடன்பிறந்தார் கண்ணனுடைய கையை எடுத்து

ஆண்டாளின் கைமேல் வைத்தல் மைந்தனனுக்கு மணமகன் மோதிரம் அளித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் குறிப்பிடுகின்றன.

திருமண சடங்கு பற்றி காட்டும் முற்பட்ட இலக்கிய குறிப்புகளில் மணமகளுக்கு மணமகன் தாலி அணிவித்தல் இடம்பெறவில்லை திருமண சடங்கில் பார்ப்பனர் இடம்பெறல் தீ வலம் வருதல் அம்மி மிதித்தல் அருந்ததி காட்டல் ஆகிய ஆகியன பிற்காலத்தில் இடம்பெற்றன தாலி அணிவிக்கும் மரபு பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்பர் அறிஞர்கள் திருமணத்தின் முக்கிய நிகழ்வு தாலி கட்டுதல் என்னும் நிலை பிற்காலத்தில் வலுப்பெற்று விட்டன

இக்காலத்தில் பார்ப்பனர் சடங்குகள் நிகழ்த்த திருமணம் நடத்தல் பார்ப்பனர் இடம்பெறாமல் திருமணம் நடத்துதல் ஆகிய வழக்கங்கள் நிலவுகின்றன தாலி அணிவித்தல் பெரு வழக்காக உள்ளது தாலி மறுப்பு திருமணங்களும் சீர்திருத்த வழி நின்று இக்காலத்தில் நிலவுகின்றன. திருமணத்தை மண்டபங்களில் வைத்தல் தலைவர்கள் அறிஞர்கள் நடத்தி வைத்தல் தமிழ் திருமணங்கள் பதிவு திருமணங்கள் புரிதல் ஆகியனவும் நிகழ்கின்றன திருமணத்தில் இசை நிகழ்ச்சி வரவேற்பு நிகழ்ச்சி ஆகியனவும் இடம்பெறுகின்றன மோதிரம் மட்டும் மாற்றிக் கொள்ளும் அமைப்பும் சில திருமணங்களில் இடம்பெறுகின்றது குதிரை அல்லது மகிழ்ந்து மேல் ஏற்றி மாப்பிள்ளை அழைத்து வருதல் எனும் மாப்பிள்ளை அழைப்பு நிகழ்ச்சிகளும் இக்கால திருமணங்களில் இடம்பெற காண்கிறோம் மண்டபங்களின் நேர வரையறை கருதி முதல் நாள் மாலையே திருமண வரவேற்பு நிகழ்ச்சி சென்னை முதலிய பெருநகரங்களில் நடத்தப்படும் நிலையும் காணப்படுகிறது

விருந்தோம்பல்

விருந்தோம்பல் ஒரு சமுதாயத்தின் அற பண்பாக மக்களால் பேணப்பட்டு வருகிறது அப் பண்பை விளக்கும் பாடல்களிலிருந்து அம்மக்களின் உணவு வகைகளையும் சுவையையும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் பொதுவாக மக்கள் அரிசி உணவையே விரும்பியுண்டனர்.

ஓய்மா நாட்டு மருதநில மக்கள் வெண்மையான நிறத்துடன் கூடிய வெண்சோற்றை நண்டும் பீர்க்கங்காயும் சேர்த்து செய்யப்பட்ட கலவையுடன் உண்டார்கள் தொண்டை நாட்டு மருத நிலத்து சிறு பிள்ளைகளுக்கு பழைய சோறு தரப்பட்டது (பெரும்பாணாற்றுப்படை 223) மக்கள் வயல்களில் உழும்போது கண்ட ஆமைகளை கொண்டு செய்யப்பட்ட இறைச்சி உணவை உண்டு கள் குடிப்பதுண்டு.

உழவர்கள் தம் வயலில் உழுவதை நிறுத்திவிட்டு காலையில் உண்பது வழக்கம். அப்போது அவர்கள் பழஞ்சோற்றையே உண்டனர்.

கருணைக்கிழங்கு பொரித்து அத்துடன் செந்நெல் அரிசியால் ஆக்கிய வெண் சோற்றை சேர்த்து தெய்வங்களுக்கு பலியிடும் பொருளை காக்கைகள் தம் சுற்றத்துடன் கூடி உண்பதற்கு வீட்டின் கண் அமர்ந்திருக்கும் செய்தி செய்தி நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தைகள் வளர தொடக்க நிலையில் பால் மட்டுமே தரப்படும் தக்க பருவம் வந்ததும் பாலுடன் பிற உணவு வகைகள் அளித்தனர்.

விழாக்களில் உணவு பலருக்கும் பங்கிட்டு தரப்படும் பழந்தமிழர் மிளகைப் பயன்படுத்தி உள்ளனர். உலக்கையால் மிளகு எடுக்கப்பட்டதாக பதிற்றுப்பத்து (41) கூறுகிறது.

சிற்றுண்டி வகைகளில் முருக்கு சிற்றுணவாக அக்காலத்தில் இருந்தது
பாலை பெய்து பண்ணியங்கள் செய்யப்பட்டன. பாலைக் காய்ச்சி தயிர் ஆக்குவதும் உண்டு உரை ஊற்றுவதால் குடத்து பால் தயிராக ஆகிவிடுகிறது அந்த தயிரினை வைகறையில் பானையில் எடுத்து மத்து இட்டு கயிற்றை இழுத்து கடைப்பார்கள் (புறம்.257)
சிற்றுண்டிகளை விற்கும் பழக்கம் அக்காலத்தில் உண்டு தேனீராலை ஒத்த வரிகளை உடைய அடைகள் வெல்லப்பாகில் தேங்காயையும் பருப்பையும் இட்டு சமைத்து பிடித்து மோதகம் அதாவது கொழுக்கட்டை அப்பம் ஆகிய பொருட்களை மக்கள் விற்றதாக அறிகிறோம்.
குய்யுடை அரிசில், நெய்யுடைய அரசில் பால் சோறு பால் சோறு ஊன் துவை அடிசில் சோறு புழுக்கு பொற்கை அவிழ் அமுதம் கூழ் அயனி வென்சோறு என உணவுக்கு பல பெயர்கள் காணப்படுகின்றன இவற்றை பக்குவப்படுத்துவதற்கு துணையான கருவிகள் கூறப்பட்டுள்ளன சோறு சமைத்தலை அடுத்தல் என்று கூறுகின்றன
மா பலா வாழை விளாம்பழம் நாவல் பழம் முதலிய பழங்களை உண்டிருந்தார்கள்

நம்பிக்கைகள்

பழமையான எல்லா இன மக்களிடமும் பல நம்பிக்கைகள் இருந்து வருகின்றன இந்த நம்பிக்கைகள் ஒன்றின் மேல் உள்ள ஆர்வத்தாலும் அச்சத்தாலும் ஏற்படுபவை
உலக மக்களிடையே சமயம் சார்ந்த நம்பிக்கைகள் தான் அதிகம் என்கின்றனர் சமூகவியல் அறிஞர்கள்

நாள் கோள்:-

நாள் செய்வதை நல்லவர் செய்யார் என்பது பழமொழி. தான் செய்யும் செயல் வெற்றியோடு முடிய வேண்டும் அதற்கு நல்ல நாளை தேர்ந்தெடுத்து அதனை செய்வது தமிழர் நம்பிக்கையாக உள்ளது.
நல்ல நாள் பார்த்து அரசர் போர் தொடங்குவார் நல்ல வேளையை முழுக்க என்பவர் இதுவே இன்று முகூர்த்தம் என்று அழைக்கப்படுகிறது வீரர்கள் போருக்கு செல்லும் முன் சில பறவைகளின் ஒலியை சகுனமாகக் கொண்டனர்.
"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை"என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

விரிச்சி கேட்டல்:-

ஒரு செயலை தொடங்கும் முன்பு பிறர் சொல்லும் சொல்லை சகுனமாக கொள்வதும் உண்டு இது நற்சொல் என்றும் விருச்சி என்றும் கூறப்படும். பகைவர் நாட்டில் புகுந்து பசுக்களை கவரும் முன்பு வெற்றி பூச்சூடிய மறவர் வீழ்ச்சி கேட்ப முதுபென்றீர் நாளில் நெல்லை எடுத்துச் சென்று கணக்கில் எட்டு நீரும் நெய்யும் சொரிந்து வீழ்ச்சி கேட்டதாக முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது.

கண்ணும் தோளும்:-

பெண்களின் இடக்கண்ணும் இட தோலும் துடித்தல், ஆண்களுக்கு வலக்கண்ணும் வலது தோளும் துடித்தால் நல்லது நிகழும் என்பது மக்கள் நம்பிக்கை ஆகும்.

கனவு பற்றிய நம்பிக்கை:-

எல்லா மக்களிடமும் கனவு பற்றிய நம்பிக்கை உண்டு கனா நூல்கள் தமிழில் உள்ளன கண்ணகி தான் மதுரைக்குப் போகும் முன்பு கனவு கண்டாள். இளங்கோவடிகள் கண்ணகியின் கனவை குறிப்பிடவே கனாத்திரமடைத்த காதையை சிலப்பதிகாரத்தில் அமைத்துள்ளார்.

தீக்கனவு :-

பாண்டிமாதேவி தன் கண்ட தீக் கனவை அரசனிடம் கூறுகிறாள். மதுரையும் அரசும் அரசனும் அழிவதை பற்றி முன்கூட்டியே கோப்பெருந்தேவி கனவு காண்கிறான் இது தீக்கணவாக கருதப்படுகிறது

விண்மீன்கள்:-

விண்மீன்கள் வடை திசையில் இருந்தால் அது வளத்துக்கு அடையாளம் தெற்கே சென்றால் அது வற்கடமாம். எல்லா திசையிலும் புகை தோன்றினாலும் வெள்ளி தெற்கே சென்றால் நாட்டில் வளம் தவறாக என்கிறார் கபிலர் (புறம்.117) மேலும் தூமகேது தோன்றினால் அது ஆளும் அரசனுக்கு ஆகாது என்பது நம்பிக்கை.

பேய் ஓட்டுதல்:-

பேய் செய்யும் தீமையிலிருந்து தப்பிவிட இரவம் வேம்பு ஆகியவற்றின் குழைகளை வீட்டில் சொருகி வைப்பர் யாழும் பிற கருவிகளும் முழங்கினர். வெண் சிறு கடுகை புகைப்பர். ஆம்பல் குழலை ஊதினர் காஞ்சி பண்பாடினர் தூபம் எடுத்தனர் இவ்வாறு செய்தால் பேய் ஓடி விடும் என்று நம்பினார் புறம் 28

பல்லி சொல்லுக்கு பலன்

பல்லி கத்தினால் தரையில் மூன்று முறை விரலால் தட்டும் பழக்கம் இன்றும் சிலரிடம் இருப்பதை பார்க்கலாம் பல்லி சொல்லை நம்புவது தமிழரின் பரம்பரை பழக்கமாக இருந்து வருகிறது.

காதல் மிகுதியால் பிரிவு துன்பத்தில் வாடி இருந்த தலைவி பிளந்த வாயை உடைய பல்லி சொல்லும் போதெல்லாம் வணங்கினால் நல்லது சொல் என்று நடுங்கி வேண்டினாள் என்கிறது கலித்தொகை நூல்.

பரம்பரை நம்பிக்கை:-

பண்டைத் தமிழர் மந்திரங்களில் நம்பிக்கை வைத்திருந்தனர் பெரியோர் சொல்லிய பொருள் தெரியாத மொழிகளை அவர்கள் மந்திரங்கள் என்று நம்பி வந்தனர் குறி கேட்டல் நோய் நீங்க தெய்வங்களை வேண்டிக் கொள்ளுதல் பழைய மரங்களில் தெய்வம் வசிப்பதாக நம்புதல் போன்ற நம்பிக்கைகள் தமிழ் மக்களிடம் இன்றும் இருந்து வருகின்றன.

கண்ணேறு கழித்தல்:-

தமிழர் கண்ணேறு எனப்படும் நம்பிக்கை உடையவர். கல்லடி பட்டாலும் படலாம் கண்ணடி படக்கூடாது என்பது பழமொழி கண்ணால் ஏற்படும் தீங்குகளை தீர்ப்பதற்காக குறமகள் நெய்யும் வெண்சிறு கடுகும் கலந்து தூவுவாள்.

பெண்களை வருத்தும் அணங்குகள் தம்மை நெருங்கா வண்ணம் காவலாக இருக்கும் பொருட்டு வெண்கடுகை அப்பி எண்ணெய் தேய்த்து நீராடுவார்கள் நற்றிணை 40

காகம் கரைதல்:-

காக்கைக்கு உணவு இட்டு பிறகு உணவு உண்ணும் பழக்கம் தமிழரிடம் காணப்படுகிறது. அந்த காகத்தை அவர்களின் முன்னோர்களாக நினைத்து உணவு இடுகின்றனர்.

காக்கை கரைவது விருந்தினர்களின் வரவை தெரிவிப்பதாக நம்பினர்.

விருந்தினர் வரும்படி கரைகளை செய்த காக்கை என்னும் பொருள்படும்படி குறுந்தொகையில் விருந்து வர கரைந்த காக்கை அது பலியே என்னும் வரி கூறுகிறது.

இம்மை மறுமை ஆகியவற்றில் தமிழர்களுக்கு நம்பிக்கை இருந்தது.

பழக்கவழக்கங்கள்:-

பழந்தமிழர் வாழ்க்கை நிலையை அவர்கள் இயற்றியுள்ள பாடல்கள் இருந்து ஊகிப்பதே சிறந்ததாகும்.

ஆடம்பரம் சிறிதும் இன்றி எளிமையான வாழ்க்கையை பண்டைய தமிழர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சூரியன் உதிக்க சில நாழிகைக்கு முன்பே அதிகாலையில் விழித்து விடுவார்கள் தூங்கி எழுந்தவுடன் நீராடும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் தமிழர் பின்னர் கோயிலுக்குச் சென்று தெய்வங்களை வழிபட்டனர் அதன் பின்னர் தங்களுக்குரிய தொழிலை மேற்கொண்டனர் அவர்கள் தொழில் என்னது என்பது சாதியை பொறுத்து அமைந்தது

உச்சிப் பொழுதில் பகல் உணவு உண்ணுதல் அவர்கள் வழக்கமாக இருந்தது

உணவு முடித்தவுடன் மாளிகை முற்றத்தில் பந்தலின் கீழ் பாண புலவர் முதலியார் பாடுவர் விரலியர் நடனம் ஆடுவர் அல்லியம் கூத்து நடைபெற்றதாக பட்டினப்பாலை 113 சான்று பகர்கின்றது

ஒரு காலத்தில் குடும்ப வாழ்விலே மக்கள் பலவகையான பழக்கங்களை கொண்டிருந்தன பிற்காலத்தில் தமிழ் மக்களிடையே தாயார் மனைவி வழி உறவினரிடம் அதிகப்பற்றும் நம்பிக்கையும் வைக்கும் பழக்கம் இருந்து வருகிறது சமூக நிகழ்ச்சிகளில் தாய் மாமனுக்கு முக்கியமான கடமைகளும் பொறுப்புகளும் இருக்கின்றது நிகழ்ச்சிகளுக்கு ஆகும் செலவை அவர் ஏற்க வேண்டும் தமிழரிடையே அக்காள் மகளை மணப்பது பழக்கமாக பெரிதும் பரவியுள்ளது அவர் இசையா விட்டால் வேறு ஒருவருக்கு திருமணம் பேசி முடித்து வைப்பர் முறை பையனுக்கு திருமணம் செய்து வைக்காமல் இருந்தால் அவருக்கு நஷ்டம் ஈடு தரும் பழக்கம் சில சாதிகளில் உள்ளது

பிறப்பு:-

குழந்தை பிறப்பது குறிப்பாக முதல் குழந்தை பிறப்பது குடும்பத்தில் முக்கிய நிகழ்ச்சியாக கருதப்படுகிறது மதிய உணவு சாப்பிட வேண்டும் இருட்டிய பிறகு வெளியே போகக்கூடாது கருவுற்ற ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் வளைகாப்பு சடங்கு நடைபெறும் வலையில் போட்டு பெரியவர்களிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்வர் ஒன்பதாம் மாதத்தில் சீமந்தம் என்ற சடங்கு நடைபெறும்

சித்திரை மாதம் மிகவும் வெப்பமான மாதம் ஆதலால் அப்போது முதல் குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதற்காக ஆடி மாதத்தில் இளம் கணவன் மனைவியை சேர்ந்து வாழ தடை விதித்து விடுவர் ஆவணி பிறந்த பிறகுதான் மனைவி கணவன் வீட்டுக்கு செல்லலாம் குழந்தை பிறந்த பிறகு தாயும் சேயும் இரண்டு வாரங்களுக்கு ஏனையோர் இடமிருந்து தனித்து குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்படுகின்றனர் உறவினர் கூடி குழந்தையை நீராட்டி அலங்கரித்து தொட்டில் வைத்து ஆட்டுவர் பாட்டன் பெயரை பிள்ளைக்கு இடுவது பெரும் வழக்கமாக இருந்தது தெய்வங்களின் பெயரையும் இடுவர். சிவப்பு வெள்ளை கண்ணாடி மணிகள் கோர்த்த மாலையை அல்லது மந்திரித்த கருப்பு கயிற்றை குழந்தையின் கழுத்தில் அணிவிப்பதும் உண்டு

குழந்தை பிறந்ததும் செய்யப்படும் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று காது குத்துவது மற்றொன்று முடி இறக்குவது வெள்ளி அல்லது தங்கத்தகத்தில் இணை வடிவமாக செய்து குழந்தைகளின் இடுப்பில் அணிவித்து ஆண்குறி பெண்குறி பிற கண்ணில் படாதவாறு அந்த பதக்கம் தொங்க விடப்படும்.

பெண் பருவமடைதல்:-

ஒரு பெண் பருவமடைவது சமூக வாழ்வில் பெரியதொரு நிகழ்ச்சியாக கொண்டாடப்படுகிறது பெண்ணுக்கு கணவனை தேட ஒரு வாய்ப்பாக இந்த சடங்கு அமைந்திருக்கிறது

பூப்பெய்வது திருமணமாகி இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையே பெண் சார்ந்து போட்டு வைத்துக் கொள்வாள் கண்ணுக்கு மை திட்டுக் கொள்வாள்

திருமணம் குறித்து தமிழரிடம் பலவகையான பழக்கங்கள் உண்டு நலங்கு வாசப்படி மிதித்தல் ஊஞ்சல் ஆட்டுதல் போன்ற பழக்கங்கள் முக்கியமானவை தமிழரின் மலை சாதி மக்களிடம் வேறுபட்ட திருமண பழக்கங்கள் இன்றும் இருந்து வருகிறது

இறப்பு:-

தமிழர் இறந்த பிறகு நடத்தப்படும் இறுதி சடங்கு பல வழிமுறைகளைக் கொண்டதாக உள்ளது ஒருவர் இறந்துவிட்டார் என்று கூறாமல் இறைவனடி சேர்ந்தார் என்று குறிப்பிடுவர் சனிக்கிழமைகளில் ஒருவர் இறந்தால் அந்த வீட்டில் இன்னொரு சாவு நேரிடும் என்பதால் பிணத்தை வெளியே கொண்டு போக வீட்டின் புதியதாக இன்னொரு வாசலை ஏற்படுத்துவர் ஒப்பாரி வைத்து பழக்கம் இன்றும் உள்ளது துக்க காலம் 12 முதல் 16 நாட்கள் வரை இருக்க வேண்டும்

கருவுற்ற பெண் பிள்ளை பேருக்கு இறந்தான் அவள் நினைவாக சுமை தாங்கிகள் அமைக்கப்படும் கணவன் உயிருடன் இருக்கும் போதே உயிர் நீப்பால் தெய்வமாக மதிக்க பெறுவாள்

சாவு நிகழ்ந்த வீடு தீட்டு பட்டதாக கூறப்படுகிறது அங்கு சில நாட்கள் சமையல் செய்ய மாட்டார்கள் இறந்த வீட்டில் அல்லும் பகலும் ஒரு விளக்கு எரிய விடுவது வழக்கம் துக்க நாட்களில் இறுதியில் இறந்து போன ஆன்மாவை திருத்தி செய்ய ஏழைகளுக்கு உணவு படைப்பதும் வழக்கமாகும்.

‘

# Tamil- III

## Case study

1. திருக்குறளின் அமைப்பு, சிறப்புகள் மற்றும் வாழ்வியல் கருத்துக்களை விரிவாக விளக்குக.
2. “அன்புடைமை”, “கல்வி”, “கல்லாமை” ஆகிய அதிகாரங்களின் கருத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. “கேள்வி” மற்றும் ”அறிவுடைமை” அதிகாரங்களில் கூறப்படும் மனித மேம்பாட்டு சிந்தனைகளை ஆராய்க.
4. திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவருடைய சமயப்பணிகளை விரிவாக எழுதுக.
5. குலசேகர ஆழ்வாரின் பக்தி உணர்வுகளையும், திருவேங்கடத்தில் பல்வேறு பிறவிகளை வேண்டிய காரணங்களையும் விளக்குக.

# Tamil- III

## Discussion Forum

1. இன்றைய சமுதாயத்தில் திருக்குறளின் அவசியம்.
2. கல்வி மனிதனை எவ்வாறு மாற்றுகிறது?
3. அன்பு இல்லாத வாழ்க்கை வெறுமையா? விவாதிக்க.
4. பக்தி இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டை எவ்வாறு பாதுகாத்தன?
5. குலசேகர ஆழ்வாரின் இறைபக்தி – ஒரு ஆய்வு.
6. திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களின் சிறப்புகள்.
7. செவிச்செல்வம் வாழ்க்கையில் ஏன் முக்கியம்?
8. அறிவும் ஒழுக்கமும் – எது முக்கியம்?

# Tamil- III

## MCQs

1. திருக்குறளை இயற்றியவர் யார்?
   a) இளங்கோவடிகள்
   b) கம்பர்
   c) திருவள்ளுவர்
   d) அவ்வையார்
2. திருக்குறளில் மொத்தம் எத்தனை குறள்கள் உள்ளன?
   a) 1200
   b) 1330
   c) 1500
   d) 1000
3. “அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்” என்ற குறள் எந்த அதிகாரத்தைச் சார்ந்தது?
   a) கல்வி
   b) கேள்வி
   c) அன்புடைமை
   d) அறிவுடைமை
4. “கற்க கசடறக் கற்பவை” என்ற குறள் எதை வலியுறுத்துகிறது?
   a) பக்தி
   b) கல்வி
   c) நட்பு
   d) செல்வம்
5. “செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்” எனக் கூறியவர் யார்?
   a) பாரதி
   b) அவ்வையார்
   c) திருவள்ளுவர்
   d) கம்பர்
6. திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கியவர் யார்?
   a) பார்வதி தேவி
   b) இலட்சுமி
   c) சரஸ்வதி
   d) ஆண்டாள்
7. திருக்கழுமலம் என்பது எந்த ஊரின் மற்றொரு பெயர்?
   a) மதுரை
   b) சீர்காழி
   c) திருச்சி
   d) காஞ்சி

8. “பெருமாள் திருமொழி” இயற்றியவர் யார்?
   a) நம்மாழ்வார்
   b) ஆண்டாள்
   c) குலசேகர ஆழ்வார்
   d) திருமங்கை ஆழ்வார்
9. குலசேகர ஆழ்வார் திருவேங்கடத்தில் எதுவாகப் பிறக்க விரும்பினார்?
   a) மரம்
   b) குருகு
   c) மன்னன்
   d) கவிஞன்
10. “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்ற கருத்து எந்த அதிகாரத்தில் இடம்பெறுகிறது?
   a) கல்வி
   b) கேள்வி
   c) அறிவுடைமை
   d) கல்லாமை

# Tamil- III

## Assignments

1. திருக்குறளின் சிறப்புகளை விளக்குக.
2. “அன்புடைமை” அதிகாரத்தில் கூறப்படும் மனிதநேய சிந்தனைகளை எழுதுக.
3. “கல்வி” அதிகாரத்தில் கல்வியின் அவசியத்தை எடுத்துரைக்குக.
4. “கல்லாமை” அதிகாரம் சமூகத்திற்கு தரும் எச்சரிக்கைகளை விவரிக்குக.
5. “கேள்வி” அதிகாரத்தில் செவிச்செல்வத்தின் முக்கியத்துவம் பற்றி கட்டுரை எழுதுக.
6. “அறிவுடைமை” அதிகாரத்தின் வாழ்க்கைப் பயன்களை விளக்குக.
7. திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றை தொகுத்து எழுதுக.
8. திருக்கழுமலப் பதிகத்தின் பக்தி உணர்வை விளக்குக.
9. குலசேகர ஆழ்வாரின் பக்திச் சிந்தனைகளை விளக்குக.
10. திருவேங்கடத்தில் பிறவியாக வேண்டிய குலசேகர ஆழ்வாரின் விருப்பங்களை விளக்குக.